காவேரி

கர - மார்கழி

THE REGISTRAR
2 - JAN 1952
MADRAS



DECEMBER 1951

8 அணா

வெகுநாள் நீடித்து இருப்பதற்காக

ஏஸிஸி சிமெண்டால் கட்டப்பட்டது

காரோனேஷன் ப்ரிட்ஜ், டார்ஜிலிங்.

★

சிமெண்டுகளின் உபயோகங்களை
யும் அவைகளை எப்படி பூசுவது
என்கிற விஷயங்களைப் பற்றி கா
ன்கிரிட் அஸோஸியேஷன் ஆப்
இந்தியா. 9, மௌண்டு ரோடு,
மதராஸிலிருந்து இலவசமாக
ஆலோசனைகள் கேட்டுத்
தெரிந்து கொள்ளலாம்.

தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTA'S-CMI-30

OFFICE OF THE REGISTRAR OF ...
2 - JAN 1952
MADRAS

மலேரியாவினால்
நான் சாகத்தான்
போகிறேன்
என்று எண்ணினேன்

இறுதியில்
'பாலுட்ரின்'
என்னை மீட்டுவைத்தது

'சென்றதடவை நான் காரியமாக ஊருக்குப் போனபோது மலேரியா என்னை முடித்துவிடப் பார்த்தது. நாள் கணக்கில் அடித்த ஜூரம்தான் எத்தனைக் கஷ்டத்தைக் கொடுத்து விட்டது! குணமாகும் என்கிற நம்பிக்கையையே இழந்து விட்டேன். கடைசியில், ஒரு நண்பரின் யோசனையின் பேரில் தினம் ஒரு மாத்திரை வீதம் நான் 'பாலுட்ரின்' சாப்பிட ஆரம்பித்தேன். மூன்றே நாட்களில் ஜூரம் பறந்தோடி விட்டது. நான் முற்றிலும் புதிய மனிதனாகவே மாறி விட்டதாகக் கருதலானேன். அதுமுதலாக நான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை உட்கொண்டு வருகிறேன். மலேரியாவும் என் ஜோலிக்கு வருவதில்லை.

ICI

பாலுட்ரின்*
டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அணுவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 138 TM

விற்பனை

CHEVROLET

செவர்லெட்

பழைய பஸ்கள்

சரசமான விலை

1943, 1944 & 1945 மாடல்கள்

ஸதர்ன் ரோட்வேஸ் லிமிடெட்,
மதுரை.

TVSZ-28TM



இனாம்! *இனாம்!!* *இனாம்!!!*

எமது நெ. **501** கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும் சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. **1—15—0**; **3** புட்டிகள் (பூரா முறை) ரூ. **5—0—0.**

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c. k.)

JULLUNDUR CITY.

நவயௌவனமளித்து

ஆனந்தமயமான

ஆரோக்கியவாழ்க்கைக்கு

பண்டிட்

D.கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ரத்தத்தை சுத்திகரித்து தசைகளை புஷ்டியாக்கி நரம்புகளுக்கு வலுவூட்டி இளமை முக வசீகர ஜ்வலிப்புடன் இல்வாழ்க்கையின் இன்பம் பெற ஜீவ சக்தியை அதிகரிக்கும் நம்பிக்கையான டானிக்

ஜீவாம்ருதம்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்

மதராஸ் 17.



4 கதவுகள்

இந்த புதிய மைனரை அறிவிப்பதற்கு முன்பு, மாரிஸ் கம்பெனி பத்து லட்சத்துக்கு அதிகமான சிக்கனமான கார்களை தயாரித்திருக்கிறார்கள். இந்த பெரிய எண்ணிக்கை தயாரிப்பினால் உண்டான அனுபவம், இந்த நுட்பமான என்ஜினீரிங் சாதனையில் நல்ல முறையில் பிரகாசிக்கிறது.

சிறியதாக இருந்தபோதிலும் சக்கர வட்டத்துள் உட்கார வசதியான இடம். முன் சக்கரங்கள் தனித்து பொருத்தப்பட்டிருப்பது பாடியும் சாஸிஸும் ஒருங்கே பொருத்தி அமையப் பெற்றது, முழுவதும் எஃகினால் செய்யப்பட்டவை, பெட்ரோல் சிக்கனம் போன்ற பல பெரிய கார்களின் சௌகரியங்களை உடையதாயிருக்கிறது.

மாரிஸ் மைனரில்

குடும்பத்திற்கு போதுமான இடம் உள்ளது

MORRIS *minor*

தன்மையில் முதன்மையான கார்

ரூ. 8750-/
தொழி்சாலை விலை

அடிஸன் & கோ, லிட்., மதராஸ், பெங்களூர் கோயம்புத்தூர் & வில்லிங்டன்.

விற்பனையும், சர்வீஸும் செய்யும் எங்கள் ஜில்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ADZ·34

டாடா அக்ரிகோ

கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன

நம் நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவரும் அக்ரிகோ கருவிகளையே பெரும்பாலும் விரும்புகின்றனர். ஏனெனில் அவை மிகவும் உறுதியானவை. நீடித்துழைக்கக்கூடியவை. கையாளுவதற்கு சுலபமானவை. வெற்றிகரமான உழவுக்கு இன்றியமையாதவை.

எல்லாவித உழவு வேலைகளுக்கும் ஏற்ற அக்ரிகோ கருவிகள் இருக்கின்றன.



மண்வெட்டிகள்:

பிரபலமான ஸ்வான்-நெக் டிஸைன் உள்பட மூன்று திணுசுகளில் கிடைக்கிறது. கூராக வெட்டும் முனைகள் வேலையை திறமையுடன் செய்து முடிக்க உதவுகின்றன. சீரான அமைப்பு வாய்ந்திருப்பதால் வேலை செய்ய இலகுவாக இருக்கிறது.

பாரைகள்:

விதவிதமான வேலைகள் புரிவதற்காக ஐந்து வித டிஸைன்களில் கிடைக்கின்றன. இதர எல்லா அக்ரிகோ கருவிகளைப் போல், உஷ்ண மளிக்கப் பட்ட ஹை கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டது.

கோடாரிகள், செம்மட்டிகள்:

வெவ்வேறு வேலைகளுக்காக நான்கு விதமான அடிப்படையான திணுசுகளில் கிடைக்கும். கூராக வெட்டும் முனைகள் மழுங்காமலிருப்பதற்காக விசேஷமாக உறுதியாக்கப்பட்டவை. மிகவும் உறுதி வாய்ந்தவை. நீடித்து உழைக்கக் கூடியவை.

டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்,

ஸேல்ஸ் ஆபீஸ்: 23B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
பிரான்சுகள்: பம்பாய், மதருஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், ஸெகந்திராபாத், விஜயநகரம் கன்டோன்மென்ட், ஜலந்தர் கன்டோன்மென்ட்.

காவேரி

பொருளடக்கம்

கர மலர் 11 | மார்கழி இதழ் 5

காங்கிரஸ் வெற்றி 9

விச்சுளி காமினி 10
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

கூற்றுவனின் கலங்கள் 15
நா. கி, நாகராஜன்

டில்லித் தபால் 18
கே. ஸ்ரீநிவாஸன்

நேபாள யாத்திரை 25
கே. ஸ்ரீ.

எஜமானி 34
தி. சேஷாத்திரி

பலி ஆடு 41
கோமதி சுப்ரமணியம்

எது இன்பம்—?(தொடர் கதை) 47
வே. ரங்கராஜன்

குரு யார் 58
ரா. ஸ்ரீ. தேசிகன்

எதிர்பார்த்தல் 65
D. ராஜன்

ஸ்ரீ ஸ்துதி 71
ஏ. கே. ராகவாச்சாரியார்

விஞ்ஞானமும் முன்னோர் வழக்கங்களும் 75
கே. ஆர். ராமஸாமி

எனது மலாய்நாட்டுப் பிரயாணம் 77
ரங்க ராமானுஜ அய்யங்கார்

குறிப்பு: 'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள், அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



197329

அவளுக்கு தெரியும்

வெகு சூடிகை அவள். மாலை சோர்வுடன் வீடு திரும்பும் கணவனை புது மனிதனுக்கும் மந்திரம் அவளுக்கு தெரியாததா! அவர் சட்டையை கழற்றுவதற்குள் அவள் ஒரு டம்பிளர் 'டீ' போட்டுக் கொண்டு வந்து விடுகிறாள்.

'இந்தாருங்கள்! முதலில் 'டீ'யைக் குடியுங்கள். ஆறி விடப் போகிறது' என்று அன்புடன் அதிகாரமல்லவா செய்கிறாள் அவள்!

அவருக்கு பிடித்தமாக இருக்க 'டீ'யில் இன்ன அளவு சர்க்கரை பால் சேர்க்க வேண்டும், இன்ன சூட்டில் 'டீ' இருக்க வேண்டும் என்பதை அவளைப் போல் ஒவ்வொரு நல்ல மனைவியும் அறிவாள்.

[ஒரே நொடியில், அதிக சிரமமில்லாது தயாரிக்கக்கூடிய சிக்கனமான பானம் 'டீ' தான் என்பதை சொல்லவும் வேண்டுமா!]

மந்திர சக்தியுள்ள
'டீ'யைக் குடியுங்கள்.

ஸென்ட்ரல் டி போர்டாரால் வெளியிடப்பட்டது. C.T.B. 67

காவேரி

கர ஹூ மலர் 11	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	மார்கழி இதழ் 5

காங்கிரஸ் வெற்றி

வெற்றி மாலை சூடிய பண்டித ஜவாஹர்லால் நமது அட்டைப்படத்தை அலங்கரிக்கிறார். வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று, பண்டித நேரு பதவி ஏற்பது திண்ணம். சில சமஸ்தானங்களில் காங்கிரஸுக்குவெற்றி, வாலைப் பிடிக்கலாம். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். பழைய சட்ட சபைகளில்போல் இல்லாது காங்கிரஸுக்கு எதிர்ப்பு மிகவும் பலமாக இருக்கும். இது வரவேற்கத் தக்கதே. ஜனநாயகம் வெற்றியுடன் இயங்கவேண்டுமானால் பலத்த நியாயமான எதிர்ப்பு அவசியம். மக்களுக்கு இது நன்மையையே பயக்கும்.

பண்டித நேருவின் தேர்தல் பிரசாரங்கள் காங்கிரஸுக்கு வெற்றி உண்டு பண்ணும் என்பது திண்ணம். காங்கிரஸின்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளதென்னவோ உண்மை. ஆயினும் பழைய பாசம் விடவில்லை. வேண்டா வெறுப்பாக, வேறு நியாயமான கக்ஷியின்மையால் காங்கிரஸுக்கு ஓட்டுச் செய்ய வேண்டுமே என்று தயங்கித் தயங்கி மக்கள் தம் வாக்குகளைப் போடுவார்கள்.

காங்கிரஸை எதிர்க்கும் கக்ஷிகளிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை யில்லை. காங்கிரஸிடம் மக்களுக்கு உள்ள வெறுப்புணர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பல சுயேச்சை வாதிகள் கிளம்பியுள்ளார்கள். இவர்களிடத்திலும் மக்களுக்கு நம்பிக்கை யில்லை. எனவேதான் குழப்பம்.

தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி தீவிர திட்டத்தில் இயங்கும். பண்டித நேரு முன்போல் வழவழா வென்றில்லாமல் அடித்துப்பேசிக் காரியத்தைச் சாதிப்பார். ஆயினும் காங்கிரஸில் தலைவர்கள் அருமையாய் விட்டார்கள். பண்டித நேருவுக்குத் தகுந்த புத்திமதி கூறவோ, அவர் வேகத்தை குறைக்கவோ நாட்டில் வேற்று ஆள் இல்லை.

காங்கிரஸ் எலெக்ஷன் திட்டம் என்ன என்று மக்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. இன்னும் பண்டித நேருவுக்கு ஓட் என்றுதான் பேசுகிறார்கள். காங்கிரஸ் தரப்பில் செய்யப்படும் பிரசாரமும் நேருவைக் காட்டியே நடத்தப்பட்டு வருகிறது.

நாட்டிலுள்ள திறமைசாலிகளைக் காங்கிரஸ் சர்க்கார் பயன்படுத்திக்கொண்டு, ஆட்சி புரிந்தாலன்றி மக்களுக்குச் சுபிக்ஷம் உண்டாகாது. கொள்கைகளை அமுலுக்குக் கொண்டு வருவதில்தான் போதிய சாமர்த்தியம் தேவை. அரசியலில் லக்ஷியத்தை ஒரேயடியாகச் சாதிக்க முடியாது. கொஞ்சம் தளர்த்தித்தான் ஆகவேண்டும். எந்த லக்ஷியமும் மக்களை அனுசரித்துத்தான் அமைய வேண்டும். ஓர் லக்ஷியம் உன்னதமானது என்றதினால் அதை உடனே புகுத்திவிட முடியாது. மக்கள் அதை எவ்வளவுதூரம் வரவேற்பார்கள்; அது எத்தகைய மாறுதல்களை உண்டாக்கும் என்பதை எல்லாம் பார்த்துத்தான் அமுல்செய்ய வேண்டும்; இல்லையேல் வீழ்ச்சி நிச்சயம்.

எனவே பண்டித நேரு வெற்றி அடைந்தவுடன் ஒரேயடியாகத் தாவாமல் அமைதியாகவும் சாவதானமாகவும் காரியங்களைச் செய்வது நாட்டிற்கும் காங்கிரஸுக்கும் நலனைச் செய்யும். அப்படி யில்லாது இப்பொழுது வாய்ச் சொல்லில் வரம்பின்றிப் பிரசாரம் செய்து வருவதுபோல் செயலாற்ற ஆரம்பித்தால் காங்கிரஸ் தேர் சரிவது இயல்பே. நிதானமாகச் சென்றால்தான் வரப்போகும் வெற்றியின் பலனைக் காங்கிரஸ் அடைய முடியும்.

விச்சுளி காமினி

எம். எஸ் சுப்பிரமணிய அய்யர்

நாலு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைஞானம் என்பர். அக்கலைகளில் ஒன்று களவு, அரசன் அமைச்சன், காவலாளன், தூதுவன் முதலியோர் களவு நூல் கற்றிருத்தல் வேண்டும். ஏன் ? களவைக் கண்டுபிடிக்க வேண்டுமல்லவா ? 'களவுங் கற்றுமற' என்பது ஒரு வசனம்.

அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று கழைக் கூத்து. அறுபத்து நான்கடிக் கம்பம் நாட்டி, அதன்மீது ஏறி யமர்ந்த வண்ணம், அரிய பெரிய வித்தைகள் காட்டுதலே கழைக் கூத்தாம். கழைக் கூத்தாடுவோர் சுவாச பந்தனத்தில் சாலச் சிறந்திருப்பர். சுவாசபந்தன மின்றேல், அக்கம்பமேறி ஆடமுடியாது.

முற்காலத்து வள்ளல்களும் வேந்தர்களும் அக் கழைக் கூத்தை விரும்பிப் பெரிதும் ஆதரித்து வந்தனர். சபையிலே அக்கூத்தருக்கும் கூத்தியருக்கும் சிறப்பும் மதிப்பும் மிக உண்டு. சர்வ மானியங்களும் கிட்டும். கழைக் கூத்தில் பெண்பாலாரும் சிறந்து விளங்குதல் உண்டு. இப்போதும் "ஸர்க்கஸ்"களில் பார்க்கலாம்.

சென்னைமாநகருக்கு இப்போது குடிநீருக்கு ஆதாரம் புழலேரி என்பதாம். வான் வறண்டு விட்டதனால், நகரிலே குடிநீருக்கும் "ரேஷன்" உள்ளது! சுவாசிக்கும் காற்றுக்குத்தான் இன்னும் "ரேஷன்" வரவில்லை. புண்ணியம் கொஞ்சம் பாக்கியிருக்கிறதுபோலும்!

புழல் ஏரியை அடுத்துள்ள பிரதேசம் புழற் கோட்டம் எனப்படும். சென்னை, ஞாயிறு, அம்பத்தூர், ஆவடி, ஆற்றூர், எழும்பூர் முதலிய பல ஊர்கள் கொண்டதே புழற்கோட்டமாம். அக் கோட்டத்தின் தலைவன் அயன்றைச்சடையன் எனப்படுவான். பல நூற்றாண்டுகளுக்கு முன்னமிருந்த வேளாள வள்ளல் அவன்.

சடையப்ப வள்ளலைப்போல் அவனும் பெருங் கொடையாளி. ஆதலின் அவனை அயன்றைச் சடையன் என்றனர். அன்றியும் சடைமுடியண்ணலிடம் அவன் பெரும் பக்தி பூண்டவன்; அவரது அருளாலும் உதித்தவன். ஆதலினாலும் சடையன் என்னப்பட்டான். அயன்றை என்பது அயனம்பாக்கம் எனப்படும். இது ஆவடிக்கு அருகேயுள்ள ஒரு சிற்றூர்.

மாரி பொய்த்தாலும், வாரிதி வறண்டாலும், அந்த அயன்றைச் சடையனது கொடைமடங் குறையாது. புலிப்பால் கிடக்கட்டும்; சிங்கப் பாலும் குதிரைக் கொம்பும் ஆமை மயிரும் அன்னத்தின் பேடும் வேண்டும் என்று கேட்டாலும் அவன் தட்டாது தருவான் என்று புலவர் புகழ்ந்துளர். அவன் புகழ் பாண்டி நாட்டிலும் எட்டியது.

எட்டவே, பாண்டிய வேந்தனொருவன் அந்த அயன்றைச் சடையனைப் பார்க்க விரும்பினான். அரசனாவோன் வலிதில் சென்று, வேளாண் மகனொருவனைப் பார்த்தல் எங்ஙனம்? ஆதலின் அவ் வேந்தன் தயங்கி நின்றான். அங்நிலையில் அச்சடையனது அபிமானத்துக்கு இலக்கான காமினி என்னும் கழைக்கூத்தி மதுரை மாநகரம் சேர்ந்தனள்.

அவளோ அழகில் சிறந்தவள்; அறிவில் உயர்ந்தவள்; கழைக்கூத்தில் தலையாயவள். அத்துடன் நல் இளமங்கை. ஆதலின் அவளைத் தனது சபைக்கு வரவழைத்தான் அவ்வேந்தன். அவளது ஆடலைக்காண விழைந்தான்; அவளும் வந்தாள் சபைக்கு. அரசனை உற்று நோக்கினாள்.

கழைக்கூத்தைக் காண அவா மிகுதி, என்றான் அவ்வரசன். அவளோ வாய்பேசாது மயங்கி நின்றாள். தக்க பரிசில் கிட்டாதென்ற தயக்கமோ? என்று அவன் இறுமாந்து வினவினான். சடையனது பரிசிலைப் பெற்றோர் வேறெவரிடமும் பரிசில் பெற விரும்பார், என்று பதில் கொடுத்தாள் அக் காமினி.

பின்பு தயக்கமேன்? என்றான் அத்தார்வேந்தன். சொற்கொண்ட பாவின் சுவையறிவார் இங் கிலையே என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் கூறியதை நினைவுகொண்டேன், என்று நவின்றாள் அந் நங்கை. "அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கண்டு களித்த மாநகரம் இது! அதன் வேந்தன் யான்!" என்று அந்நரபதி செருக்குடன் பேசினன். நல்லது என்றாள் அந்நங்கை நல்லாள்.

பல சொல்லி என்ன? அரண்மனையின் நிலா முற்றத்திலே அறுபத்து நான்கடிக் கம்பம் நாட்டப்பெற்றது. ஆடலுக்கு உரிய ஒட்டுச் சல்லடமும் உடையுங் கொண்டாள் அக்காரிகை. துணை வரும் உடனிருந்து உதவ ஆயத்தமாயினர். உடனே அவள் அக்கம்பத்தின்மீது வெகு இலகுவில் ஏறினாள்; அதன் உச்சிமீது நின்றுகொண்டாள்.

பின்பு அக்காமினி தனது குல தெய்வத்தை வணங்கினாள்; தாதாவான சடையனையும் துதித்தாள். ஆடவும் யத்தனித்தாள். கம்பத்தின் உச்சியிலே ஒரு காலை ஊன்றிய வண்ணம், சக்கர வட்டமாகச் சுழன்றாள்; சுழலுகையிலேயே காலை மாற்றி ஊன்றிக்கொண்டு ஆடினாள். அது கண்டதும், கரணம் தப்பினால் மரணம் என்பது மெய்யே என்று பலரும் பேசி நின்றனர்.

சக்கர வட்ட ஆட்டம் ஆனதும், தனது காலிரண்டையும் கம்பின் உச்சியில் மாட்டிச் சிரத்தைக் கீழே சாய்த்த வண்ணம், சறுக்கு மரத்தில், வழுக்கி விழுவதுபோல், கணப்பொழுதில் கம்பத்தின் அடிப்பக்கம் சேர்ந்தாள். அவ்வளவில், தலைகீழாகத் தொங்கத் தனது காலின் வலியும் சுவாசபந்தன சாதனையுங்கொண்டு, தொத்தித் தொத்தி அதன் உச்சி சேர்ந்து, பாதங்களின் கட்டை விரலும் அடுத்த விரலும் மட்டுமே கம்பத்தைப் பற்றியிருக்கக் கையிரண்டையும் விரித்து, ஆகாயத்திலே குறுக்காகப் படுத்த பான்மையில் சபையோருக்கு வணக்கஞ் செலுத்தினாள்.

பார்த்தோர் அனைவரும் பிரமித்தனர்; பேதுற்றனர்; மங்கை நல்லாளின் சுவாசபந்தனமும் தேர்ச்சியுங்கண்டு கண்ணிமை கொட்டாமல், கல்போல் அசைவற்று இருந்தனர். அரசனும் அவன் பக்கத்தேயிருந்த காமக்கிழத்தியும் ஆ ஆ என்றனர். அரசனோ அக்கூத்தியின் மேனி, சாயல், உடல் அமைப்பு இவற்றையும் நோக்கி நோக்கி மகிழ்ந்தனன்.

அது அறிந்தாள் அக்காமக்கிழத்தி; அரசனது இச்சை அக்கூத்தி மீது பாய்வதைக்கண்டு நெஞ்சங் கவன்றாள்; தனது நோக்கினாலும் புன்னகையினாலும் அவனது மனத்தை ஈர்த்தாள்! அரசனும் அவ்வலையில் பட்டுக்கிடந்தான். அது சமயம் விச்சுளிப் பாய்ச்சல் என்னும் வித்தை காட்டினாள் அக்கூத்த மடமாது.

விச்சுளி என்றால் மீன் கொத்திப் பறவை என்பதே பொருளாம். அப்பறவை ஆகாயத்தில் தனது சிறகுகளை அடித்துக்கொண்டு ஓரிடத்திலேயே நிலைத்திருக்கும். கீழே நீர்நிலையில் மீனொன்றைக் கண்டதும், திடீரென்று கீழே பாயும். பாயும் வேகமோ பிரமாதமாக இருக்கும். தலை குப்புறக் கீழே விழுந்துதவிக்கும் என்றே நாம் நினைக்க நேரும். ஆயினும் அப்புன் பறவையோ கீழே நீர்நிலையில் தனது மூக்கை மட்டும் இட்டு, அங்குள்ள மீனைக் கொத்திக்கொண்டு, கண்ணிமைப் பொழுதினுக்குள், ஆகாயத்தே சேர்ந்துவிடும். கூர்ந்து நோக்கின் அதன் திறமைகண்டு நாம் மிகவும் வியக்க நேரும்.

விச்சுளிப் பாய்ச்சல் என்றால், அறுபத்து நான் கடிக் கம்பத்தின் உச்சியில் இருந்த வண்ணம் அக் கூத்தி தனது இரத்தின மூக்குத்தியைக் கழற்றிக் கீழே நழுவவிட்டு, அது கீழே விழு முன்னம் விரைந்து பாய்ந்து கையினால் தொடாமலேயே மூக்கில் கோத்துக்கொண்டு, அந்தரத்தில் இருந்த படியே மேலே பாய்ந்து கிளம்பிக் கம்பத்தின் உச்சியில் அமர்ந்துகொள்வதாம்.

அது நடக்கும் காரியமா? கட்டுக் கதையாக இருக்கிறதே, என்று சிலர் நினைக்கலாம். பிரம வித்தையை அறிந்தனர் நம் முன்னோர்; கூடுவிட்டுக் கூடும் பாய்ந்தனர்; இந்திர ஜாலங்கள் செய்தனர்; சுவாசத்தை யடக்கி எத்தனையோ ஆற்றல் காட்டினர். தின்ற சோற்றை நன்கு ஜீரணம் செய்ய முடியாதார்தான் அது நடக்கும் காரியமா என்பர்.

காமினி அவ்விச்சுளிப் பாய்ச்சல் பாய்ந்ததைக் கண்டு, சபையோ ரனைவரும் ஆனந்த ஆரவாரம் செய்தனர். அருகே யிருந்த காமக் கிழத்தியின்



மீது கண் செலுத்தியிருந்த அக்காவலனோ அந்த அருமைக் காட்சியைக் கண்டானில்லை. சபையின் ஆனந்த ஆரவாரங்கண்டு, அவ்வித்தையில் அற்புதம் இருக்கவேண்டும் என்று கொண்டு, மீண்டும் அதனைச் செய்து காட்டுமாறு காமினியை அக் கொற்றவன் வேண்டிக்கொண்டான்.

காமினியோ முடியாது என்றாள். ஏன் என்றான் அவன். ஆறுமாத காலம் சுவாசபந்தனம் செய்து பயிற்சிகொண்டால்தான், மீண்டும் அதனைச் செய்து காட்ட இயலும் என்றாள் இவள். இப்போதும் குஸ்திப் பந்தயத்திலே, பயில்வான்கள் என்போர் மூன்று அல்லது நான்கு மாதகாலம் "தயார்" செய்துகொள்வதுண்டு. காலையிலும் மாலையிலும் புஷ்டியான உணவுகொண்டு, குஸ்தி வரிசையில் பழகிப் பழகித் தேர்ச்சிகொள்ளுதல் வழக்கம்.

எனவே விச்சுளிப் பாய்ச்சல் என்பது எளிதன்று. ஆறுமாத காலம் "தயார்" இல்லாமல் இயலாது என்று காமினி கூறியதும், அக்காவலன் ஏளனமாக நகைத்தான். "பெண்ணே! உனது மாதா பிதாவும் குருவுமான அச்சடையன் யார் எதை வேண்டினாலும் ஈவானாமே? அவனது அபிமானக் கூத்தியாகிய நீ உனக்குத் தெரிந்த வித்தையை மறுமுறை காட்டத் தயங்குகின்றாய். உனது செயல்கொண்டு, உனது தலைவனது வள்ளன்மையை மதித்தறியலாம்" என்று இலேசாகப் பேசினான்.

அது கேட்டதும் காமினி கண் சிவந்தாள். "அரசே! உனது தன்மையை உணர்ந்தே உன்னிடம் ஆடல் காட்ட முன்னதாகவே தயங்கினேன். காமக்கிழத்தியை அருகே அமர்த்திக்கொண்டு இச்சபையில் வீற்றிருக்கும் நீயும் ஒரு காவலனோ? எனது தலைவனை நீ பழித்தாய். எனவே எனக்கு இந்த உயிர் எம்மாத்திரம்! மீண்டும் விச்சுளிப் பாய்ச்சல் செய்து காட்டுவேன். காமக்கிழத்தியின் மீது கண்ணோடாது அவ்வித்தையைக் கண்டு களி. நான் செத்து வீழ்வதைக் கண்டும் சிந்தை மகிழ்வாயாக" என்று கூறினாள்.

கூறியதும், அக்காமினி வெய்துயிர்த்து, அந் நெடிய கழையின் நுனியில் நிமிர்ந்து நின்று, சாகும் தருணம் வாய்த்ததே என்று சிந்தை நொந்து, ஆகாயத்தை நோக்கினாள்; புள்ளினங்கள் பறந்து செல்லுவதைக் கண்டாள்; அவற்றை நோக்கி, அயன்றைச் சடையனுக்கு உரையுங்கள் என்று இவ்வாறு பாடலானாள்.

மா குன்றனைய பொன்
தோளான்!
வழுதிமன்! வான்
கரும்பின்

பாகு என்ற சொல்லியைப்
பார்த்து
என்னைப் பார்த்திலன்;
பையப்பையப்
போகின்ற புள்ளினங்காள்!
புழற்கோட்டம்
புகுவதுண்டேல்
சாகின்றனன் என்று
சொல்லீர்
அயன்றைச்
சடையனுக்கே!

அப்பாட்டின் கருத்து:- பறவைக் கூட்டங்களே! பாண்டியனது காமக் கிழத்தி என்மீது பொறாமை பூண்டு, அவனது கருத்தை மயக்கி, எனது அரிய வித்தையைப் பாராதிருக்கச் செய்தனள். அவன் பாராது போகவே மீண்டும் அதனை விதியின்றிச் செய்துகாட்டிச் சாகின்றேன். நீங்கள் தொண்டை மண்டலத்துள்ள புழற்கோட்டம் போவீரானால் எனது சடையநாதப் பிரபுவைக்கண்டு இச் செய்தியை உரைப்பீராக.

அங்ஙனம் காமினி பாடியதும், கம்பத்தின் உச்சி மீதிருந்து இரத்தின மூக்குத்தியைக் கழற்றிக் கீழே வீசினாள்; அது பூமியில் படுமுன், கீழே பாய்ந்து, கைகளின் உதவியின்றி அம்மூக்கணியைச் செருகிக் கொண்டாள். மேலே கிளம்பிப் பாய்ந்தாள்; சேர்ந்ததும் அந்த உச்சியிலேயே செத்துத் தொங்கினாள்.

பாகு ஒன்று சொல்லியைப்
பார்த்தமையால்
அன்று பாண்டியன் முன்
நோகின்ற சிற்றிடை வேழம்
பக்கூத்தி
கொடிவரையில்
சாகின்றபோது தமிழ்ச் சேர்
அயன்றைச்
சடையன் தன்மேல்,
மாகுன்றெனச் சொன்ன பா
மாலையும்
தொண்டை மண்டலமே!

என்று படிக்காசுப் புலவரவர்கள் தாம் பாடிய தொண்டைமண்டல சதகம் என்னும் நூலில் குறித்திருக்கிறார். இலக்கிய வழக்கிலுள்ள நிகழ்ச்சி அது. அத்தகைய அரிய வித்தை முற்காலத்தே பயிலப் பட்டு வந்தது. பலராலும்



போற்றப்பட்டும் விளங்கிற்று. இந்நாளிலே கலையறிவு என்பதெல்லாம் மலையேறிவிட்டது. மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். சுவாசபந்தன சாதகமான நமது யோகப்பயிற்சியை மேனாட்டார் இன்றும் விரும்பி வியந்து போற்றுவர்.

இனி, காமினி என்பாள் அக்கழையின் உச்சியிலே செத்துத் தொங்கியதைக் கண்டதும், சபையோர் விழிநீர்பெருக்கி விம்மியழுதனர். பாண்டியவேந்தனோ, "நானோ அரசன்! கலையின் அருமையை அறியாது போயினேனே. அவ்வள்ளலை ஏளனமாக உரைத்தேனே! இப்பாவம் என் குலத்தைச் சூழுமே. என் செய்வேன்" என்று கூறியவண்ணம் தனது ஆசனத்தின்மீது சாய்ந்து ஆவி விடுத்தான்.

"அன்று ஆராயாமல் தீர்ப்பளித்துக் கோவலன் உயிர்வாங்கிய பாண்டியன், கண்ணகியின் சொல் கேட்டு மாண்டு மடிந்தான்; இன்றோ காமினியின் உரையை உணராமல், மற்றொரு பாண்டியன் மரித்து வீழ்ந்தான், கடிநகரை எரிபற்றுக என்று அக்கற்பரசி கூறினாள்; நகரம் சாம்பலாயது, இக்கலையரசியோ கருணைகூர்ந்து சாபமிடாது போயினள். நகரம் தீக்கிரையாகாமல் தப்பியது" என்று சபையோரனைவரும் மீனாட்சிசுந்தரேசுவரரை வாழ்த்தி வணங்கினர்.

பின்னர் அக்கலையரசியின் உடலையும், கொற்றவனது சடலத்தையும் எடுத்துச் சென்று, உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்தனர். அயன்றைச் சடையநாதன் அக்காமினியின் முடிவு கேட்டு, "அந்தோ! அக்கலையரசிக்குப்பின், விச்சுளிப் பாய்ச்சல் என்னும் வித்தையும் செத்துப் போமே!" என்று கண்ணீர் பெருக்கினான்.

அச்சடையனோ வருந்தி வந்தவரெவர்க்கும் விரும்பிய யாவும் உதவும் பெருந்தன்மையாளன்; கலை வல்லார்பால் பேரன்பு பூண்டவன்; தனக்கு வாய்த்த பொருள்வளம் முழுவதையும் இரவலாளர்க்கு மனமுவந்து ஈந்துவந்தவன்! அவனது வள்ளன்மையை வியந்து, மறு புலத்தவரும் மகிழ்ந்து புகழ்ந்துளர். புலவரொருவர் பகர்ந்துள்ள பாமாலை இது:—

இரவலாளரே!
பெருந்திரு உறுக!
அரவு உமிழ் மணியும்
அலைகடல் அமுதும்
சிங்கப் பாலும்
திங்கட் குழவியும்
முதிரை வாலும்
குதிரை மருப்பும்
ஆமை மயிரும்
அன்னத்தின் பேடும்
ஈக என இரப்பினும்
இல்லென அறியான்;
சடையனை
அயன்றைத் தலைவனை
உடையது கேண்மின்
உறுதி ஆராய்ந்தே!

முதிரை என்றால் அவரை, துவரை முதலியன; மருப்பு என்றால் கொம்பு; பேடு என்றால் பெண் அன்னம். அவனது மனப் பான்மையும் மாட்சியும் அப்பாடலினால் புலனாகும். ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி" கும்பகோணம்

கூற்றுவனின் கலங்கள்

நா. கி. நாகராசன்



1. கட்டிட வெடி

சி—சிறகு
தி—திரி
உ—உறை
வெ. ம—வெடி மருந்து

2. கவசத்தைத் தொளைக்கும் குண்டு

சி—சிறகு
தி—திரி
உ—உறை
வெ. ம—வெடி மருந்து
மு—கூரிய முனை

"ஒரு நாடு தான் ஈடுபடும் போரில் வெற்றி பெற ஆள்பலமோ, தொழில் வளமோ பெற்றிருந்தால் மட்டும் போதாது. தற்காலப் போரில் இவ்விரண்டையும்விட விஞ்ஞான முன்னேற்றமே முக்கியமாய் விட்டது" என ஓர் அறிஞர் கூறினார். பகைவனைத் தாக்கிப் பணியவைக்கவும், அவனது படையெடுப்பைச் சமாளிக்கவும் விஞ்ஞான உதவியின்றி முடிவதில்லை. சிறந்த வகையில் கொலைத் தொழில் புரியும் ஒரு படைக்கலத்தைக் கண்டுபிடிப்பதும் அதைத்தொடர்ந்து அக்கலத்தை எதிர்த்துப் போராடும் நூதன சாதனத்தைத் தந்துதவுவதும் ஆக, போர்க் கோலம் பூணும் விஞ்ஞானம் பணி செய்கிறது.

தற்காலப் போர் என்றதும் அன்று கோடிக்கணக்கில் லண்டன் மேலும் பெர்லின் மேலும், இன்று அபாக்கிய நாடான கொரியாவிலும் விழுந்த வெடிகுண்டுகள் நினைவு வரும். 1849 ஆம் ஆண்டில் வெனிஸ் நகரவாசிகள் புதுவகையான ஆபத்து ஒன்றைக் கண்டு குலைநடுங்கிப் போனார்கள். நகரின் அருகே முகாம் போட்டிருந்த ஆஸ்திரியச் சேனை நகருக்குள் வெடிகள் போட ஒரு புது முறையைக் கையாண்டது. சிறு டப்பிகளில் வெடிமருந்தை நிரப்பி, மெதுவாக எரிந்து வெடிக்கும் திரிகளை அமைத்து, அவற்றைப் புகைக் கூண்டுகளில் கட்டிக் காற்றோட்டமாக நகரை நோக்கிவிட்டது. டப்பிகள் நகரின்மேல் பறந்துவந்து வெடித்தன. இவை சேதம் எதையும் விளைவிக்காவிடினும் மக்களைப் பெரிதும் அச்சுறுத்திவிட்டன. இந்த டப்பிகளே வானிலிருந்து வெடிக்கப்பட்ட முதல் வெடிகுண்டுகள். விமானங்கள் தோன்றியபின் வெடிகுண்டுகள் முக்கியமான படைக்கலங்கள் ஆய்விட்டன.

குண்டுகளிற் பலவகையுண்டு. ஆனால் அவை அனைத்தும் இலக்கைத் தகர்த்துச் சேதமாக்கும் ஒரே நோக்கத்தை உடையவை. இது மூன்று வகைகளில் செய்யப்படலாம். குண்டு வெடித்தவுடன் காற்றில் தோன்றும் அதிர்ச்சியினாலோ, நாற்புறமும் சிதறும் சுக்கல்களாலோ தரையின்வழியே செல்லும் அதிர்ச்சியினாலோ நாசம் நேரும். தற்காலக் குண்டுகளில் டி. என். டி. (T.N.T.) என்ற வெடிமருந்து அதிகமாகப் பயனாகிறது. போரின்போது வேறுசில புது வெடிமருந்துகளும் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. குண்டில், இம்மருந்து ஓர் எஃகுக் கலத்தில் திணிக்கப்பட்டிருக்கும். இவை வெடிக்கச்செய்ய, சிறு அதிர்ச்சியினாலும் வெடிக்கத்தக்க வேறொரு ரசாயனப் பொருள் இருக்கும். தக்க சமயத்தில், இதை அதிருமாறுசெய்து மருந்தை வெடிக்கும் அமைப்பு, குண்டின் திரி (Fuse) எனப்படும். குண்டானது குறிப்பிட்டதொரு வேகத்தை அடைந்தவுடனே, தரையில் தாக்கியவுடனே குறிப்பிட்டதொரு காலம் சென்றவுடனே இயங்குமாறு அதன் திரி அமைந்திருக்கும்.

குண்டு வகைகளில் சில ராத்தலிலிருந்து பத்து டன் வரை நிறையுள்ளவை உண்டு. பெரிய கட்டிடங்களையும், தொழிற்சாலைகளையும் தகர்க்கும் குண்டுகள் 'கட்டிட வெடிகள்' (Block busters) எனப்படும். இவை பெருத்த அதிர்ச்சியைத் தோற்றுவித்து நாசம் விளைவிக்கும். இவற்றின் மேலுறை மிக மெல்லியதாக இருக்கும். ஆகையால் இவை மிக வேகமாகக் கீழிறங்கி, வரும் வழியிலேயே வெடிக்காமல் இருக்க, பாரசூட்டுகளில் மெதுவாக இறக்கப்படும். ராணுவ டாங்கிகளின் வலிவான இரும்புக் கவசத்தைத்தொளைத்து உள்ளே சென்று வெடிக்கும் குண்டுகள் மிகக் கனமானவை. இவை தடித்த எஃகினாலான மேலுறையையும், கூரிய முனையையும் உடையவை. இவை கவசத்தைத் தொளைத்து உள்ளே சென்ற பிறகே வெடிக்குமாறு இவற்றில் தாமதமாக இயங்கும் திரிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

வேறொருவகைக் குண்டானது துருப்புக்கள் சேர்ந்துள்ள இடங்களில் வீழ்த்தப்படுவது. இதன் மேலுறையில் ஆழமான தவாளிப்புகள் (Grooves) இருக்கும் ஆகையால் இது வெடித்தவுடன் இதிலிருந்து ஆயிரக்கணக்கான கூரிய சுக்கல்கள் பெருவேகத்துடன் நாற்புறமும் சிதறிச் சேதம் விளைக்கும். இத்தகைய சிறு குண்டுகள் பலவற்றை ஒரு பெரிய டப்பிபோன்ற கலத்தில் அடைத்து அது வெடித்துக் குண்டுகளைச் சிதறிப் பெரிய பரப்பு முழுதும் சேதம் விளையுமாறு செய்யலாம். போரின் போது இத்தகைய கலங்கள் "மாலடாவ் ரொட்டிக் கூடைகள்" என வழங்கின. (மாலடாவ் போரின்போது ரஷ்ய அயல்நாட்டு மந்திரி!)

நீருக்குள்ளும் வெடித்துப் பற்றி எரியும் குண்டுகள் போரில் பயனாயின. இவற்றில் அலுமினியமும், மக்னீஷியமும் நுண்ணிய தாள் வடிவாகக் கலந்திருக்கும். இவை வெடிக்கும் இடங்களில் எல்லாம் எளிதில் அணைக்கமுடியாத தீப்பிடித்துக்கொள்ளும். இவற்றைத்தவிர இருண்ட திரைபோன்ற புகையை விளைவிக்கும் குண்டுகளும், இரவு நேரத்தில் விமானங்கள் தமது இலக்கைக் கண்டுபிடிக்க உதவும் பொருட்டு மிகப் பிரகாசமான ஒளியைத்தரும் குண்டுகளும் உண்டு.

விமானங்களிலிருந்து குண்டு போடும் முறை வழக்கத்திற்கு வந்த புதிதில் விமானங்கள் மிகத் தாழ்ந்துவந்தே குண்டுபோட வேண்டி இருந்தது. ஆனால் இப்போதோ சுமார் 40,000 அடி உயரத்திலிருந்துங்கூட மிகத் திருத்தமாக இலக்கைக் கண்டறிந்து குண்டு வீச முடிகிறது. இவ்வளவு உயரத்திலிருந்து இலக்கை நேரில் காணுவது இயலாத செயல். ஆகையால் இந்தவேலையைச் சிக்கலான அமைப்புள்ள ஒரு கருவி செய்கிறது. இது மிகத் திருத்தமாக உயரத்தை அளவிட்டுக் குறிப்பிட்ட நொடியில் விமானத்தின் வேகம் என்ன, அதிலிருந்து போடப்படும் குண்டுக் கிடையாக எவ்வளவு தூரம் சென்று இலக்கையடையும், காற்றினால் அதன் இயக்கம் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதுபோன்ற விவரங்களை அளந்தறிந்து இதற்கான திருத்தங்களைச் செய்து இலக்கின்மேல் குண்டு விழவேண்டுமானால் அது எப்போது விமானத்திலிருந்து எறியப்பட வேண்டும் என்பதையும் காட்டிவிடுகிறது. இதில் ஜைராஸ்கோப் (Gyroscope) என்ற சுழல் கருவி பயனாகிறது. அண்மையில் வழக்கத்திற்கு வந்திருக்கும் ரேடார் (Radar) என்ற ரேடியோ அலைக்கருவியின் உதவியால் மிக அதிகமான உயரத்திலும் இலக்கை நேரில் காண்பதுபோல் காணலாம்.

'மாதுளம்பழம்' (Grenade) என்ற ஒரு வகை எறிகுண்டு தற்காலப் போர்களில் பெரிதும் வழங்குகிறது. இது அளவிலும், வடிவிலும் இப்பழத்தை ஒத்திருப்பதால்

மேற்கூறியவாறு பெயர் பெற்றது. இது கையாலும், பீரங்கியாலும் எறியப்படும். தரையில் பட்டவுடன் வெடிக்குமாறு இதன் திரி அமைந்திருக்கும்.

கடலில் நீர்மூழ்கிகளுடன் போராடும் போது வேறொருவகைக் குண்டு பயனாகிறது. இது 'ஆழ வெடி' (Depth Charge) எனப்படும். இதன் தோற்றத்திலிருந்து மாலுமிகள் இதைச் சாம்பல் டப்பி (Ash Can) என்பர். இலேசான இந்தக் கலத்தில் வெடி மருந்தைத் திணித்து இதில் ஒரு தனிவகையான திரியை அமைப்பார்கள். ஒரு பொருள் நீருக்குள் மூழ்கி ஆழமாகச் செல்லச் செல்ல அதன்மேல் தொழிற்படும் அழுத்தம் அதிகரிக்கிறது. ஆழ வெடியானது குறிப்பிட்டதோர் ஆழத்தை அடைந்தவுடன் அதன் திரியின் இயக்கத்திற்கு ஏற்ற அழுத்தம் ஏற்பட்டு அது வெடிக்கும். இதனால் நாற்புறமும் சிறிது தூரம் வரை அதிர்ச்சி பரவும். இதனால் நீர்மூழ்கியானது தாக்குண்டு சேதமடைந்துவிடும். நீரில் மறைந்திருந்து கப்பல்களைத் தாக்கும் நீர்மூழ்கிக்கு இதுவே முதன்மையான பகைவனாகும். நீர்மூழ்கி ஓரிடத்தில் உள்ளது என்ற ஐயம் தோன்றினால் இத்தகைய பல வெடிகள் விமானத்திலிருந்தோ, ஒரு நாசகாரிக் கப்பலிலிருந்தோ அதைச்சுற்றிலும்போட்டு அதை மூழ்கடிக்க முயல்வார்கள்.

நிலத்தில் வெடிக்கப்படும் குண்டுகளிலே ஆபத்து நிறைந்தவை சுரங்க வெடிகள் (Mines) என்பவை. சென்ற போரின் போது மட்டும் ஜெர்மானியர் ஐரோப்பிய மண்ணில் பயனாக்கிய சுரங்க வெடிகளின் எண்ணிக்கை ஒரு கோடிக்கும் அதிகம் என்பதிலிருந்தே இவை போரில் எவ்வளவு முக்கியமானவை எனத் தெளிவாகும். தரை மட்டத்திற்குக் கீழே மறைந்திருக்குமாறு புதைத்துவைக்கப்படும் வெடிகள் இவ்வாறு அழைக்கப்படும். இவற்றில் ஒரு வகை வெடிகள் கனமான டாங்கிகளைப்போன்ற வண்டிகள் வந்ததும் வெடிக்குமாறு அமைக்கப்படும். இன்னொருவகை வெடி போர்வீரன் மிதித்ததும் வெடிக்குமாறு மிக நுணுக்கமான திரியையுடையது. ஜெர்மானியரது சுரங்க வெடிகளில் மிக அபாயமான இருவகைகள் இருந்தன. அவற்றுள் முதலாவதை நேசத்துருப்புக்கள் 'குதிக்கும் பெர்டி' (Bouncing Berty) என அழைத்தனர். இதைத் துருப்புக்கள் நெருங்கியதும் இது மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டுச் சுமார் நான்கடி உயரம் எழும்பிக்குதித்து வெடித்து, நாற்புறமும் ஆயிரக்கணக்கான எஃகுக் குண்டுகளைச் சிதறி, அருகிலுள்ளோர் அனைவர்க்கும் நமனாகும். இரண்டாம் வகை வெடி 'பறவைப் பொறி' (Booby Trap) எனப்படும். இது மிகச் சாதுரியமாக மறைக்கப்பட்டு அபாயமற்ற வேறொரு பொருளுடன் மின்சாரத்தினால் இணைக்கப்பட்டிருக்கும். சாதாரணமாகத் தோன்றும் இப்பொருளைத் தற்செயலாக யாராவது தொட்டால் மறைந்திருக்கும் வெடி வெடித்து, அருகிலிருப்போரது உயிரைக் கொள்ளை கொள்ளும். நேசத் துருப்புக்களை ஏமாற்ற ஜெர்மானியர் ஒரு கொடிய தந்திரத்தைக் கையாண்டனர், காயமடைந்து போர்க்களத்தில் கிடக்கும் போர்வீரரது உடலில் ஜெர்மானியர் இந்த வெடிகளை இணைத்துவிடுவார்கள். அவர்களை எடுத்துச் செல்ல அவர்களது தோழர்கள் வந்து உடலைத் தொட்டவுடன் வெடியானது வெடித்து அனைவரையும் மாய்க்கும். நாஜிகள் மனித உயிர்களுக்கு வைத்திருந்த மதிப்புக்கு இது ஒரு சான்று! "மனிதன் மிருகமானால் மிருகத்தினும் கொடியவன் ஆகிறான்" எனக் கவியரசர் டாகூர் கூறியது எவ்வளவு உண்மை! (தொடரும்)

ஸ்தோத்ர ரத்னமாலா-

ஸ்ரீரங்கம் கோடி கன்னிகாதானம் தாதாசாரியார்

பூதேவி ஸ்தோத்ரம், லக்ஷ்மீ ஸ்தோத்ரம், கிருஷ்ண கர்ணாமிருதம், ராம கர்ணாமிருதம், கோபிகா கீதம் மற்றும் அனேக ஸ்தோத்திர பாடங்களுடன் கூடியது.

விலை ரூ. 1—2—0

கிடைக்குமிடம்:—

"காவேரி" கும்பகோணம்.

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

சென்ற வாரக் கடைசியில்தான் நான் பாகிஸ்தானுக்குப் போய் விட்டுத் திரும்பினேன். சில தினங்கள்தான் அங்கே தங்கினேன் என்றாலும் லாகூருக்குப் போவதற்குச் செய்த பிரயத்தினங்களும், அங்கே கிடைத்த அனுபவங்களும் ஐரோப்பா அமெரிக்காவைச் சுற்றி வந்தவர்களுக்குக்கூடக் கிட்டியிருக்காது.

மற்ற நாடுகளுக்குச் செல்வதற்கு நம் நாட்டுச் சர்க்கார் பிரயாண அனுமதிச் சீட்டு (Passport) கொடுக்கிறார்கள். பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே நல்ல உறவு இல்லாதது காரணமாக, இரு நாடுகளும் சுதந்திரம் அடைந்து நான்கு வருஷங்கள் ஆனபோதிலும், இரு நாடுகளுக்கும் இடையே பிரயாணம் செய்பவர்களுக்கு நிரந்தரமான ஏற்பாடுகள் இல்லை.

இங்கிருந்து பாகிஸ்தான் போவதென்றால் முதலில் மாகாண சர்க்கார் போலீஸ் இலாகா "ஆக்ஷேபனை இல்லை" என்ற சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும். அதை வைத்துப் பாகிஸ்தான் ஹை கமிஷனருக்கு மனுப் போடவேண்டும். அவருக்கு, பாகிஸ்தானுக்குச் செல்பவர் அங்கு நடக்கும் விஷயங்களைப் பற்றி இந்தியாவில் எழுதமாட்டார் என்றோ, அல்லது அங்கேயே தங்கமாட்டார் என்றோ நம்பிக்கை ஏற்படவேண்டும். பின்னர்தான் அவர் பெர்மிட் கடிதம் கொடுப்பார். ஒவ்வொரு ஸர்ட்டிபிகேட்டுக்கும் நான்கு போட்டோக்களை மனுச் செய்பவர் கொடுக்கவேண்டும். இந்திய போலீஸ் ஸர்ட்டிபிகேட்டையும் பாகிஸ்தான் சர்க்கார் பெர்மிட்டையும் உயிரைவிட ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டும். இப்பொழுது அமிர்தசரஸ் பக்கத்திலுள்ள வாகா (Wagah) எல்லை மூடப்பட்டுவிட்டதால் பிரயாணிகள் (இயன்றவர்களாயிருந்தாலும் சரி, இல்லாதவர்களாக இருந்தாலும் சரி) ஆகாய மார்க்கம்தான் போகவேண்டும். லாகூரை அடைந்ததும் சுங்கக் கூடத்துக்குச் சென்று பாரங்களை டஜன் கணக்கில் பூர்த்தி செய்யவேண்டும், பாகிஸ்தான் செல்பவர்கள் பாகிஸ்தான் நாணயத்தில் ரூபாய் ஐம்பதும் இந்திய நாணயத்தில் ஐம்பதும்தான் கொண்டு செல்லலாம்,

என்னென்ன புதுச் சாமான்கள் (காமிரா, பேனா, வாட்ச்) கொண்டுபோகிறோமோ அவற்றைப் பற்றி எழுதாவிட்டால் திரும்பி வரும்பொழுது அவை நம்முடையவல்ல.

சுமார் ஒரு மணிக்குமேல் ஆகும், சுங்க கட்டடத்திலிருந்து வெளியே செல்ல. லாகூர் நகரை அடைந்ததும் ஒன்றிரண்டு மணிகளுக்குள் மிகவும் சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நம் வருகையை அறிவிக்கவேண்டும், இல்லாவிட்டால் நம் பாடு ஆபத்துத்தான். இவ்வளவு நேரம் எங்கெங்கே சென்றாய், என்னென்ன செய்தாய்? என்று ஆயிரக்கணக்கான கேள்விகள் பிறக்கும். சாதாரணமாக எந்தப் பதிலையும் போலீஸ் அதிகாரிகள் ஒப்புக்கொள்வதில்லை.

நான் சென்று இரண்டு தினங்களில் சென்ற காரியம் முடிந்துவிட்டது. சாவகாசமாக ஊர்சுற்றிப் பார்த்தேன். லாகூர் அழகான நகர்தான். அழகிய சோலைகளும், நன்கு வளர்ந்து உயர்ந்து வானளாவும் மரங்களும், ரத்ன கம்பளம் போர்த்தியதுபோல் இருக்கும். மைதானங்களும் நம் கண்களைக் கவருகின்றன. மால் (Mall) என்ற நீளமான ராஜபாட்டை சென்னை மௌண்ட் ரோடை ஒத்திருக்கிறது. மால் ஒரு பாதியில் வர்த்தகக் காரியாலயங்களும், அன்னிய நாட்டு வர்த்தகக் காட்சிச் சாலைகளும் நிரம்பியிருக்கிறது. மாலை விட்டால் பிறகு பழைய நகரம் மற்ற வட இந்திய நகரங்களைப்போல், சந்து பொந்துகள் நிரம்பி இருக்கின்றது. ஆனால் மாலுக்கும் நகரத்துக்கும் நடுவே இருக்கும் அனார்கலி என்ற பஜாரைப் பற்றித்தான் இந்தியாவில் இருக்கும் எந்தப் பஞ்சாபியும் புகழ்கிறார்கள் புகழ்கிறார்கள் அப்படிப் புகழ்கிறார்கள். இது அப்படி ஒன்றும் இந்திரலோகமாக இல்லை. சாதாரணமாக, சென்னை பந்தர் தெரு இன்னும் விசாலமாகவும் ஒரு மைல் நீளமாகவும் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். சைனா பஜாரில் போகும் கூட்டம் அதில் செல்வதாகவும் கவனம் செய்யுங்கள், அதுதான் அனார்கலி.

பாகிஸ்தானுக்குப் போகுமுன் இந்தியாவில் உள்ள நண்பர்கள் என்னை மிகவும் ஜாக்

கிரதையாக இருக்கும்படி சொல்லி அனுப்பினார்கள். காரணம் முஸ்லீம்களிடையே ஆழ்ந்து பதிந்துள்ள ஹிந்து எதிர்ப்புவெறிப் பயம்தான். ஆனால் லாகூரில் அப்படிப்பட்ட பயம் ஏதும் காணப்படவில்லை. என் பழைய டில்லி முஸ்லிம் நண்பர்கள் சிலரைச் சந்தித்தேன். அவர்களில் மிகவும் முக்கியஸ்தரான ரியாஸூல் என்பவர் என்னுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அவர் சொன்னார்: "நாங்கள் இங்கு ஒரு உயிரற்ற வாழ்வுதான் வாழ்கிறோம். எங்கள் உயிர் டில்லியில் தான் இருக்கிறது. இங்கு எங்களை யாரும் விரும்பவில்லை; யாவரும் வெறுக்கிறார்கள். இனி இந்தியா செல்ல எங்களை அனுமதிக்க மாட்டார்கள். இருந்தாலும் போகவேண்டும் என்ற அவா மிகவும் இருக்கிறது. இந்தப் பாழாய்ப்போன (பாகிஸ்தான்) சர்க்கார் சதா (இந்தியாவுடன்) சண்டை போட்டு நம்மை நெருங்கவிடேன் என்கிறார்கள்".

உண்மையில் முஸ்லிம்கள் இந்தியாவுடன் நல்லுறவையே விரும்புகிறார்கள்: தவிர, இந்தியாவிலிருந்து சென்ற முஸ்லிம் அகதிகள் மிகவும் அதிகம் இல்லை என்றாலும் அவர்களைத் திரும்பவும் நிலைக்கச் செய்வது பற்றிச் சர்க்கார் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. பாகிஸ்தான் அதிர்ஷ்டம் அங்கு அன்ன ஆகாரத்திற்குக் குறைவில்லாமல் இருக்கிறது. இல்லாவிட்டால் அகதிகளும் சரி, வேலையில்லாதவர்களும் சரி கூச்சல் போட்டே சர்க்காரைக் கவிழ்த்து விடுவார்கள்.

ஆனால் பாகிஸ்தானில் சர்க்காருக்கு எதிர்ப்பே இல்லையா என்றால் இல்லை என்று சொல்ல முடியாது. எதிர்ப்பு இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் பாமர மக்கள் சர்க்காருக்கு எதிராக எதுவும் சொல்லப் பயப்படுகிறார்கள். துப்பறியும் போலீஸ் மிகவும் ஜரூராக வேலை செய்வதால் தனிப்பட்ட நபர் யாரும் எதிர்ப்பாளராக இருந்து தப்ப முடியாது. ஆனைப்பட்ட மியாஸ் இப்திகாருதீன் சாகிபு அவர்களே தம் எதிர்ப்பை ஒருவரைக்குள்ளேயே வைத்துக்கொள்கிறார்.

எனினும், நாம் நான்கு வருஷங்களாக இந்தியா—பாகிஸ்தான் என்ற தனித்தனி நாடாக இருக்கிறோம். இந்த நான்கு வருஷங்களில் சர்க்கார் சாதித்தது என்ன? நாட்டை முன்னேற்றினார்களா? நாட்டைத் தொழிற்சாலை மயமாக்கினார்களா? கேவலம் அரசியல் சாஸனம்கூட உருவாக்கவில்லை இன்னும். அடுத்தாற்போல் இந்தியாவைப்பார். இப்படி சப்தம் எழும் பொழுதெல்லாம்தான் பாகிஸ்தான் சர்க்கார் மருண்டு ஜனங்களைத் திருப்தி செய்ய, காஷ்மீர் பூச்சாண்டியையோ அல்லது வேறு எதையோ அவிழ்த்துவிட்டு, இந்தியாவை வெறுக்கும் காண்டத்திற்கு மற்றுமொரு அத்தியாயத்தைக் கூட்டுகிறார்கள். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில்தான் லியாகத் அலிகான் தம்முடைய முஷ்டி இயக்கத்தை ஆரம்பித்து, ஜனங்களை "சூ பிடி" என்று இநதியாமீது ஏவி விட்டார்.

காஷ்மீர் சம்பந்தப்பட்ட வரை பாகிஸ்தானிகள் என்ன நினைக்கிறார்கள்? இந்தக் கேள்வி மிகவும் முக்கியமானது. இந்தியாவுடன் நல்லுறவை விரும்பும் முஸ்லிம்கள் கூட, "காஷ்மீரா? ஹூம், விட்டோமா இந்தியாவை! தொலைத்து விடுவோம் அந்த லப்பை அப்துல்லாவை" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். இதுதான் லியாகத் அலியின் இறுதிக் கைங்கரியம்.

ஆனால் வேதாளத்தை உருவாக்கியவன் அதற்கே பலியானதுபோல், லியாகத் தம் அதீத பிரசாரத்திற்கே பலியானார் என்பது லாகூரில் இருக்கும் இந்திய வட்டாரக் கருத்து. இந்திய ஸ்தானிகரது பிரதிநிதி ஒருவர் சொன்னார்: லியாகத் அலியின் முஷ்டி இயக்கம் அடுத்தபடியாக, பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே சண்டையைக் கொண்டுவந்திருந்ததால்தான் அந்தவாதிகள் திருப்தியடைந்திருப்பரார்கள். ஆனால் இது நடவாத காரியம் ஆகிவிட்டது. ஆகையால் லியாகத் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும் அல்லது பலியாகியிருக்க வேண்டும். இரண்டாவது சொன்னதுதான் நடந்தது.

லாகூரில் இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ பானர்ஜியும் அவர் மனைவியும் பாகிஸ்தான் போகும் இந்தியனுக்கு எவ்வளவு தைரியம் ஊட்டவேண்டுமோ அவ்வளவும் செய்கிறார்கள். ஸ்ரீ பானர்ஜி என்னைத் தேநீர் அருந்த அழைத்தார். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் சொன்னார்: "லியாகத் அலி இறந்த தினம் நாங்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தோம், கொலைகாரன் யாராவது தனிப்பட்டவனாக இருக்கவேண்டும். ஒரு ரகசிய சதியாகவோ அல்லது ராணுவ எழுச்சியாகவோ இருக்கக்கூடாது என்று பிரார்த்தித்தோம். பெரிய சூழ்ச்சியின் பயனாக லியாகத் இறந்திருந்தால், வெறிகொண்ட ஜனங்களின் தான் தோன்றித் தலைவர்கள் எங்களைச் சுட்டு

எரித்திருப்பார்கள். சர்க்கார் இல்லாமல் போகக்கூடாது, முஸ்லிம் லீக் சர்க்காராக இருந்தால்கூடப் பரவாயில்லை. ஏனென்றால் விஷயம் தெரிந்த சர்க்கார், ஸ்தானீகர்களுக்குப் பாதுகாப்பு முதல் பொறுப்பாகக் கொடுப்பார்கள்''.

வெகுநேரம் இந்திய பாகிஸ்தான் சர்க்கார் உறவுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது நான் குறிப்பிட்டேன்: "பாகிஸ்தானில் காஷ்மீர் என்றால் ஜனங்கள் "இதோ ரத்தம்'' என்கிறார்களே, இந்தியாவில் நாம் (பொதுஜனங்கள்) அல்வாத் துண்டு சாப்பிட்டுவிட்டு "பும் மகாதேவ்'' என்று ஏப்பம் விட்டு நிஷ்கவலையாக இருக்கிறோமே, இது விபரீதமில்லையா'' என்றுகேட்டேன். ஸ்ரீ பானர்ஜி சொன்னார்: 'நீங்கள் சொல்வது ஒரு விஷயத்தில் சரிதான். ஆனால் நேருவும் இதே பாணியில் பதில் நடவடிக்கை நடத்தி ஆவேசப் பிரசங்கங்கள் செய்தால் என்ன ஆகும் தெரியுமா? இங்கிருந்து சென்ற ஹிந்துக்களைக் கட்டுப்பாட்டில் வைக்கமுடியாது. ஆகவே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால்: நம் ராணுவம் நல்ல பலமுள்ளதா? ஆபத்து என்னும் வேளையில் ஜனங்கள் ஒருமுகமாகச் சர்க்காரை ஆதரிப்பார்களா?'' என்று.

ஸ்ரீ பானர்ஜி சொன்னதன் தாத்பர்யம் தென்னிந்தியாவில் புரியாது. ஏனென்றால் தெற்கே அதிர்ஷ்டவசமாக ஹிந்து—முஸ்லீம் பிரச்னை கிடையாது. இங்கு இன்றும் பஞ்சாபி ஹிந்துக்களுக்குப் பாகிஸ்தானில் கூடப்பட்ட புண்கள் ஆறாமல் இருக்கின்றன. கொஞ்சம் தீவிரப் பிரசாரத்திற்கு இடம் கொடுத்தால் போதும்; முஸ்லிம்களை வேட்டு விடத் தயார். ஆகவே, ஸ்ரீ நேருவின் அயல் நாட்டுக்கொள்கை, அதுவும் குறிப்பாக மதப் பற்றற்றகொள்கை எவ்வளவு உயர்வு என்று அறியப் பாகிஸ்தான் அனுபவம் சுட்டிக்காட்டியது.

* * *

"பாகிஸ்தானுக்கு வரும் ஒவ்வொரு இந்தியனையும் ஒரு கொலைக் கூட்டத்தினரையும்விடக் கேவலமாக மதிக்கிறார்கள். இல்லாவிட்டால் ஏன் ஒவ்வொருவர் பின்னாலும் ரகசியப் போலீஸாரை ஏவ வேண்டும்'' என்று பாகிஸ்தான் பிரபல பத்திரிகையான டான் (Dawn) லாகூர் நிருபர் என்னிடம் சொன்னார். பாகிஸ்தானில் இருக்கும் வரை போலீஸார் பின்தொடர்வதுடன் பாகிஸ்தானைவிட்டு வெளியேறுவதற்குமுன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தகவல் கொடுத்தாக வேண்டும். இது செய்யாவிட்டால் பிற்பாடும் நமக்குத் தொந்தரவுதான். நான் முதல்நாள் விமானகூடத்திற்குச் சென்றும் சுங்க அதிகாரிகள் நான் கழுவப்படாத போட்டோ படச்சுருள்கள் வைத்துக்கொண்டிருந்ததால் என்னைப் பிரயாணம் செய்ய அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். மறுநாள் அவைகளைக் கழுவிக்கொண்டு போனதும் பல படங்களை நறுக்கி வைத்துக்கொண்டு விட்டார்கள். பிறகு போலீஸ் முத்திரை பெர்மிட்டில் இல்லை என்பதற்காக மறுபடியும் விமான கூடத்திலிருந்து தலைதெறிக்கப் போலீஸ் ஸ்டேஷனுக்கு டாக்ஸியில் ஓடி, முத்திரையை வைத்துக்கொண்டு வந்தேன். விமானத்தில் உட்கார்ந்ததும் தான் "அப்பாடா தப்பினோம்'' என்ற சாந்தி பிறந்தது.

* * *

போலீஸ் முஸ்தீப்பும் ஜபர்தஸ்தும் பாகிஸ்தானில் மட்டும்தானா என்றால், இல்லை என்று சொல்லவேண்டும். இந்தியாவிலும் பாகிஸ்தானிகள் நடமாட்டத்தைக் கவனம்செய்கிறார்கள். ஆனால் பாகிஸ்தானின் "ஒவ்வொரு இந்தியனும் ஒரு எதிரி, ஒரு உளவாளி'' என்ற மனப்பான்மையுடன் செய்வதில்லை. பாகிஸ்தான் போலீஸ் கேவலம் தற்காப்புக்காக எது செய்தாலும் நியாயம். ஆனால் அவர்கள் தீவிரமும் சிற்சில கேஸ்களில் செய்த அதிக்கிரமும்தான் இந்தியன் யாராயிருந்தாலும் அவனுக்குத் திகிலை உண்டாக்குகிறது. பாகிஸ்தானில் ஒரு மகாத்மா தோன்றி, அவர் தலைமையின்கீழ் ஒரு நல்ல எண்ணம் உள்ள சர்க்கார் அமைந்தால்கூட நிலைமை இந்தியா சம்பந்தப்பட்ட வரை மாறாது. ஏனென்றால் பாகிஸ்தான் போலீஸ் அதிகாரிகளும் மற்றச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் பழைய நாளைய முஸ்லிம் லீக் வகுப்புவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள்,

* * *

முஸ்லிம் லீகைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது சென்னை முஸ்லீம் லீகைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. பண்டித நேரு சென்னையில் கூறினார் அல்லவா? முஸ்லிம் லீக் என்பது பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு ஜாகை மாற்றிக்கொண்டது என்று. எப்படியோ இன்றும் அது இங்கு (சென்னையில்) இருக்கிறது என்று ஆச்சரியப்படுகிறேன். அவருடைய ஏமாற்றம் எப்படி ஏற்பட்டது என்று சொல்லுகிறேன்.

நம் இஸ்மாயில் சாயபு எப்பொழுது பேசினாலும் அறிக்கை விடுத்தாலும் அதை இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தான் பத்திரிகைப் பிரதிநிதிகள் பாகிஸ்தானுக்கு அனுப்புகிறார்கள். அதை மிகவும் குதூகலத்துடன் பாகிஸ்தான் பத்திரிகைகள் பிரசுரிப்பதுடன் தங்கள் ஆனந்தமான அபிப்பிராயங்களையும் தெரிவிக்கின்றன.

நான் பாகிஸ்தானில் இருந்த சமயம் சில பத்திரிகையாளர்களைச் சந்தித்தேன். காஷ்மீர் ''ஜிஹாத்'' (தர்ம யுத்தம்) மனப்பான்மை அவர்களையும் விடவில்லை. சண்டை வந்தால், பாவம் இந்தியாவின்பாடு ஆபத்துத்தான் என்றார் ஒருவர். மற்றவர் சரித்திரத்தைத் தலைகீழாகப் படித்துப் பார்த்து, 'எந்தச் சண்டையிலும் முஸ்லிம்கள்தான் ஜயித்திருக்கிறார்கள். தவிர, சண்டை என்று வந்தால் இந்தியாவில் இருக்கும் எல்லா முஸ்லிம்களும் எங்கள் துருப்புகள்தானே' என்றார். அவர் பின்னே சொன்னது என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ''சும்மாவா சென்னை போன்ற இடங்களில் முஸ்லிம் லீக் இன்னும் வேலை செய்கிறது! எல்லாம் எங்களுக்குத்தான்'' என்றார்.

பாகிஸ்தானுக்கும் தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் ஸ்னானப்பிராப்திகூடக் கிடையாது; இருந்தும் பாகிஸ்தான் ஜனனத்துக்காகத் தென்னிந்திய முஸ்லிம்கள் போட்ட கூச்சல்தான் மிகவும் பலம். பாகிஸ்தான் என்னவோ வந்துவிட்டது. ஆனால் இன்றும் தென்னிந்திய முஸ்லிம்கள் முஸ்லிம் லீகை ஆதரித்தால் கட்டாயம் விபரீதம் விளையுமே அன்றி அவர்களுக்கு நன்மை பயக்காது. பாகிஸ்தானில் நன்றாக உருது (Urdu) பேச வன்மை கொண்ட ஐக்கியமாகாண, டில்லி முஸ்லிம்களைக்கூட அசல் பாகிஸ்தானிகள் என்று சொல்லிக்கொள்ளும் பஞ்சாப் முஸ்லிம்கள் வெறுக்கிறார்கள். அவர்களைத் தீண்டாதாரைப் போல் ஒதுக்கிவைக்கிறார்கள். ஆகையால் இந்திய முஸ்லிம்களுக்கு, குறிப்பாகத் தமிழைத்தவிர வேறு பாஷை தெரியாத தென்னிந்திய முஸ்லிம்களுக்கு, இந்தியாதான் தாயகம். அந்தத் தாய்க்குத் தீங்கு நினையாமல் இருப்பதே அவர்கள் கடமை. அதிர்ஷ்டவசமாக, தென்னிந்தியாவில் ராஷ்ட்ரீய சங்கமோ அல்லது ஜனசங்கமோ இல்லை. அவைகளைக் கட்டுப்படுத்தி ஒழிக்கும் வேலையும் சர்க்காருக்கு இல்லை. அந்தச் சங்கங்களும் இருந்து முஸ்லிம் லீக்கும் பெரும்போக்காகக் காரியங்கள் நடத்த விரும்பினால் நம் மாகாண முஸ்லிம்கள் கதி அதோகதிதான். ஆகவே, இதுவரை பத்திரமாகவும் ஆபத்து இல்லாமலும் இருந்த தென்னாட்டு முஸ்லிம்கள் அவர்களுக்காகப் பாடுபடும் ஜவஹர்லாலை ஆதரிப்பார்களா அல்லது வகுப்புவாதமே பரம தர்மமாகக் கொண்ட குட்டி முஸ்லிம் லீகை ஆதரிப்பார்களா என்பது தெரியவேண்டும். தென்னிந்திய முஸ்லிம்கள் கண்மூடிகள் அல்ல என்றே நம்புகிறேன்.

* *

சென்ற மாதம், டில்லியில் வரப்போகும் தேர்தல்கூட அவ்வளவாக ஜனங்கள் கவனத்தை கவரவில்லை. அவர்கள் கவனத்தைக் கவர்ந்தவர் ஆச்சார்யா வினோபா பாவே. காந்தியடிகளின் ஆத்மார்த்த சிஷ்யரும் காந்தியத்தை நடைமுதலில் கடைப்பிடிக்கும் கர்மயோகியுமான மகா ராஷ்டிரர். வினோபா பாவே ஆந்திராவில் தெலுங்கானாவிற்கு விஜயம் செய்ததுபற்றித் ஜனங்களுக்குத் தெரியும். ஆனால் அவர் சென்ற மூன்று மாதங்களில் 1300 மைல்கள் கால்நடையாக நடந்து, தெலுங்கானாவிலிருந்து மத்திய மாகாணம். ஹிமாசலப் பிரதேசம், மத்திய பாரத யூனியன், உத்தரப் பிரதேசம்மூலம் டில்லியை அடைந்தது வெகு சிலருக்கே தெரியும்.

வினோபா பாவேயின் தற்போதைய சுற்றுப் பிரயாணம் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதற்காக. வினோபாபாவேக்கு நிலப் பிரச்னையே பெரும் பிரச்னை. மற்ற நாடுகளைப்பற்றி தமக்கு ஒன்றும் தெரியாது என்றும் இவர் ருஷ்யாவைப்பற்றியும், சீனாவைப்பற்றியும் நன்கு ஆராய்ந்து இருக்கிறார், புரட்சி எந்தத் தேசத்திலும் இல்லாக் கொடுமையால் ஏற்பட்டிருக்கிறது; நம் தேசத்தில் அதிர்ஷ்டவசமாகப் புரட்சி இன்னும் ஏற்படவில்லை; ஆனால் ஆயிரக்கணக்கான வேலி நிலங்களைத் தம்முடையவை என்றுசொல்லி, நிலத்தில் சேறு எப்படியிருக்கும் என்று தெரியாத சோம்பேறி நிலச் சொந்தக்காரர்கள், நிலம் உழுபவனுக்குச்சொந்தம், உழுபவனுக்குக் குறைந்த விகிதம் இவ்வளவு என்று தாமாகக் கொடுக்க முன் வராதவரை அவர்களே அவர்கள் நாசத்தைத் தேடிக் கொள்கிறார்கள் என்பது வினோபாவின் கக்ஷி.

வினோபா காந்தியடிகளின் ஆத்மார்த்த சிஷ்யர் என்பதை வினோபாவின் பேச்சில் கண்டுகொள்ளலாம். சூரியன், நெருப்பு, பூமி, ஆகாயம், காற்று இவைகளைப் பகவான் எல்லோருக்கும் என்று சமமாகவேதான் சிருஷ்டி செய்திருக்கிறார். இதில் பூமி தவிர, பாக்கியெல்லாம் சமமாகவே அனுபவிக்கப்படுகையில், பூமிக்கு மாத்திரம் நிலச்சுவான்தார்கள் எப்படி விதிவிலக்கு கொண்டாட முடியும் என்று கேட்கிறார் வினோபா.

வினோபாவுடன் நான் இரண்டு நாட்கள் உத்திரபிரதேசத்தில் கூர்ஜாவிலிருந்து புலந்தர்சஹர் வரை பிரயாணம் செய்தேன். வினோபா தினம் ஒன்றுக்கு 14 மைல்கள் வீதம் நடக்கிறார்; காலை மூன்றுக்கு எழுந்திருக்கிறார். நான்கு மணிக்கு அவர் கோஷ்டி நடக்கத் தயாராகிவிடுகிறது. முதல் மணியில் நான்கு மைல் கடந்து விடப்படுகின்றன. பிறகு சராசரி மணிக்கு மூன்று மைல் வீதம் நடக்கிறார்கள். ஆறு மணிக்கு எங்கிருந்தாலும் வினோபா தயிர் ஆகாரம் அருந்துகிறார். கோஷ்டியினரும் ஏதாவது கிடைப்பதைச் சாப்பிடுகிறார்கள். சுமார் எட்டு மணிக்கு அடுத்த முகாம் எதுவோ அந்த ஊரை அடைகிறார்கள், அவருக்கு வரவேற்பு அளிக்கப்படுகையில் ஒருதரம் அவர் தம் பூமிதான யக்ஞத்தைப்பற்றிச் சொல்கிறார். நாள் பூராவும் காங்கிரஸ் ஊழியர்கள், மாணவர்கள், ஜமீந்தார்கள் முதலியவர்களுக்குப் பேட்டி கொடுப்பதில் அவர் நேரம் செலவழிகிறது. மத்தியானம் பன்னிரண்டிலிருந்து ஒரு மணி வரை ஓய்வு. அப்பொழுதுதான் அவர் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவைகளைப் படிக்கிறார்,

வினோபாவுக்கு 20 பாஷைகளில் பாண்டித்யம் உண்டு. என்னுடன் தமிழில் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தார் என்றால் அவருக்குத் தமிழில் எவ்வளவு பரிச்சயம் உண்டு என்பது விளங்கும்.

மூன்று மணிக்குப் பொதுக்கூட்டத்தில் பிரசன்னமாகி விடுகிறார் வினோபா. அரை மணி நூல் நூற்ற பிறகு, மூன்றரை மணிக்கு அவர் பிரசங்கம் ஆரம்பமாகிறது. அவர் பேசும் ஹிந்துஸ்தானி மிகவும் சக்தியும் வேகமும் வாய்ந்ததாக இருப்பதுடன் அவர் கருத்து ஒன்றொன்றும் ஆணித்தரமாக வெளி வருகிறது. காந்திஜியின் சர்வோதய திட்டம்தான் இந்தியா கைப்பிடிக்க வேண்டிய வழி. அதை விட்டால் இந்தியாவுக்குக் கதியில்லை என்கிறார் வினோபா. "ஜனங்களின், முக்கியமாக உண்டானப்பட்டவர்களின் ஹிருதயம் இன்னமும் களங்கமற்றதாகவும் நியாயத்தை அங்கீகரிக்கத் தயாராகவும் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். என்னிடம் என்ன இருக்கிறது? அதிகாரம் இருக்கிறதா, டணம் இருக்கிறதா அல்லது இக்காலத்தில் முக்கியமானதானதாகக் கருதப்படும் செல்வாக்காவது இருக்கிறதா? ஒன்றும் இல்லை. இருந்தும் நான் தைரியமாக நிலம் வைத்திருப்பவர்கள் கொடுங்கள் என்று ஏன் கேட்கிறேன் என்றால் நான் சர்வோதயத்தைத் திண்ணமாக நம்புவதால்தான்.

சர்வோதயத்தை விட்டால் அதற்கு மாற்று சர்வ நாசம்தான். சர்வ நாசத்தை நிலமோ அல்லது பொருளோ படைத்தவர்கள் விரும்புகிறார்களா? என்று சவால் விடுகிறார் வினோபா.

நான் வர்ணிப்பதுபோல வினோபா நிச்சயமாகக் கம்யூனிஸ்ட்தான். ஆனால், நடைமுதலில் பேரும் நாணயமும் இழந்த ருஷ்ய நகல் கம்யூனிஸ்ட் அல்ல. இந்தியத் தலைநகரான புது தில்லியில் வாழ்பவர்கள் மேல்நாட்டு மோஸ்தர் வாழ்க்கையில் ஊறியவர்கள். ஆகையால் வினோபா புது தில்லியில் ராஜகாட் காந்திஜியின் சமாதியில் முகாம் செய்தபொழுது வெகுசிலரே அவரைப் பார்க்கவந்ததில் ஆச்சர்யமில்லை. வினோபா இதற்கெல்லாம் கவலைப்படுபவர் அல்ல. ஆகையால் கர்மமே கண்ணாயினார் என்றபடி அவர் தம் பிரசாரத்தை இடைவிடாது நடத்திவிட்டு, 13 தினங்களுக்குப் பிறகு எல்லாக் காங்கிரஸ் சர்க்கார் பிரமுகர்களுடனும் காந்தீய வாதம் செய்துவிட்டு. அண்ணலின் சமாதியிடம் விடைபெற்றுக்கொண்டு



உத்தரப் பிரதேசத்து நகரான கூர்ஜாவில் ஸ்ரீ வினோபா பாவே ஸ்ரீ பாவே பிரார்த்தனைப் பேச்சுக் கூட்டத்திற்கு முன் நூல் நூற்கிறார்.

மற்றொரு மார்க்கத்தைப் பிடித்துக்கொண்டு பிரயாணம் ஆனார்.

புது தில்லியில் உள்ள பத்திரிகை நிருபர்கள் நம்மைப் படைத்தவனே வந்து ஏதாவது ஒரு பொது இடத்தில் நின்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்தால், "இது கடவுள் அல்ல; ஹம்பக்" என்று சொல்லுவார்கள். ஆகையால் இவர்கள் வினோபாவைப் பெரிதாக மதிக்காததில் வியப்பு இல்லை. ஆனால் வினோபா இரண்டு பெரிய சக்திகளைப் போகும் இடமெல்லாம் பெருக்கிக் கொண்டே செல்கிறார் என்பதைப் பத்திரிகை நிருபர்கள் கூட மறக்கிறார்கள். முதல் முதலாகக் கம்யூனிஸ்டுகள் நினைத்திராத இடங்களில்கூடப் பாட்டாளிக்கு, "உனக்கு நிலம் கேட்க உரிமை உண்டு' என்று சொல்லி, சிந்தனைச் சுடரைத் தூண்டிவிட்டுச் செல்கிறார் வினோபா. இரண்டாவதாக, ரத்தமில்லாத புரட்சி ஏற்படவேண்டும் என்று சொல்வதுடன் வினோபா அது நிகழாவிடில் ரத்தக்களரி ஏற்படத்தான் போகிறது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறார். இதனால் நிலம் உள்ள ஜமீந்தார்களுக்கும் நிலம் இல்லாத பாட்டாளிகளுக்கும் விழிப்பு ஏற்படுகிறது.

தெலுங்காணாவில் தாங்கள் சாதித்துவிட்டதைப் பற்றித் தோழர் டாங்கே டில்லியில் மார்தட்டினார். "நாங்கள் இரண்டு லக்ஷம் ஏக்கர்களுக்குமேல் பிரித்துப் பகிர்ந்து கொடுத்தோம்" என்றார். இதன் தொனியிலேயே கேட்காமல் எழுந்த கேள்வி, "ஓய் வினோபாவே, நீர் என்ன சாதித்துவிட்டீர்" என்பது. வினோபாவுக்கு விஷயம் விளங்கிற்று. "ஆம், நான் நடந்து நடந்து ஜனங்களுக்குச் சம்பாதித்தது சுமார் 40,000 ஏக்கர்கள்தான். ஆனால் இவை அவர்களிடமிருந்து வருங்காலத்தில் எப்பொழுதும் பிடுங்கப்படா. டாங்கே பகிர்ந்து கொடுத்த நிலங்கள் என்ன ஆயின?" என்று பதில் சவால் விடுத்தார் வினோபா. என்ன ஆயிற்று; சட்டக் கட்டுப்பாடு மறுபடியும் நிலவ ஆரம்பித்ததும் தோழர்கள் பிரித்துக்கொடுத்த நிலங்கள் பறிமுதலாயின.

டில்லியில் வினோபா இருந்தபொழுது அவரைச் சந்தித்த உணவு மந்திரி ஸ்ரீ முன்ஷி சர்க்காருக்குச் சொந்தமான சாகுபடிக்கு லாயக்கான 10 கோடி ஏக்கர் தரிசு நிலங்களைச் சர்க்கார் வினோபா மூலம் பங்கிடத் தயார் என்றதாக அறிகிறேன். ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வினோபாவால் இது சாதிக்க இயலாத காரியம் என்கிறார்களாம். வினோபா போகும் இடம் எல்லாம் அவர் நிறுவும் பங்கீட்டுக் கமிட்டிகளைப்பற்றியும் அவைகளின் வேலைகளைப்பற்றியும் தெரிந்துகொண்டிருந்தால் சிகப்பு நாடாக்களுக்கு மலைப்புத் தோன்றியிருக்காது. ஆனால், பாவம், அவர்கள்தான் ஊன்றி எதையுமே கவனிப்பதில்லையே! சுருங்கச் சொன்னால், வினோபா மூலம் 10 கோடி ஏகர் பங்கிடப்பட்டால் அநியாயமான பங்கீடோ அல்லது லஞ்ச ஊழலோ ஏற்படாது என்பது திண்ணம்.

தேர்தல்

எல்லாவற்றையும்விட மிகவும் வியப்பைத் தரும் விஷயம் என்னவென்றால் எல்லாக் கக்ஷிகளும், குறிப்பாகக் காங்கிரஸும் அபேக்ஷகர்களை ராஜீய வாதிகள் என்ற ஜாதி ஒன்றிலிருந்து தான் பொறுக்கவேண்டும் என்று நம்புவதுதான். குடியரசு சர்க்காருக்கு வழிகாட்டியான பிரிட்டிஷ் சர்க்காரின் பார்லிமெண்டில் மெம்பர்கள் அரசியல் வாதிகள் என்ற ஜாதியிலிருந்து பொறுக்கப்படவில்லை என்பது வெகு சிலருக்காவது இந்தியாவில் தெரியுமா என்பது சந்தேகம்.

தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மெம்பர்கள் கீழ்கண்டவாறு இருக்கிறார்கள்,

கன்ஸர்வேடிவ் கக்ஷி

கம்பெனி டைரக்டர்கள் 80, வக்கீல்கள் 51, கிஸான்கள் 19, மிராசுதார்கள் 14, ராணுவ அதிகாரிகள் 11, கப்பற்படை அதிகாரிகள் 6, பங்குத் தரகர்கள் 6, தொழிற்சாலை முதலாளிகள் 6, எழுத்தாளர்கள் 5, பாங்குத் துறையில் ஈடுபட்டவர்கள் 4, நூல் ஆசியர்கள் 4, ஆடிட்டர்கள் 4, ராஜதந்திரிகள் 4, டாக்டர்கள் 3, பதிப்பாளர்கள் 3, கக்ஷி அதிகாரிகள் 3, பொருளாதார நிபுணர்கள் 2, ஸர்வேயர்கள் 2, புரொபஸர்கள் 2, லார்ட்கள் 2, வர்த்தகர்கள் 2, என்ஜினீர்கள் 2, காலேஜ் ஆசிரியர்கள் 2, காகித வர்த்தகர்கள் 2, பத்திரிகை முதலாளிகள் 2, இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகள் 2, மற்றப்படி கீழ்க்கண்ட வர்க்கத்தினரில் ஒவ்வொருவர்: தேக்கு வர்த்தகர், மருந்துக் கடை, விளம்பர ஏஜண்ட், தொழில் ஆலோசகர், காலனி சர்விஸ் உத்தியோகஸ்தர், சர்ச் (Church) பாதிரி, சர்க்கார் உத்தியோகஸ்தர், மற்றும் 21 வர்க்கத்தினர்.

தொழிற்கக்ஷி: வக்கீல்கள் 34, சுரங்க வேலைக்காரர்கள் 33, பத்திரிகையாளர்கள் 29, உபாத்தியாயர்கள் 26, ரயில்வே ஊழியர்கள் 22, தொழிற்சங்க சிப்பந்திகள் 15, என்ஜினீர்கள் 12, லெக்சரர்கள் 12, டாக்டர்கள் 6, கடைச் சிப்பந்திகள் 5, பஞ்சாலை ஊழியர்கள் 4, புரொபஸர்கள் 4, கம்பெனி டைரக்டர்கள் 4, கட்டிடவேலை நிபுணர்கள் 3, ஸெக்ரடரிகள் 3, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 3, பாதிரிகள் 3, பொருளாதார சாஸ்திரிகள் 3, ஆசிரியர்கள் 3. கப்பல் துறைமுக ஊழியர்கள் 3, வீட்டுவேலை கவனிக்கும் குடும்பஸ்திரீகள் 3, இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகள் 3, தொழில் ஆலோசகர்கள் 2, ஸ்டீல் ஆலை ஊழியர்கள் 2, காலனி ஸர்விஸ்காரர்கள் 2, பல் வைத்தியர்கள் 2, போஸ்ட் ஆபீஸ் ஊழியர்கள் 2, பாங்கர்கள் 2, நாவிதர்கள் 2 மற்றும் 36 இதர வர்க்கத்திலிருந்து ஒவ்வொருவர்.

இதிலிருந்து அரசியலில் ஈடுபடத் தனி ஜாதி ஒன்றும் தேவை இல்லை என்பதுடன் எப்படி ஒவ்

வொரு துறையிலும் ஈடுபடுபவர்களுக்குப் பிரதி நிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பது விளங்குகிறது.

* * *

தேர்தல் பல அதிசயமான தோழர்களை உண்டாக்குகிறது. தற்பொழுது தமிழ் நாட்டில் திராவிடக் கழகத்துக்கும் கம்யூனிஸ்ட் கக்ஷிக்கும் ஏற்பட்டிருக்கும் நட்பு இங்கு யாவரையும் திகைப்பில் ஆழ்த்திவிட்டது. எவ்வளவுதான் பலாத்காரக் கொள்கையைக் கைக்கொண்டாலும், எவ்வளவு அதிதமாக நடந்தாலும், கம்யூனிஸமும் கம்யூனிஸ்ட் கக்ஷியும் சில முற்போக்கான கொள்கைகளுக்குப் பேர்போனவை. திராவிடக் கழகமோ ஜாதிப் பூசல்களை வளர்த்து, மதத்வேஷத்தைப் பரப்பி, வகுப்புவாதக் குட்டையின் சேற்றில் ஆனந்திக்கும் அற்புத ஸ்தாபனம் என்பது இங்குங்கூட யாவருக்கும் தெரியும். தெரியாதவர்களுக்கும் ஸோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் சொல்லி வைக்கிறார். இங்கு (வடக்கே) இருக்கும் வகுப்புவாதத்துக்கும், அங்கே (தெற்கே) இருக்கும் பிராம்மண—பிராமணரல்லாத பூசலுக்கும், ஆரிய—திராவிடப் புரளிக்கும் வித்தியாசம் இல்லை, அதை ஒழித்துக் கட்டாவிடில் தேசம் குட்டிச்சுவர் என்கிறார் ஸ்ரீ ஜயப்பிரகாசர். ஆகவே, இந்தப் புது உறவைப்பற்றி ஸ்ரீ டாங்கேயை டில்லியில் கேட்டபொழுது அவர் ஒரு பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். திராவிடக் கழகம் மிகவும் முற்போக்கான ஸ்தாபனம். இதன் தலைவர்களைப்போல் பொது ஜனத்தின் மதிப்பிற்குப் பாத்திரமானவர்கள் யாருமே இல்லையாம். ஈயத்தைக் கண்டு இளித்ததாம் பித்தளை. அதைப்போல்தான் இருக்கிறது ஸ்ரீ டாங்கேயின் கூற்று.

இன்னும் ஒரு மாதமே இருக்கிறது தேர்தல்களுக்கு. எங்கும் காங்கிரசுக்கு எதிர்ப்பு இருப்பதுடன், காங்கிரஸ் கக்ஷிக்குள்ளேயே உள்நாட்டுக் கலகம் குமுறி, காங்கிரஸ்காரரை டிக்கட் கிடைக்காத காங்கிரஸ்காரர் எதிர்க்கும் நிலைமை வந்திருக்கிறது. ஆனால் தேர்தலை ஜயிக்க, பெரிய ஸ்தாபனமும் ஏராளமான பணமும் தேவையாக இருப்பதால், காங்கிரஸ் பல சமஸ்தானங்களில் வெற்றிபெறும். பம்பாய், பீஹார், மத்தியப்பிரதேசம் இவைகளில் வாலைப்பிடி தோலைப்பிடி நிலைமைதான். எது எப்படி ஆயினும் வரும் பார்லிமெண்டிலும், மாகாண சட்டசபைகளிலும் ஏராள எதிர்ப்பு காங்கிரஸுக்கு இருக்கும் என்பது நிச்சயம், இதுவும் நல்லதே. ஏனென்றால் பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்காமல் இதுவரை ஸ்டீம் ரோலரைப்போல் வழியில் வந்ததையெல்லாம் நொறுக்கிக்கொண்டு சென்றதுபோலச் செல்ல முடியாதல்லவா? அந்தமட்டும் குடியரசுக் கொள்கை ஒரு படி அபிவிருத்தி அடைகிறது.

ஜண்டு பார்மஸூடிகல் வொர்க்ஸ் லிமிடெட்.

சகல ஆயுர்வேத மருந்துகளையும், இங்கிலீஷ் மருந்துகளையும் ஏராளமாக, சாஸ்திரோக்தமாக, தயாரிப்பவர்கள்.

"ஜண்டு கேஸரி ஜீவன்"

இது சாதாரண இருமல், ஜலதோஷம், ஆஸ்த்மா தொண்டைக் கம்மல், சுவாசகோச அழற்சியால் தோன்றும் இருமல் முதலியவைகளுக்குச் சிறந்தது. மேலும் இது வக்கீல்கள், உபாத்தியாயர்கள், நூல் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு மூளைக்குத் தெளிவையும், ஞாபக சக்தியையும் அளிப்பதோடு தேகத்திற்கு, தேஜஸூம் வீரியவிருத்தியும் அளிப்பதில் சிறந்தது

1 பவுன் 6—8—0 ½ பவுன் *3—6—0* ¼ பவுன் *1—13—0.*

கும்பகோணம் : பிரிமியர் மெடிகல் ஸ்டோர்ஸ் லிமிடெட், கடைத்தெரு.
தி பார்மஸி, மடத்துதெருவு.
காரைக்குடி:— இந்திரா மெடிகல் ஹால்
தஞ்சை : P. V. முத்துகிருஷ்னராஜா சன், அய்யங்கடைத் தெருவு.
திருச்சி : விநாயகர் மெடிகல் ஹால். தெப்பக்குளம்
மதுரை : N. R. சாமி அண்டு கோ. வடக்குச் சித்திரை வீதி.
மாயவரம் : பிரிமியர் மெடிகல் ஹால்.
சிதம்பரம் : நடராஜா டிஸ்பென்சரி, சிதம்பரம்.
கடலூர் : ஸ்ரீ ராம் பார்மஸி, புதுப்பாளயம்.

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழேகண்ட விலாசத்திற்கு எழுதவும்,

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

நேபாள யாத்திரை—2

கே. ஸ்ரீ.

சென்ற அத்தியாயத்தில், நல்ல குளிர் வெளியே இருக்க, ஒரு ஹோட்டலுக்குள் சென்றேன் என்றேன் அல்லவா? அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்.

மிகவும் குறுகலான மாடிப்படி வழியாக மிகவும் சிரமப்பட்டு முதல் மாடியை அடைந்தோம். என்னுடைய படுக்கையை அந்த மரப்படிவழியாக எடுத்துச்செல்வது மிகவும் பிரம்மப் பிரயத்தனமாகத்தான் இருந்தது. குறுகலான நடைவழியாகச்சென்று இரண்டு படிகள் இறங்கி, நான்கு படிகள் ஏறி, ஒரு மெத்தைபோடப்பட்ட அறை வாசலில் நின்றேன். ஹோட்டல்காரர் உள்ளேசென்று விளக்கைப் போட்டார். உள்ளே நுழைந்ததும் "மரியாதையாக இரு" என்பதுபோன்று அறையின் ஒட்டு தலையைப்பழுதுபார்த்தது. சட்டென்று தலையைக் குனிந்துகொண்டு மெதுவாக முழு உயரம்வரை விறைப்பாக நிமிர்ந்து பார்த்தேன். தோள்வரை தான் ஒட்டு அநுமதித்தது. தலையை எங்கேயாவது தனியாக வைக்கவேண்டும்போல் இருந்தது. ஹோட்டல்காரரைக் கொஞ்சம் சோகமான குரலில் "என்னைப்படைத்தவன் மிகவும் உயரமாகப் படைக்கவில்லை. என் உயரம் ஐந்து அடி ஒன்பது அங்குலம்தான். இந்த உயரத்திற்குக்கூடவா ஆக்ஷேபனை?" என்றேன். நேப்பாளிகள் இயற்கையாகவே மிகவும் மரியாதைக்காரர்கள். அடிக்கு ஒரு "ஸா" போடுபவர்கள். "ஸா" என்றால் ஆம் என்று பொருள். "ஸா, ஹுஸுர், ஆனால் இந்தக் குளிர் பிடுங்கித் தின்னும் ஊரில் ஒட்டு தாழ இல்லாவிட்டால் எப்படிச் சமாளிப்பது?" என்று கேட்டார். மேலும், நீங்கள் ஒன்று உட்கார்ந்துகொண்டு இருப்பீர்கள் அல்லது படுத்துக்கொண்டிருப்பீர்கள், எதற்காக நிற்கவேண்டும் என்று கேட்டார்.

அவர் கேட்டது என்னவோ உண்மைதான். இருந்தாலும் எனக்குச் சிரமப்பட்டு ஒரு வயது முடியுமுன்னரே கற்றுக்கொண்டு கையாளும் (நிற்கும்) பழக்கத்தை மறக்க இஷ்டம் இல்லை. ஆகையால் அவரை வேறு அறை இல்லையா என்று பரிதாபமாகக் கேட்டேன். "இரண்டாவது மாடியில் ஒரு அறை இருக்கிறது. ஆனால் அதில் காற்று ஓட்டம் ஜாஸ்தி" என்றார். காற்றாக இருந்தாலும் சரி, மழையாக இருந்தாலும் சரி, நன்றாக நிற்க வாட்டமாக இருந்தால் போதும் என்று ஒப்புக் கொண்டேன்.

மறுபடியும் குஸ்தி போட்டு, படுக்கை பெட்டிகளை மாடிப்படி வழியாக இரண்டாவது மாடிக்கு எடுத்துச் சென்றேன். ஹோட்டல்காரர் ஒரு துத்தநாகத் தகடுகளால் ஆன "காற்றோட்ட அறை"யைத் திறந்தார். உள்ளே இரு பெஞ்சிகளும் ஒரு மேஜையும் இரு நாற்காலிகளும் போடப்பட்டு இருந்தன. அறை ரிப்ரிஜரேட்டர் (காய்கறி, பழங்கள் முதலியவைகளைக் குளிர்ந்தநிலையில் வைக்கும் மெஷின்) போல் இருந்தது. ஆனால் சித்திரக்குள்ளன் அறை வேண்டாம் என்று சொல்லிவிட்டு இப்பொழுது இந்த அறையை மறுக்க முடியாமல் போய்விட்டது.

இரவு நேரத்தில் வந்ததால் ஒன்றும் விசேஷமாகத் தயார்செய்வதற்கில்லை என்று அறிவித்தார் ஹோட்டல்காரர். எனக்கு நடுக்கும் குளிரில் ஏதாவது ஆகாரம் என்று கிடைத்தால் போதும் என்று இருந்ததால் நானும் "இருப்பதைக் கொடுங்கள்" என்று சொன்னேன். சில நிமிஷங்களில் "நமஸ்தே" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வெந்நீர் லோட்டா தட்டு சகிதம் நுழைந்தாள் ஒரு மாது. அவள் பின்னால் சுமார் 20 வயது உள்ள மற்ற ஒரு பெண் இரண்டு மூன்று பாத்திரங்களுடன் நின்றுகொண்டிருந்தாள். அவர்கள் முறையே ஹோட்டல்காரரின் மனைவியும் பெண்ணும். ஹோட்டலே இல்லாத ஊரில் இவர்கள் தங்கள் ஜீவனத்திற்காகவும் மிகவும் அபூர்வமாக வரும் யாத்திரீகர்களுக்காகவும் ஹோட்டல் நடத்திவந்தார்கள்.

இரவு போஜனத்திற்கு நல்ல அரிசிச் சாதமும் வெந்த பயிற்றம்பருப்பும் கொடுத்தார்கள். தொட்டுக்கொள்ள உபசாதகம் நேப்பாளத்திற்கே பிரத்தியேகமான ஒரு கீரை. அப்பொழுது இருந்த கோரப் பசியில் ஆளையே சாப்பிட்டிருந்தால்கூட ஆச்சர்யமில்லை. ஆகையால், கொடுத்த சாப்பாடு மிகவும் அமிர்தமாகவே இருந்தது. தட்

(இந்திர சவுக்கிலிருந்து ஒரு தெருக்காட்சி)

டுக்களை எடுத்துக்கொண்டு போகுமுன்னர் ஹோட்டல்காரர் இரவில் எழுந்தால் மூன்றும் மாடியில் ஜலஸ்பரிச வசதி உண்டு என்று சொல்லிவிட்டுப் போனார்.

மணி பத்து அடித்தது. நான் இருந்த அறையில் குளிர் தகர அடைப்புகளைத் துளைத்துக்கொண்டு என்னை நடுக்க வைத்தது. கீழே மெத்தையைப் போட்டு அதற்கு மேல் ஒரு கம்பளியைப் போட்டு, போர்த்திக் கொள்ள ஒரு நூல் பெட்ஷீட்டுக்குமேலே மற்றொரு கம்பளியைப்போட்டு, அதற்குமேல் பஞ்சு அடைத்த ரஜாயி என்னும் ஒருவித மெத்தையைப் போட்டு வைத்தேன். இவ்வளவும் குளிர் தாங்குமா என்று ஐயப்பட்டுக் கொண்டே பனியன் அதற்குமேல் சட்டை அதற்குமேல் கம்பளி நூல் ஸ்வெட்டர் (என்னும் பனியன் போன்ற உடை) இவ்வளவும் போட்டுக்கொண்டு ஜாக்கிரதையாகப் படுக்கைக்குள் நுழைந்தேன். உடனேயே கால் முதல் தலைவரை போர்த்திக்கொண்டு படுத்து உள்ளே மூச்சு விட்டே சூடு உண்டாக்கித் தூங்க முயன்றேன். சுமார் அரை மணி படுத்துக்கொண்டு இருந்திருப்பேன். எனக்குக் குளிர் அடங்குவதற்குப் பதிலாக தூக்கிப்போட ஆரம்பித்தது. எழுந்து முழுக்கைக் கம்பளிச் சட்டையைப் போட்டுக் கொண்டு அதற்குமேல் ஆனது ஆகட்டும் என்று ஓவர் கோட்டைப் போட்டுக் கொண்டு மறுபடியும் படுக்கைக்குள் நுழைந்தேன். தூக்கம் என்னவோ வரவில்லை. புரளவும் வழியில்லை. சர்க்கஸ் பபூன்மாதிரி உள்ள சட்டைகளையும் கோட்டுக்களையும் மேலேபோட்டுக்கொண்டு பீப்பாய்மாதிரி ஆனால் எப்படிப் புரள்முடியும்?

மணியை எண்ணிக்கொண்டே படுத்துக் கொண்டு இருந்தேன். ஹிமாலயப் பிரதேசத்தில் இருக்கிறோம், சுற்றிலும் பனிமலைகள் என்று நினைத்துக்கொண்டதும் மேலும் குளிர் பிடுங்க ஆரம்பித்தது. காத்மாண்டுவில் குளிர் அளவில்லாமல் அடிக்கிறது. அதுவும் இரவில் எங்கு எப்படி இருந்தாலும் ஐஸ்கட்டிகளாலான வீட்டில் உடையில்லாமல் அவஸ்தைப் படுவதுபோன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

எவ்வளவு மணி தூங்கியிருப்பேனோ தெரியாது. கதவை யிடிக்கும் சப்தம் கேட்டு எழுந்தேன். ஹோட்டல்காரரின் மனைவி வெந்நீர் கொண்டுவந்து காத்துக்கொண்டிருந்தாள். கதவைத் திறந்துவிட்டு ஒரு நிமிஷம் அதிர்ச்சியடைந்தேன். பளார் என்று ஒரு வாளி ஐஸ் தண்ணீர் மேலே விழுந்தது போல் இருந்தது. ஹோட்டல்காரரின் மனைவியின் உடையைக் கவனித்தேன். பாவம்! கம்பளித்துணி என்பது ஒரு இம்மிகூட இல்லை. ஒரு தேங்காய்ப்பூத் துண்டை மேலே போர்த்திக்கொண்டு அதற்குமேல் பருத்தியாலான போர்வையைப் போர்த்திக்கொண்டிருந்தாள். சிரித்துச் சிரித்து, கள்ளங்கபடு என்பதே அறியாது பேசிய அவள், "என்ன பாபூ, இவ்வளவு கம்பளியைப் போர்த்துக் கொண்டுமா நடுங்குகிறீர்கள்" என்றாள். அவள் கேட்டது என்னவோ வாஸ்தவம். அந்தந்த ஊர் வாசிகளுக்கு அந்தந்த ஊர் சீதோஷ்ண ஸ்திதி பழகிப்போய் அவர்களுக்குச் சீதோஷ்ணத்தின் கடுமை தெரியாமல் போய்விடுகிறது. என்று தீர்மானித்து திருப்திப்பட்டுக் கொண்டேன்.

என் அறையைவிட்டு வராந்தாவுக்கு வந்தேன். தெருவில் ஜன நடமாட்டம் நன்றாக ஆரம்பித்து இருந்தது. கையைக் கட்டிக் கொண்டு காந்திக் குல்லாயைப் போன்ற நேப்பாளிக் குல்லாயை அணிந்து, குளிரால் கையைக் கட்டிக்கொண்டு ஜனங்கள் இங்கும் அங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். நேப்பாளிகள் மிகவும் உழைப்பாளிகள், அதிலும் மலைப்பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் எறும்பை ஒத்தவர்கள். சுமை தூக்குவது பெரும்பாலோர்க்கு ஜீவன மார்க்கம். காத்மாண்டுவுக்கு வெளியே பல மைல்கள் கடப்பிலிருந்துஇந்தக் கூலிகள் தான் பருப்புவகைகள், பால் தயிர், கறிகாய் தானிய வகைகள் முதலியவைகளைக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் சுமையைக் காவடிபோன்ற சாதனத்தால் தூக்குகிறார்கள். மதுவிலக்குக்கு முன் சென்



(காத்மாண்டு தெருவின் தோற்றம். பகோடாவின் தோற்றமளிக்கும் அடுக்குள்ளதெல்லாம் கோவில்கள்.)

ளையில் கள் குடங்களைப் பக்கத்திற்கு ஒன்றாக மூங்கில் துண்டின் இறுதியில் உறி மாதிரி கட்டித் தூக்கிசெல்வார்களே சாணார்கள், அதே போல்தான் கூலிகள் இங்கும் செல்கிறார்கள். மலைதேசப் பெண்கள் தேயிலைத் தோட்டப் பெண்களைப் போல ஒரு கூடையை முதுகில்வைத்து அதில் சாமான்களைச் சுமக்கிறார்கள், கூடையின் இரு பக்கங்களிலிருந்தும் பட்டையான நாடா பெண்களின் நெற்றியில் பொருத்தப்பட்டுக் கழுத்தின் வலுவினால் கூடை தூக்கப்படுகிறது.

நான் பார்த்துக்கொண்டிருந்த தெருவின் பெயர் ஜூத்த ஸடக். (ஜூத்த ஷம்ஷேர் என்பவர் முன்பு பிரதம மந்திரியாக இருந்தவர்; ஸடக் என்றால் வீதி என்று பொருள்). கடும் மூடுபனி தெருவில் திரைபோட்டது போலஇருந்தது. சுமார் எட்டுமணிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பனி விலக ஆரம்பித்தது. தெரு மிகவும் விசாலமானது. தெருவின் கீழ்க்கோடியில் ஒரு சிங்கார வாசல் இருந்தது. தெருப் பூராவும் நல்ல கடைகள், அடுக்கு மாடிகள் கொண்ட வீடுகள். காலை ஆகாரம் அருந்திவிட்டு ஊர் சுற்றப் புறப்பட்டேன்.

காத்மாண்டுவுக்கு வரும் ஒவ்வொரு சாமானும் (அரிசி துணிமணிகள் நீங்கலாக) கூலிகளால் தூக்கப்பட்டு வருவன. ஆகையால் மோட்டார் வண்டிகளும் அக்குவேறு ஆணி வேறாகக் கழற்றப்பட்டு, காத்மாண்டுவுக்குக் கொண்டுவரப்பட்டு பிற்பாடு இணைக்கப்படுகின்றன; ஆகவே கார்கள் மிகவும் சொற்பம். வாடகை மோட்டார்காரர்கள் மைலுக்கு இரண்டு ரூபாய் வாடகை வாங்குகிறார்கள்.

சுலபமாகப் பார்க்கக்கூடியவைகளை முதலில் பார்ப்போம் என்று மேலப்புறமாக நடந்தேன். நான் காத்மாண்டுவை அடைந்த சமயம் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டு மதில்மேல் பூனை கதையாக இருந்தது ஜனங்கள் நிலை. ராணாக்கள் ஆட்சியில் விந்தை ஒன்று என்னவென்றால் காத்மாண்டுதான் நேப்பாளம், காத்மாண்டுவுக்கு வெளியே நடக்கும் நிலவரங்களைப்பற்றி ஜனங்களுக்குத் தெரியாது. ஆகவே போலீஸ் ராணுவத்தின் உதவியுடன் ஜனங்களை வெளியுலகத்தைப்பற்றித் தெரியாமல் செய்து, நிரந்தரமாக ஆட்சி புரியலாம் என்று கனாக் கண்டு வந்தனர், ஆளும் வர்க்கத்தார். இந்த மனோபாவம் உடைய சர்க்காருக்கு ஒற்றர்கள் உதவி தேவை அல்லவா? அந்தப் படை ஒன்று வெகு அமர்க்களமாக, காத்மாண்டுவில் வேலை செய்து கொண்டிருந்தது. அதைச் சேர்ந்த ஒருசிலர் என்னைப் பின் தொடர ஆரம்பித்தனர். நான் தெருவில் காலடிவைத்தவுடனேயே இது எனக்கு நன்கு தெரியவந்தது. வெளியுலக அனுபவமோ, உள்ளூர்ப் படிப்பு வாசனையோ அறியாத இவர்கள் நான் நின்றால் அவர்களும் நின்றார்கள். நான் நடந்தால் அவர்களும் நடந்தார்கள். நான் எதையாவது படம்பிடித்தால் இஞ்சிதின்ற குரங்குபோல் விழித்தார்கள்..

ஜூத்தஸடக்கில் கொஞ்சம் நடந்தவுடனேயே நம் ஊரில் நடப்பதுபோன்ற உணர்ச்சி உண்டாயிற்று. காரணம், ஒரு அரசமரத்தைச் சுற்றி இருந்த மேடையில் பலவித நாகர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அவைகளின் மேல் ஸிந்தூரம் சாத்தப்பட்டிருந்தது. கையில் பூங்கூடையுடன் நேப்பாளி மாதுகள் நாகர்களைப் பிரதக்ஷிணம் செய்து வந்துகொண்டிருந்தார்கள். பெண்கள் சாதாரணமாக நம் ஊர்ப் பெண்களைப்போல மாம்பழக்கொடுக்குப்பாணியில் புடவை உடுத்திக்கொண்டிருந்தனர். லக்ஷ்மிகரமாக யாவரும் காலணா (ஓட்டைக் காலணா இல்லை; பழைய செப்புக் காசு) அளவிற்கு ஸிந்தூரப் பொட்டும் அதற்குமேல் குங்குமப்பொட்டும் வகிட்டில் குங்குமமும் இட்டுக்கொண்டிருந்தார்கள்.

நேப்பாளத்தில் பெரும்பாலோர் ஹிந்துக்கள்; மற்றவர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள். ஹிந்துக்கள் என்றால் நானும் ஹிந்து, அவர்களும் ஹிந்துக்கள் என்று சொல்ல எனக்குத் துணிவு இல்லை. ஆகா! ஒவ்வொரு ஆணும், பெரியவர்கள், யுவர்கள், சிறுவர்கள் உள்பட, நெற்றியில் சந்தனப் பொட்டு, குங்குமப் பொட்டு, மற்றும் ஒரு கறுப்புப் பொட்டுடன் காணப்பட்டனர்.

தெருவில் ஜனங்கள் நடமாடுகையில் சட்டென்று ஒருவர் குனிவார், மற்றவர் குனிந்த



(காத்மாண்டுவில் காணப்படும் பல கோவில்களில் ஒன்று. முழுதும் கல்லினால் ஆன இந்தக் கோவில் சிற்சில அம்சங்களில் தென்னிந்திய கோவில்களை ஒத்திருக்கிறது.)

வர் தலைமைத் தொடுவார். பிற்பாடு இது என்ன என்பது விளங்கிற்று. நேப்பாளத்தில் ஜாதித்வேஷம் கிடையாது. ஆகவே பிராமணர்கள், நேவார் ஜாதியார்கள், க்ஷத்திரியர்கள், ரஜபுத்திரர்கள் யாவரும் அன்னியோன்யமாக இருக்கிறார்கள். தெருவில் பிராம்மணர்களைக் கண்டால் மற்றவர்கள் தலையைக் குனிந்து அவர்கள் ஆசியைப் பெறுகிறார்கள். இதுதான் நான் பார்த்ததன் தாத்பர்யம் என்று பிறகு தெரியவந்தது.

ஜாத்த ஸட்க் முடியுமுன்னரே ஒரு பெரிய அடுக்கு மாளிகை தென்படுகிறது. இது சைனாவில் இருக்கும் பகோடா என்று சொல்லப்படும் புத்தக் கோவிலைப்போல இருக்கிறது. ஒவ்வொரு மாடிக்கும் கூரை ஓர் பெரிய கவிழ்த்துவைக்கப்பட்ட பிரம்மாண்ட பேஸினை (basin பாத்திரம்)ப் போல் இருக்கிறது. இந்தக் கட்டிடத்திற்குப் பெயர் "நௌ தல்லா பகவான் மந்திர்" (நௌ—ஒன்பது, தல்லா—மாடி, பகவான்—கடவுள், மந்திர்—கோவில்) அல்லது ஒன்பது மாடிக் கடவுள் கோவில். கடவுளுக்கு இவ்வளவு உயர்ந்த இடத்திலும் மாடிக்கட்டிடம் வேண்டும்போல இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

இந்தக் கட்டிடத்தை ஒட்டி ஒரு பெரிய கட்டிடம். இதில்தான் ராணாக்கள் ஆலோசனைச்சபை கூடுவது வழக்கம். இதைச்சட்ட சபைக் கட்டிடம் என்கிறார்கள். ஒரு நேப்பாளி யுவன் சொன்னான்: "சட்டசபைக் கட்டிடம் என்ற பிரமாதப் பெயரைக்கண்டு மலைக்காதீர்கள். இதில் சட்டத்தைத் தவிர பாக்கி எல்லாம் உண்டு" என்றான்.

இந்த இடத்திலிருந்து வலதுபக்கம் திரும்பினால் ஹனுமான் தோக்கா. இதில் ஒரு பக்கம் பிரம்மாண்ட ஹனுமார் மூலஸ்தானம் இருக்கிறது. மற்றப்புறம் காத்மாண்டுவின் மத்திய போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. கும்பல் கும்பலாக இந்தச்சதுரக்கட்டடத்தில் போலீஸ் ஜவான்கள் வெய்யிலில் உலாத்துகிறார்கள். மற்றப்புறம் ஒரு மண்டபம் இருக்கிறது, அதற்கு நாற்புறமும் பலவித நிலையில் நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களைக் காணலாம். சிலர் தூங்குவார்கள், சிலர் பேசிக்கொண்டு இருப்பார்கள், மற்றும் சிலர் பதினைந்தாம்புள்ளி விளையாடிக் கொண்டு இருப்பார்கள். முக்கால்வாசி போலீஸ்காரர்களுக்குக்குறிப்பிட்ட வேலை என்று ஒன்றும் கிடையாது. ஆனால் சதாசர்வகாலமும் அவர்கள் அந்த இடத்தைச் சுற்றி, கடாவடி விடவேண்டும்.

இங்கிருந்து வடகிழக்கே நடந்தேன். இப்பொழுதுதான் காத்மாண்டு ஜனங்களின் ஏழ்மை பறைசாற்ற ஆரம்பித்தது. குறுகலான தெருக்கள், அவைகளில் இடைவெளி இல்லாமல் ஒன்றோடொன்று இணைத்துக் கட்டப்பட்ட சுண்ணாம்பு அடிக்கப்படாத வீடுகள், இந்த அழகில் மூன்று மாடிக்குக் குறைவில்லை எந்த வீடும். காத்மாண்டுவில் பிற்பாடு தெரியவந்தது என்னவென்றால் குடிசைக்குக் கூட மாடி உண்டு. காரணம் கீழ்ப்பாகத்தில் எப்பொழுதும் ஈரம் காப்பதால் ஒரு பயங்கர மலேரியா கொசு இரவில் ரீங்காரம் செய்கிறது. கும்பகோணத்துக் கொசுவும் கதை ஆகிவிட்டது. ஆனால் காத்மாண்டு கொசு முழுதும் உண்மையாக ஜனங்களுக்கு நிரந்தர கிலியாக இருக்கிறது.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஜனங்கள் எங்கெங்கு வெய்யில் வந்ததோ அங்கங்கு ஒன்றிக்கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். சிறு குழந்தைகளை ஓலைத்தடுக்கில் போட்டிருந்தார்கள். எளிய நேப்பாளி மாதர்கள் அந்த டிஸம்பர் குளிரிலும் உடம்பைத் திறந்துகொண்டு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தார்கள். உபயோகப்படுத்தப்படும் எண்ணெய் கடுகு எண்ணெய். தேய்த்துக் கொண்டவுடன் சூடு கொடுக்குமாம். ஆகையால் ஜனங்களுக்குக் குளிர்ந்த தண்ணீரில் குளிக்கக் கொஞ்சம் சௌகரியம்.

மற்றுமொரு விஷயம். காத்மாண்டுவில் எண்ணிக்கையற்ற கோவில்கள் இருக்கின்றன. தஞ்சாவூரில்தான் கோவில்கள் அனந்தம் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். காத்மாண்டுவில் அடிக்கு ஒரு கோவில் இருக்கிறது. இது என்ன கோவில்,

சௌந்தரியம்
வெளிப்படுகிறது.
,.. எல்லோரும் போற்றுவது.
கோத்ரெஜ் ந. 2 சோப்பை உபயோகித்து மறைந்திருக்கும் சரும சௌந்தரியத்தை வெளிப் படுத்துங்கள்.
அதன் பரவசப்படுத்தும் புதிய வாசனை உங்களை வசீகரிக்கும், மேலும் அதன் அடர்ந்த பட்டைப்போல் மிருதுவான நுரை உங்கள் சருமத்திற்கு சுகமளிக்கும்.
No2
Godrej
சிரேஷ்டம்
சுதேசி
Godrej
VEGETABLE TOILET SOAP
cosmetic
No2
germicidal
GODREJ SOAPS LTD.
Godrej
No.2
SOAPS·GLYCERINE·HAIR TONIC·EAU DE COLOGNE
முற்றிலும் சுத்தமானது.
மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கு உத்தரவாதம்.
Godrej ரிஜிஸ்டர்ட்
கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.
மதராஸ்: 164, பிராட்வே; கொச்சி: 6/36, கல்வத்தி.
தாவர எண்ணெய் சோப்புகள் செய்பவர்களில் முதன்மையானவர்கள்.



(காத்மாண்டுவை அடையுமுன் ஒரு காட்சி)

அது என்ன கோவில் என்று கேட்டு மாளாது. ஆகையால், முக்கியம் என்று கருதாத கோவில்களைப்பற்றி நான் தெரிந்து, கொள்ளச் சிரமப்படவில்லை.

பல சிறிய சந்துபொந்துகளைக் கடந்த பிறகு இந்திர சவுக் என்ற நாற்சந்தியை அடைந்தேன். இங்கு முக்கியமான கட்டிடம் ஸ்ரீகாலபைரவருக்கு அமைக்கப்பட்டிருக்கும் கோவில். வெளியே உயர்ந்த வேலைப்பாடுகள் உள்ள மர வராந்தா (balcony) ஒன்றில் பலயாளிகள் சமைக்கப்பட்டு மற்றும் பல விதப் பதுமைகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் கோவிலுக்குப் போய்வந்த வண்ணம் இருந்தனர்.

இந்திர சவுக் நான் பின்னர் இருந்த சில வாரங்களில் பெரிய மகத்துவத்தை அடைந்தது. இங்கேதான் பல அரசியல் ஊர்வலங்களும், கூட்டங்களில் தடியடிகளும் நடந்தன. ஆனால் சவுக்கில் நான் முதல் முதலாகப் பார்த்தபொழுதும் ஜனநடமாட்டம் அதிகமாக இருந்தது. ஒரு பக்கம் காசுக்கடைகள்; மற்றப் பக்கம் விறகு தூக்கிகள் சுமைகளைத் தூக்கிக்கொண்டே உட்கார்ந்து இருந்தனர். மற்றொரு பக்கம் நல்ல வயதுவந்த நேப்பாள யுவர்களும் சிறுவர்களும் தெருவிலேயே பதினைந்தாம்புள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்திர சௌக்கிலிருந்து திரும்பவும் ஜூத்த ஸடக்கிற்கு ஒரு தெரு செல்கிறது. இது காத்மாண்டுவின் பெரிய துணி பஜார். இங்கே துணிகள் இந்தியாவைவிட மிகவும் மலிவாகக் கிடைக்கின்றன. காரணம் நேப்பாளத்துக்கென்றே பிரத்தியேகமாக இந்திய மில்கள் துணிகள் கட்டுக்கட்டி அனுப்புகிறார்கள். இந்தத் துணிகளுக்குச் சுங்கவரி கிடையாது. தவிர சமயத்தில் இந்தியாவில் கிடைக்காத ரகங்கள் இங்கு மிதிபடுகின்றன.

இந்தியாவில் அமெரிக்க டாலருக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அதே போல் நேப்பாளத்தில் இந்திய ரூபாய்க்குக்கிராக்கி இருக்கிறது. ஏனென்றால் இந்தியாவில் சாமான்கள் வாங்க நேப்பாள வியாபாரிகளுக்கு இந்திய ரூபாய் தேவை. நேப்பாளத்தில் எப்பொழுதுமே 100 இந்திய ரூபாய்களுக்கு 107—8—0 நேப்பாள ரூபாய்கள் கிடைக்கின்றன. குளிர் காலத்தில் வர்த்தகம் மந்தம் ஆகும் சமயத்தைத் தவிர மற்றச்சமயங்களில் தேவைக்கேற்றவாறு ரூபாய் மாற்று விகிதம் கூடிக் குறைந்து கோடையில் 100 இந்திய ரூபாய்களுக்கு 115 நேப்பாள ரூபாய்கள் கிடைக்கின்றன.

நேப்பாள ரூபாய்க்கு 20 அணாக்கள், 100 பைசாக்கள். முதலில் இந்த நாணய செலாவணியைப்பற்றிப் புரிந்துகொள்வது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் போகப் போக இந்தத் தசாம்ச செலாவணி முறையின் சௌகரியம் பிடிபடுகிறது.



(வேலையில்லாத காத்மாண்டு யுவர்கள் பதினைந்தாம் புள்ளி விளையாடுகிறார்கள்.)

(காலபைரவர் கோவில், இந்திர சவுக், காத்மாண்டு.)

துணி மார்க்கெட்டில் மிகவும் முக்கியமானவர்கள் இந்தியர்கள். நான் காத்மாண்டு சென்ற சமயம் அரசாங்க அடக்குமுறை மிகவும் அமளி துமளிப்பட்டுக்கொண்டிருந்தது. ஆகவே நான் பல வியாபாரிகளைச் சாதாரணமாக, "சௌக்கியமா, எப்படி நடக்கிறது உங்கள் வர்த்தகம்?" என்று கேட்டதற்கு அவர்கள் கூழைக்கும்பிடு போட்டு 'இந்த இழவு சனி தொலையாதா?' என்பது போல் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். எப்பொழுதும் உளவாளிகள் வட்டமிட்டுக்கொண்டு சுற்றிக்கொண்டிருந்ததுதான் இதற்குக் காரணம்.

சுமார் பதினொரு மணிக்கு ஹோட்டலை அடைந்தேன். சாப்பாடு காத்துக்கொண்டிருந்தது. சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் படுத்தேன். பகல் ஆனதால் குளிர் மட்டாக இருந்தது. தூக்கம் சுகமாக வந்தது. நன்றாக இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்தேன். சுமார் மூன்று மணி இருக்கும். ராணுவ பாண்டு சப்தம் கேட்டு எழுந்தேன். டீ கொண்டுவந்துகொடுத்த ஹோட்டல்காரர் சப்தம் பக்கத்துக் கிரவுண்டிலிருந்து வருகிறது என்று சொன்னார், சரி, காலையில் மேலக் காத்மாண்டு பார்த்தாகிவிட்டது, இப்பொழுது கீழக் காத்மாண்டு பார்க்கலாம் என்று மறுபடியும் கிளம்பினேன்.

ஜூத்தஸடக்கின் முடிவில் சுமார் இரண்டு மைல் நீளமுள்ள ஒரு மைதானத்தில் ராணுவம் அணிவகுத்து, பலவித பயிற்சிகள் நடந்துகொண்டிருந்தன. சுமார் முக்கால் மைல் அகலம் உள்ள கிரவுண்டில் இடமே இல்லாமல் ராணுவம் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தது.

ராணுவத்தினர் எல்லோரும் கூர்க்கர்கள். கூர்க்கர்கள் கூர்க்கா என்ற ஜில்லாவிலிருந்து வருபவர்கள். கூர்க்கர்கள் குள்ளமாக இருக்கிறார்கள்; முகம் மரத்தட்டுப் போல தீர்க்கமான அவயவம் எதுவும் இல்லாமல் இருக்கிறது. ஒருவரைப் பார்த்தாற்போல் மற்றவர் இருக்கிறார்.

கூர்க்கர்கள் மிகவும் பலிஷ்டர்கள் என்பதுடன் பொறுமைசாலிகளும் கூட. இல்லாவிட்டால் ஒடுக்கும் குளிரில் அவர்கள் வெறும் காக்கி உடுப்புகளுடன் எப்படித் தாக்குப்பிடிக்கமுடியும்? கூர்க்கர்கள் சர்க்காருக்கு மிகவும் விசுவாசம் காட்டுபவர்கள். ராஜா இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி "தீன் சர்க்காரை" நாங்கள் கைவிடோம் என்று மார்தட்டினார்கள். நேப்பாளத்தில் "தீன் சர்க்கார்" என்பது பிரதம மந்திரியைக் குறிக்கும், இவருக்கு, 'தீன் சர்க்கார்' என்று பெயர் வந்ததற்குக் காரணம் இவர் பெயருக்கு முன் 'ஸ்ரீஸ்ரீஸ்ரீ" என்று போடுவது வழக்கம். மகாராஜா என்ற பட்டமும் பிரதமருக்கு உண்டு. உண்மையில் அரசரான திரிபுவனரை மகாராஜாதிராஜ் என்றும் "பாஞ்ச் சர்க்கார்" என்றும் அழைக்கிறார்கள். "பாஞ்ச்" என்றால் ஐந்து; அரசருக்கு ஐந்து ஸ்ரீ பட்டங்கள் உண்டு, எப்படி "ஐந்து" சர்க்காரும் "மூன்று சர்க்காரும்" நேப்பாளத்தில் உண்டானார்கள் என்பது ஒரு பெரிய பாரதம். அதுதான் அரசர் திரிபுவனர் நேப்பாளத்தை விட்டு இந்தியா வந்து நேப்பாள அரசியல் படத்தை மாற்ற முயற்சித்ததற்குக் கராரணம். அதைப்பற்றிப் பின்னால் எழுதுகிறேன்,

ராணுவப் பயிற்சி மைதானத்திற்குப் பின்புறம், அதாவது கிழக்கே மகாராஜா மோகன் ஷம்ஷேர்ஜங் பகதூர் ராணாவின் இருப்பிடமும் அரசாங்க காரியாலயமும் இருந்தன. இந்தக் கட்டிடம் ஒரு பிரம்மாண்ட மாளிகை. இதன் பெயர்தான் சிங்க தர்பார். சுமார் 1000 அறைகள் கொண்ட இந்தக் கட்டிடத்தை ஒரு மயன் மாளிகை என்றே சொல்லவேண்டும். அதைப்பற்றிக் கொஞ்சம் விவரமாகப் பின்னர் சொல்லுகிறேன்.



(காத்மாண்டுவில் காணப்படும் பல குதிரைச் சவாரி சிலைகளுள் ஒன்று. இது தற்போதைய பிரதமரின் தகப்பனுர் சந்திரஷம்ஷேர் சிலை.)

கிட்டத்தட்ட ஒவ்வொரு பெரிய ராணு வீடும் ஒரு கோட்டை. முக்கிய ராஜபாட்டையை ஒட்டி அதற்குக் கிழ்புறம் பூராவும் மிகவும் ஆடம்பரமான கட்டிடங்கள் காணப்பட்டன. அவை பெரும்பாலும் ஆளும் ராணுவர்க்கத்தின் இருப்பிடங்கள். காத்மாண்டுவின் தெற்கே பாக்மதி என்ற மிகவும் புண்ணியமான நதி ஒன்று ஓடுகிறது. இதில் டிசம்பர் மாதக் குளிரிலும் ஏழை ஜனங்கள் ஸ்னனம் செய்துகொண்டிருந்தார்கள். பாக்மதியே காத்மாண்டுவின் தெற்கு எல்லை. இங்கிருந்து நேரே வடக்கே ராஜபாட்டை சுமார் மூன்று மைல்களுக்கு ஓடுகிறது. வடபுறத்தில்தான் இந்திய ஆங்கிலேய ஸ்தானீகர்கள் காரியாலயங்களும இருப்பிடங்களும் இருக்கின்றன.

ஏற்கனவே நான் சொன்னபிரகாரம், காத்மாண்டுவில் இருக்கும் கோவில்களுக்குக் கணக்கு இல்லை. காத்மாண்டுவுக்கு வெளியே மூன்று முக்கிய கோவில்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. அவை முறையே பசுபதிநாத். ஸ்வயம்புநாத், பௌத்தநாத் கோவில்கள். இவைகளைப் பற்றி விரிவாகத் தான் சொல்ல இயலும்.

காத்மாண்டு எப்படி உண்டாயிற்று என்பதுபற்றி ஒரு கதை இருக்கிறது. காத்மாண்டுவுக்குப் பழங்காலத்தில் சாந்திபுரி என்ற பெயராம். அப்பொழுது அது ஒரு பெரிய ஏரியாக இருந்ததாம். மலையில் வசித்த ஜனங்கள் ஒரு காலத்தில் பகவானைக் குறித்துப் பிரார்த்தித்தார்களாம்: "ஏ, பகவானே, எங்களுக்கு உயிர்வாழச் சமதளமான இடவசதி செய்து தாராய்" என்று. பகவான் ஒரு பெரிய (எவ்வளவு பெரிய என்று கேட்காதீர்கள்) வாளை ஏரியை நாற்புறமும் சூழ்ந்திருக்கும் மலையைப் பார்த்து ஒரு வீசி வீசினுராம். வாள் தெற்குப்பக்கம் விழுந்து அங்கு ஒரு பிளவு ஏற்பட்டு, தண்ணீர் ஏரியிலிருந்து ஓடி ஏரியாக இருந்த இடம் இப்பொழுது காத்மாண்டு ஆயிற்றும். தண்ணீர் தெற்கே ஓட ஆரம்பித்ததல்லவா? அதுதான் பாக்மதியாக ஓடுகிறதாக நம்பிக்கை.

காத்மாண்டுவை எப்பொழுது ராணுக்கள் பிடித்தார்கள். அவர்களுக்கு முன்னுல் யார் சாந்திபுரியை ஆண்டார்கள் என்பதெல்லாம் மிகவும் ருசிகரமான விவரங்கள் என்பதுடன் அதிலிருந்துதான் நேப்பாளத்தைப் பற்றிய சரித்திரம் கொஞ்சம் தெரிகிறது.

சாந்திபுரியை முன்னுல் ஆண்டுவந்தவர்கள் நெவார் என்னும் ஜாதியார்கள். இவர்கள்தான் நம் தென்னிந்திய நாயர்கள் (மலையாளம்) என்று சொல்லிக்கொள்ளுகிருர்கள். இதற்கும் சரித்திர பூர்வமாக ஆதாரம் இருப்பதாக நேப்பாள சரித்திராசிரியரான லாண்டன் (landon) கூறுகிருர். மல்லவர்கள் ஆட்சி தெற்கே வேரூன்றியிருந்த சமயம் ரஞ்சித்மல்லா என்பவர் தலைமையின் கீழ் தெற்கேயிருந்து நேப்பாளத்தை அடைந்து அங்குச் சாந்திபுரியில் தங்கள் அரசை ஸ்தாபித்ததாக வரலாறு. அந்தச் சமயம் மல்லாவின் தலைமையின் கீழ் ஒரு நாயர் படை சென்றதென்றும் அவர்கள் சந்ததியார்கள்தான் தாங்கள் என்றும் நெவார்கள் சொல்லுகிருர்கள். நெவார்கள் கூற்று எவ்வளவுதூரம் உண்மை என்று சொல்வதற்கில்லை. ஆனுல் காத்மாண்டுவில் காணப்படும் ஜனங்களில் நெவார்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்களாகத் தோன்றுகிறது. தவிர, நெவார் பெண்மணிகள் மிகவும் லக்ஷணமாகவும் சிற்சில பழக்க வழக்கங்களில் தென்னுட்டு அனுஷ்டானம் உள்ளவர்களாகவும் இருக்கிருர்கள். நெவார்கள் ஆட்சி உச்சத்தில் இருந்தபொழுது நெவார்கள் ராஜ்யம் சாந்திபுரி, பக்தபுரி, பாடன் (Patan) மூன்று ராஜதானிகளைக் கொண்டதாக இருந்ததாம். அப்பொழுது கூர்க்கர்கள், தங்கள் ஊருக்கு (அதாவது கூர்க்க ஜில்லா) வெளியே வியாபிக்க வில்லை. இன்றும் இந்த மூன்று இடங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள்தான் நேபாளத்தில் முக்கியமான ஸ்தானங்கள். ஆகையால் சுபாவத்திலேயே யுத்தப் பிரியர்களான கூர்க்கர்கள் காத்மாண்டுவைச் சுற்றியுள்ள நெவார் ராஜ்யத்தின் மீது கண் வைத்து அதைப் பிடித்ததில் ஆச்சரியமில்லை. நெவார்களின் ஆட்சியின் சின்னங்கள் யாவை, அவர்கள் வருங்காலத்திய சந்ததிக்காகச் சாதித்தது என்ன, அவர்களின் ஆட்சி எப்படி வீழ்ந்து, ராணுக்களின் ஆட்சி ஸ்தாபிதம் ஆயிற்று என்பதை அடுத்த கட்டுரையில் விவரிக்கிறேன். (தொடரும்)

"லக்ஸ் டாய்லட் சோப் மிகவும் அற்புதமான அழகு சாதனம்"



என்று சொல்கிறார்

பத்மினி

இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை வசீகர
மாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 296-X30 TM

எஜமானி

தி. சேஷாத்திரி

சமையற்கட்டிலிருந்து வந்த சங்கரி அம்மாள் சற்றுநேரம் திகைத்து நின்றாள்; அவள் உள்ளே எழுந்த எரிச்சலும் வெறுப்பும் கோபமும் திரிவேணியாய் எழுந்து கலந்து சற்றுத் தடை பட்டு நின்றன, அணை தட்டுப்பட்ட வெள்ள நீர்போல.

ஓடிவரும் நீர் அணையின் ஒரு இடத்தைப் பொத்துவிட்டது; சங்கரி அம்மாள் 'அடதரித்திரப்பீடை; அனாதைப் பிணங்களை எல்லாம் அரண்மனையில் வைத்தால் பிறகு என்ன நடக்கும்?' என்று ஆத்திரம் திரக்கத்தினாள். பிறகு வேகமாக விழுந்தடித்து ஓடினாள் முற்றத்தைப் பார்க்க.

அங்கே ஓர் குழந்தை நின்றுகொண்டிருந்தது. எதிரே ஸ்டூல்மேல் ஒரு வெள்ளி வாளி சாய்ந்துகிடந்தது. அதிலிருந்து ஏதோ தைலம் கம் என்று வாசனையுடன் வழிந்துகொண்டிருந்தது. ஸ்டூல், அதிர்ஷ்டம் எண்ணெயில் ஊறிக்கிடந்தது. கீழே விழுந்த தைலம் ஆறாய் ஓடி எங்கோசென்று குளமாய்த் தேங்கியிருந்தது.

அந்தத் தைலம் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்த தைலம். வைத்தியன் வீட்டுக்கே வந்து காய்ச்சிக் கொடுத்தது. அதுவும் பிரசித்திபெற்ற கோட்டக்கல் வாரியர் சிஷ்யன் கோபிகிருஷ்ணமேனோன் தயாரித்தது. இரண்டு மூன்று நாள் காய்ச்சி உடனே எடுத்துவையுங்கள் என்று சொல்லியிருந்தான். அதை எடுத்துக் காய வைத்து உள்ளே எடுத்துவைக்கவேண்டியது வேலைக்காரியின் வேலை.

தைலம் போனது அவள் எரிச்சலைக் கிளறிவிட்டிருந்தது, அதிசயம் இல்லை.

அந்த ஸ்டூல் அருகே நின்ற அந்தக் குழந்தை ஸ்டூலில் தேங்கி இருந்த தைலத்தை ஒரு கையால் எடுத்து எடுத்து, தலையில் வைத்துக்கொண்டிருந்தது.

தங்கப் பதுமைபோன்ற குழந்தை. இளம் தொந்தி, குறுகுறுத்த கண்கள், சிரிக்கச் சிரிக்கக் குழியும் கன்னம். பாரதி சொன்னது போல் 'பார்த்தால் ஆவியே பறிபோம்.'

ஆம், சங்கரி அம்மாளின் ஆவியும் பறிபோய்க்கொண்டுதான் இருந்தது. அதைப் பறிப்பவள்போல் அவள் கையை ஓங்கி அந்த இரண்டு வயதுக் குழந்தையின் முதுகில் ஒரு அறை வைத்தாள்.

குழந்தை அப்படியே அலறி நின்றது. பயத்தில் கொஞ்சதூரம் தள்ளாடித் தள்ளாடி நடந்தது. ஒரு சுற்றுச் சுற்றி கீழே வைத்திருந்த தைல பாட்டில் மேலேயே விழுந்துவிட்டது! ஒரே அலறல்.

அந்த அலறல் ஒருவர் நடையை நிறுத்தி, திகைக்க வைத்தது. மற்றொரு பெண்ணுடைய நடையை துரிதப்படுத்தியது.

ஆபீசிலிருந்து வந்து கொண்டிருந்த சங்கரய்யர் அப்படியே கையில் ஹாட்டை (Hat) எடுத்தபடி நின்று விட்டார். இது என்ன எந்தப் பேய்தான் ஒரு இரண்டு வயதுக் குழந்

தையை இப்படிப் பேயறை அறையும்? மாலை ஆறு மணி வரை தைலத்தை யார் இவளை முற்றத்தில் விட்டுவைக்கச் சொன்னார்கள்? யார் கேட்பது?

கொல்லைக் கட்டிலிருந்து ஓடிவந்தாள் ஒரு பதினெட்டு வயதுப் பெண். குழந்தையின் தாயார் போலும். வந்தவள் குழந்தையைக் கூடப் பார்க்கவில்லை. அப்படியே தைலத்தைக் கையால் வாரி வாரி வெள்ளி வாளியில் சேர்க்க ஆரம்பித்தாள், 'அட, என்னடா கண்ணு? இப்படி நாசம் பண்ணிட்டயேடா?' என்று சொல்லிவிட்டு, 'இதற்காகத்தான், மாமி, இவ்வளவு நாழி பத்துத் தேய்க்காமல் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வேலைக்காரி வந்திருப்பாள்...

அவளை மேலே பேசவிடவில்லை. சங்கரி அம்மாள்"......போதும் போதும் நிறுத்தடி! குழந்தையை எடுத்துக்கொண்டு போ. அலறது பாரு அத்தனையும் செய்துவிட்டு."

அப்பொழுதுதான் திரும்பிப் பார்த்தாள். அவள் குழந்தையை. தலை முழுவதும் தைலம். ரொம்ப குளிர்ச்சியுடைய தைலம். அதோடு முதுகில் ஐந்து விரலும் பதிந்து குழந்தையின் உடலையும் தாயின் உள்ளத்தையும் ஒடிக்கும் அடி, என்ன ஆகுமோ? அவள் துடி துடித்து எழுந்தாள். குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு கொல்லைக் கட்டுக்கு ஓடிவிட்டாள்.

சங்கரய்யர் இவ்வளவையும் பார்த்தார். குழந்தை முதுகையும் பார்த்தார்......மனைவியின் முகத்தையும் பார்த்தார். ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு உள்ளே போய் விட்டார்.

சங்கரி அம்மாள் முணு முணுப்பு வெகுநேரம் கேட்டுக் கொண்டிருந்தது. இந்த "அநாதைகளைக்" குடி வைத்த சங்கரய்யரையும் அவள் வசவு அடிக்கடி அணைந்து கொண்டது என்பதை அவர் அறிவார். அவர் உள்ளம் குமுறி எழுந்தது!

அன்று இரவு மணி ஒன்பது இருக்கும். சங்கரி அம்மாள் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். சங்கரய்யர் ஏதோ யோசித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருந்தார். இவ்வளவில் 'சார் சார்!' என்று சத்தம் கேட்டது.

'யார் ராமநாதனா? என்று கேட்டவாறே சங்கரய்யர் வெளியே வந்தார்.

"ராமநாதா? ஏன் அப்பா? என்ன உன்முகம் இப்படி இருக்கிறது?

'ஸார். குழந்தைக்கு......!' ராமநாதனால் மேலே பேச முடியவில்லை."

'ஜுரமா?' என்று கேட்டுக் கொண்டே சங்கரய்யர் கொல்லைப் பக்கம் போகத் தயாரானார். ராமநாதனும் தொடர்ந்தான்.

'ஆம் குழந்தைக்கு ஜுரம்தான். ஜுரம் அதை வறுத்து எடுத்துக்கொண்டிருந்தது. குழந்தை அடிக்கடி முணகிற்று, விழிப்பதும் நன்றாக இல்லை.

சங்கரய்யர் 'குழந்தை அடியினால் பயந்து விட்டதோ?' என்றார். ஜானகி மிகவும் மரியாதையாய்ப் பதற்றமில்லாமல் 'இல்லை மாமா, தைலம்— பச்சைத் தண்ணீரில் அலம்பியது,ஜுரம் வந்துவிட்டது!' என்றாள்.

சங்கரய்யர் அவளைப் பார்த்தார். அவள் தலையைக் கீழே குனிந்து கொண்டாள். 'இருக்கலாம்; அவள் சொன்னதே சரியாயிருக்கலாம். ஆனாலும் அடியின் கோளாறும் இல்லை என்று சொல்லமுடியாது '

ராமநாதன் மெதுவாக ஆரம்பித்தான்.

'சார்! டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து காட்டினால் தேவலை. கையிலே பணமே இல்லை......

சங்கரய்யர் திடீர் என்று சொன்னார்—

"ராமநாதா கவலைப்படாதே, நானே டாக்டரை வரவழைக்கிறேன். நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். அம்மா, ஜானகி நீ அம்மாமியிடம் கோபம் கொள்ளாதே அவள் வெகுளி.–"

"அது என்ன மாமா அப்படிச் சொல்கிறீர்கள்? அந்த அம்மாமியை என் அம்மா மாதிரியல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்...."

சங்கரய்யர் உடனே போன் இருக்கும் அறைக்குச் சென்று டாக்டருக்குப் போன் செய்தார். டாக்டர் வந்தார். அவர் வந்து போகும் மட்டும் சங்கரய்யர் அறையிலேயே இருந்தார். போகும்போது டாக்டரை என்ன என்று கேட்டார்.

'ஒன்றுமில்லை, சாய்ந்தரநேரம் தைலத்தைத் தேய்த்திருக்கிறாள், தாயார். சிறுசு தானே, உடனே ஜுரம் வந்துவிட்டது.'

'வேறு ஒன்றுமில்லையே?'

"இல்லை, அது பிடிவாதம் செய்ததற்காகக் கொஞ்சம் கடுமையாக நடத்தியிருப்பாள் போலும் இருக்கிறது. அதிர்ச்சி வலுவாய் இருக்கிறது. ஆனாலும் கவலையில்லை." டாக்டர் போய்விட்டார்.

சங்கரய்யர் வேகமாக வந்து 'சங்கரி' என்று கூப்பிட்டார்.

சங்கரி பாம்புபோல் சீறினாள். 'நான்தான் இந்த விவகாரமே வேண்டாம் என்று சொன்னேனே. அப்பொழுது பிடிவாதமாகக் கொண்டுவந்து தள்ளினீர்கள். தைலத்தைக் கொட்டும்பொழுது யார்தான் பார்த்துக்கொண்டிருப்பார்கள்?'

சங்கரய்யர் பார்த்தார்: ஒன்றும் மேலே பேசத் தோதாகவிருந்தால்தானே.

வாஸ்தவம்தான், ராமநாதன் தன் உடன் வாசித்தவன் பிள்ளை. இங்கே புதிதாக வேலைக்குவந்தான். வேறு எங்கும் இடம் கிடைக்கவில்லை. 'நமக்கோ வீடு பெரிதாக இருக்கிறது, வீட்டிலும் குழந்தைகள் இல்லை. அவளுக்கும் போதுபோக்காக இருக்கும்' என்று எண்ணிக் கொண்டுவந்து வைத்து விட்டார். அவள் அப்பொழுதே சொன்னாள் 'வேண்டாம்' என்று. அவளுக்கு ஒரு சாதாரண குமாஸ்தாவை அந்த வீட்டில் குடிவைத்துக்கொள்ள விருப்பமில்லை, அதனால் என்ன?

பெண்மைகூட இப்படி ஒழிந்துவிடுமா என்ன?

ஒரு பெருமூச்சுவிட்டார் சங்கரய்யர். "அடி அசடே போ! உனக்கு அந்தப் பெண்ணின் குணம் தெரியவில்லை. தெரியும்போது நீ அழக்கூட முடியாதபடி நேர்ந்துவிடாமல் இருக்கவேண்டும். கடவுள்தான் உனக்கு நல்ல புத்தி தரவேண்டும்!' என்று சொல்லிவிட்டு ஆபீஸ் அறைக்கே சென்றுவிட்டார்.

அங்கேயே தூங்கிவிட்டார்போலும்!

"குழந்தைக்கு ஜுரம் வந்த மூன்றாம் நாள் சங்கரி அம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது. அது அவள் தம்பி—கடைக் குட்டித் தம்பி—எழுதிய கடிதம்.

அவன் எழுதியிருந்தான்.

மதுரை,
3.........'51

அன்புள்ள அக்காவுக்கு,

நான் இங்கே வந்து மூன்று நாள் ஆகிறது. இங்கே ஆறு மாதம் இருக்கவேண்டும். பிறகு பட்டணத்துக்கே மாற்றிவந்து விடலாம் என்றிருக்கிறேன். ஊர் புதிதானபடியால் கஷ்டமாயிருக்கிறது. ஹோட்டல்களில் தங்க மனம் வரவில்லை.

ஆனாலும் ஒரு விஷயம். ஒரு ரிட்டயர்ட் போஸ்ட் மாஸ்டராம். அவர் எப்படியோ எனக்குச் சிநேகமாய் விட்டார். அவருக்குப் பெரிய வீடு இருக்கிறதாம். அங்கேயே வந்து இரு என்கிறார்.

நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். வாடகை கொடுத்துவிட்டால் போகிறது. அங்கேயே போய்விட்டாலும் விடலாம்,......

இங்ஙனம்
நாகமணி.

* * *

இதைப்படித்த அன்று இரவு சங்கரி அம்மாள் மெதுவாகக் கணவனிடம் ஆரம்பித்தாள்;

"நாகமணியை மதுரைக்கு மாற்றியிருக்கிறாளாம் ....''

''ஆமாம், எனக்கும்தான் எழுதியிருக்கிறான். அதற்கென்ன!"

"ஒன்றுமில்லை ஊர் புதிது. அவன் குழந்தை. என்றைக்கும் செல்லமாய் வளர்ந்தவன்.''

'ஆமாம், அதற்கென்ன இப்பொழுது? வேலை பார்க்கிற தென்றால் செல்லத்தை எல்லாம் ஞாபகப்படுத்தி என்ன செய்வது?'

'ஆமாம், நமக்கு என்றால் பட்டுக்கொள்ளாமல் பேசுவீர்கள். ஊராராத்துக்கு என்றால் ஒரு சிரமமும் இருக்காது.........'

'இந்தா இந்தா. வீணாக யாரையும் வறுத்து எடுக்காதே. அவரவர் படற கஷ்டம் போதும், உனக்கென்ன வேண்டும் என்று சொல்.........'

'இல்லை உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது மதுரையில் இல்லையா? என்று கேட்க வந்தேன் ......'

''ஊம்......''

''என்ன ஊம் கொட்டறயளே?''

'பிறகு என்ன செய்யச் சொல்றே தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்...... ஆனால்......'

'என்ன ஆனால்?......'

அதற்குமேல் சங்கரய்யர் பல்லைக் கடித்துக் கொண்டு சும்மா இருந்துவிட்டார். அவர் கடைசியில் உருப்புரியாமல் செய்த ஒரு சத்தம் 'யோசித்துப்பார்த்து எழுதுகிறேன்,' என்றதற்கு அறிகுறியாகத் தோன்றியபடியால் சங்கரி அம்மாளும் தூங்கிவிட்டாள்.

4

குழந்தைக்கு ஜுரம் வந்து ஏழு நாளாயிற்று: இப்பொழுது நன்றாய்ச் சௌகரியமாய்விட்டது. உடனேயே டாக்டரை அழைத்து வந்ததனால் தான் சௌகரியமாய்விட்டது என்று அந்த இளந்தம்பதிகள் நம்பினார்கள். சங்கரய்யரோ, ஜானகியினுடைய இடையறா ஊக்கத்தாலும் உழைப்பாலும்தான் குழந்தை பிழைத்தது என்று எண்ணினார். அவளும் இரவையும் பகலையும் ஒன்றாக்கித் தூக்கத்தை விழிப்பிலே மறைத்து, குழந்தையின் உயிரின்மேல் யமன் பாசக் கயிறே படாதபடி செய்துவிட்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. ஜானகிக்கு இரண்டு சுமங்கலிகளுக்கு வெற்றிலை சீவல் குங்குமம் கொடுக்கவேண்டும் என்று தோன்றவே முதன் முதலில் வீட்டுக்கார அம்மாமியையே நமஸ்காரம் செய்து கூப்பிட்டாள்.

அவளுக்கு அன்று சந்தோஷம். அவள் தம்பி அன்று கடிதம் எழுதியிருந்தான். கடைசியில் அந்த ரிட்டயர்ட் போஸ்ட்மாஸ்டர் பிடிவாதம் செய்து அழைத்துப்போய் விட்டிருந்தார். வீடு பெரிதான வீடு. சமையற்காரன் வேலைக்காரர்கள் இருந்ததால் எல்லா வசதியும் இருந்தன. சாப்பாடும் அங்கேதான். பையன் மிக உற்சாகமாக எழுதியிருந்தான்.

பிகுவைத் தளர்த்தி விட்டால் 'அனாதைகள்' சாசுவதமாகத் தங்கிவிடும் என்று முதலில் யோசித்தாள் சங்கரி. கடைசியில் உள்ளே இருந்த சந்தோஷம் தூண்டவே எல்லாரும் வந்து போனபிறகு அங்கே போய்ச் சேர்ந்தாள். ஜானகியும் சந்தோஷம் துள்ள எழுந்தாள். "அம்மாமி, வாங்கோ வாங்கோ—ஏலே அதைப் பார்ரா உங்க பாட்டி'' என்று கூப்பிட்டு குழந்தையையும் வாரி எடுத்துக்கொண்டாள். அவளை அங்கே நாற்காலியில் அமர்த்தி, குழந்தையை அவள் காலடியிலேவிட்டாள். நன்றாக நமஸ்காரம் செய்தாள்.

இதற்கிடையிலே சங்கரி அம்மாளுடைய கண்கள் ஒரு கவரின் மேல் எழுதியிருந்த மேல்விலாசத்தைக் கண்டன. என்ன? இது யாருடைய விலாசம்? இந்த விலாசத்தில்தானே நாகமணியும் இருக்கிறான்?

" அது ஏதம்மா கடுதாசி?"

வெற்றிலையைத் தட்டில் அடுக்கிக்கொண்டே ஜானகி, "அது என் அப்பா, மாமி. குழந்தைக்கு ஜுரம் வந்ததிலிருந்து எழுதவேயில்லை. அவரால் தினம் கோபித்துக்கொள்கிறார். இன்றைக்காவது எழுதிக்கொடு என்றார். இன்றைக்கும் அவர் போவதற்குள் எழுதவில்லை. இப்பொழுது தான் எழுதிவைத்தேன்..." என்றாள் கள்ளங்கபடமில்லாமல்.

ஒரு நிமிஷம் சங்கரி வெற்றிலையை எடுத்துக் கொண்டே யோசித்தாள். உள்ளே பல எண்ணங்கள் எழுந்து சண்டையிட்டன. கடைசியில் வாத்ஸல்யமே வெற்றிகொண்டது. தம்பியை எக்காரணத்தைக்கொண்டும் அவன் மனதுக்குப் பிடித்த இடத்திலிருந்து விரட்ட மனம் வரவில்லை.

" சரிதான், அப்பொழுதே எழுதவேண்டாமோ. போகட்டும், என்ன எழுதியிருக்கிறாய்?..." அவளறியாமலே கேட்டுவிட்டாள்.

" வாசித்துக்காட்டுகிறேன் பாருங்களேன்..."

"வேண்டாம், வேண்டாம்" என்றபோதே அவள் வாசித்துக் காட்டினாள். சங்கரி அம்மாள் அடித்ததைப்பற்றி அதில் ஒருவார்த்தையும் இல்லை. அதற்கு மாறாகச் சங்கரிஅம்மாளின் தூண்டுதலின் மேல் சங்கரய்யர் செய்த உதவியைப்பற்றி நல்ல வர்ணனை இருந்தது.

சங்கரி அம்மாள் மனம் ஒரு நிமிடம் நிலையில் இல்லை. இது என்ன உலகில் தான் ஒருத்திதான் பொல்லாதவளா?

அவள் மனம் கிளர்ந்தது அப்படியே ஜானகி காலடியில் புரளலாமா என்று புரட்சி செய்தது.

அவள் அடக்க முடியாமல் சொன்னாள்:

"ஜானகி தெரியுமா ஒரு சேதி. என் தம்பியும் அங்கே தான் இருக்கிறானாம். உங்கள் அப்பாதான் பிடிவாதமாய் அங்கே இருக்கவேண்டும் என்றாராம்......"

மேலே சொல்லவிடாமல் தடுத்து...... ஜானகி, 'அப்படியா அம்மாமி, சந்தோஷம். நல்ல வேளையாகச் சொன்னீர்கள். சரி, இந்தக் கடிதத்தில் சேர்த்தே எழுதுகிறேன்......' என்று சொல்லி உடனே பேனாவை எடுத்து "அப்பா நீங்கள் அழைத்து வைத்துக்கொண்டிருக்கும் பிள்ளை அம்மாமி தம்பிதான். அவர் சிறுசு: சங்கோஜி. ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்........" என்று எழுதி முடித்தாள்.

சங்கரிக்குச் சும்மா இருக்க முடியவில்லை.

'ஏன், அம்மா ஜானகி. நான் இவ்வளவு பொல்லாதவளாக இருக்கிறேனே, என்னிடம் நீ மட்டும் ஏன் அம்மா இவ்வளவு......'

'என்ன ....சொல்லுகிறீர்கள், மாமி! வந்த புதிதிலே இருக்க இடமில்லாமல் தவித்த எங்களுக்கு வீடு கொடுத்தீர்களே, நீங்களா பொல்லாதவர்கள்! குழந்தைக்கு ஒன்று என்றால் உடனே மாமாவை அனுப்பி உதவி செய்தீர்களே........'

பரிகாசமா செய்கிறாள்? இல்லை. அவள் அம்மாதிரிதான் எண்ணியிருக்கிறாள் என்று கண்டாள் சங்கரி,

'ஏண்டி, நான் அடித்துத்தானே ஜுரம் வந்தது...?'

'ஆமாம், அம்மாமி அடித்து ஜுரம் வருகிறது. அந்தத் தைலத்தைக் கொட்டினால் கோபம் வரக் கூடாதாக்கும்......'

இவளிடம் பேசி என்ன செய்கிறது?

* * *

அன்று சாயந்தரம் சங்கரய்யர் வரும்போதே 'இனிமேல் நீ சௌகர்யமாயிருக்கலாம்!' என்றார்.

'என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள் சங்கரி அம்மாள்.

'ராமநாதன் வேறு இடம் பார்த்துவிட்டான். முதல் தேதிமுதல் போகப்போகிறான்.''

சங்கரி பதில் பேசாமல் கண்ணீர் சொரிந்தாள்.

சங்கரய்யருக்கு அதிசயமாயிருந்தது.

என்ன? என்றார்.

"அவர்கள் போகவேண்டாம். நான் பெரிய பிசகு பண்ணிவிட்டேன். நீங்கள் சொன்னபடி அவர்கள் உள்ளபடி பெரிய மனிதர்கள்......''

'அதை எப்படி திடீர் என்று கண்டுகொண்டாய்?'

''அதை எதற்குக்கேட்கிறீர்கள்? அதைச் சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது...'' அவள் மேலே குரல் தழுதழுக்கப் பேச முடியாமல் நின்றாள்.

சங்கரய்யர் தன் மனைவியின் இந்த நிலையைப் பார்த்துத் திகைத்தேவிட்டார்.

பெருமையே காட்டிவரும் பெண்கள் தைந்ய நிலைகாட்டினால் தாளாது.

''சரி, என்ன செய்யவேண்டும்?'' என்றார்.

''அவர்கள் இங்கே இருக்கும்வரை இந்த வீட்டை விட்டுப் போகக் கூடாது.''

''ஆறு மாதம் வாடகையை அல்லவா அட்வான்சாகக் கொடுத்திருக்கிறான் அவன்.''

சங்கரி குறை கூறினாள். நீங்கள் வேண்டுமென்றே என்னைத் தண்டிக்கிறீர்கள். இனி ஜானகி இல்லாமல் என்னால் இருக்கமுடியாது.''

சங்கரய்யர் பார்த்தார் '...... சரி போ. அவளிடம் சொல்லிவிடுகிறேன்.'

''வாடகை அட்வான்ஸ்?''

''அதை நானே பொறுத்துக்கொள்கிறேன் போ. இன்று உனக்குக் கிடைத்த சந்தோஷத்திற்கு இருநூறு இருநூற்றைம்பது ரூபாய் ஒரு பெரிதல்ல. ஒருகால் திருப்பிக் கிடைத்தாலும் கிடைக்கலாம், கிடைக்காது போனால் போகட்டும்''

சங்கரி அம்மாள் சந்தோஷம் அடைந்தாள். சங்கரய்யரும் பெருமிதம் அடைந்தார்.

ருசிமிக்க
தம் கோவி

டால்டாவில் தயாரித்தது

எல்லோரும் டால்டாவை விரும்புகிருர்கள். ஏனென்ருல் அது எல்லா சமையலுக்கும் உகந்தது. ருசியானது, ஊட்டமளிப்பதும் கூட! சுத்தமானது, கைபடாமல் சீல் செய்த டின்களில் எப்பொழுதும் புதிதாகவும் துப்புரவாகவும் கிடைக்கிறது.

சுலபமாக சீக்கிரம் தயாரிக்கும்முறை:

முழு காலிபிளவரை கழுவவும். நீரை வடிக்காமல் உப்பைத் தடவவும். டால்டா கலந்த அரைத்த பச்சை மசாலாவை மேலும் கீழும் தடவி அதை வாணலியில் வைக்கவும். வாணலியை இறுக மூடி, பிசைந்த மாவினுல் இடைகளை அடைக்கவும். இளம் சூட்டில் வேகவும். இடையிடையே குலுக்கவும். மசாலாசேர்க்காமலே ருசியாக இருக்கும்.

புதிய டால்டா சமையல் புத்தகம் — ஆங்கிலத்தில் — படங்கள் 80 கொண்டது — ஆர்ட் காகிதம் — 300 பக்கங்கள் — அகில-இந்திய, ஐரோப்பிய தின்பண்டங்கள் — ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறை இவைகளைப்பற்றிய குறிப்புகள் — விலை ரூ. 1/- தான் — தபால் செலவு அணு 8 தனி.

தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 148-172 TM

பலி ஆடு

கோமதி சுப்ரமணியம்

'அக்கா நம் வீட்டுக்கு யார் வந்திருக்கா பாரேன்...! ராமுவின் குரல் என் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சகஜமாகப் பேசினாலே வீடு இடிந்து விடும். நண்பனோடு வந்திருந்த குஷியில் பேசினால் கேட்கவும் வேண்டுமா?

புஸ்தகப் புழுவாய் ஒன்றிப் போயிருந்த எனக்கு அவன் அழைப்பு என்னவோ போலிருந்தது.

வந்தவர்கள் குரலுக்கு மேலான தட தட சப்தத்துடன் வீட்டினுள் நுழைந்துவிடவே தலையைத்தூக்கிப் பார்த்தேன்.

"யார் புதுமாப்பிள்ளை ரவியா, வா அப்பா, எப்போது வந்தாய்" என்ற என் கேள்விக்குப் பதிலளிக்க மனமில்லாதவனாய் முகத்தைத் தூக்கிக்கொண்டிருந்தான் ரவி.

"உன்னோடு, 'டு' அவன்" என்று நண்பனுக்கு வக்கலாத்து வாங்கிப் பேசினான் ராமு.

'ஏன், 'என்று நான் கேட்கு முன்னதாகவே அவனே பதிலளிக்கத் தொடங்கி விட்டான்.

"அவன் கலியாணத்திற்கு உன்னை ரொம்பவும் எதிர்பார்த்திருக்கிறார்கள். நீ வராத கோபம்......"

"இதுதானே பரவாயில்லை. அவன் மனைவிதான் வந்ததும் வராததுமாக நாத்தனார் மீது புகார் பத்திரம் வாசித்து விட்டாளோ என்று பயந்தேபோனேன்." இருவரும் சிரித்தார்கள்.

"வரவேண்டு மென்றுதானிருந்தேன்"

"அதற்குள் உடம்புக்கு வந்து விட்டது. அப்படித்தானே........." என்று இடைமறித்துப் பேசினான், ரவி.

"இப்பொழுதாவது பேச மனம் வந்ததே. போகட்டும். வந்தவன் ஏன் நிற்கிறாய்? இப்படி உட்கார்" என்று நாற்காலியை இழுத்துப்போட்டேன்.

"அவனுக்கு உட்கார நேரமேது? நாளை மறுவீட்டு மாப்பிள்ளையாகப் போகிறான். அதற்கு அழைப்பதற்காகத்தான்........."

"ஆமாம் அவசியம் வரவேண்டும். அதற்கும் ஏதாவது சால்சாப்பு...... சொன்னீர்களானால் உங்கள் வீட்டுப் பக்கமே வரமாட்டேன்." என்ற ரவியைத் தட்டிக் கொடுத்துப் பதில் கொடுத்தான் ராமு.

"அப்படி சொல்லிவிடாதேயப்பா. அக்கா, உனக்குப் பிரமாத விருந்து ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாள்." என்று பேச்சினூடாக என்னைக் குறும்பாக நோக்கினான் ராமு.

"பார் பார் ரவி, எனக்கு நன்றாகச் சமைக்க வராதென்பதை உன் நண்பன் சுட்டிக்காட்டிச் சொல்வதை......" என் குறையை ரவி ஏற்றுக்கொண்டானோ இல்லையோ ராமுதான் பதில் சொன்னான்.

"அக்கா, நான் அப்படிச் சொன்னேனா? உன் குற்றமுள்ள நெஞ்சு ஏன் அப்படிக் குறுகுறுவென்று அடித்துக்கொள்கிறது......... அக்கா சகுந்தலா சமையலில் வெகுதுடியாம்"

"சகுந்தலாவா......"

"சரியாப் போச்சு போ. இவ்வளவுதானா நீ தெரிந்துகொண்டது. அவள் தான் மிஸஸ் ரவிச்சந்திரன் இப்பொழுது புரிந்ததா"

"ரவி அதிர்ஷ்டசாலிதான்"

"சந்தேகமா... பெண்ணின் நிறம் ஒன்றே போதுமே"

"ஏன் அவன் நிறத்துக்கென்ன, அவனும் சிவப்பு. அதேபோல் பெண்ணும் சிவப்பாக அமைந்திருப்பது சந்தோஷப் படக்கூடிய விஷயமல்லவா..." என் போக்கில் பேசிக்கொண்டே போனேன்.

இருவரும் ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியுடன் நோக்கிச் சிரித்துக்கொண்டனர்.

2

மறுதினம் எப்படியோ என் வேலைகளை ஒதுக்கிக்கொண்டு ரவியின் வீட்டையடைந்தேன்.

ரவி

சகுந்தலா—(ரவி மனைவி)

நான் சென்ற சமயம் முன் பக்கத்து அறையிலேயே ரவி யாருடனே பேசிக்கொண்டிருந்தான்.

என்னைக் கண்டதும் அவனுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த பெண் நாணிக் கோணிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகல முயன்றாள்.

"வாருங்கள் அக்கா! இதுதான்... உங்கள் சகுந்தலா" என்று எதிரே நின்ற அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்துவிட்டு என்னை அவளுக்கு அறிமுகப்படுத்தினான் ரவி.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்த அதிர்ச்சியில் நான்தான் ராமுவின் சகோதரி என்று சொன்னதையோ அவள் எனக்கு வணக்கம் தெரிவித்ததையோ நான் கவனிக்கவில்லை. என் மனக்குதிரை என்னை விட்டுப் பறந்துபோய் எங்கெங்கோ தறிகெட்டு ஓடத் தொடங்கியது.

பெண்ணின் நிறம் ஒன்றே போதுமே, என்ற ராமுவின் வார்த்தைகள் என் மனதில் தோன்றி என்னை என்னென்னவோ சிந்தனையில் ஆழ்த்திவிட்டன.

"விவாகத்திற்கு வராத குறைதான் அக்காவின் திகைப்புக்குக் காரணம்" என்று நிலையைச் சமாளித்தான் ரவி.

இதற்குள் அவனது தாயாரும் அவ்விடம் வந்துவிடவே யாவரும் குசலப் பிரச்னம் விசாரிப்பதில் தாவிவிட்டது பேச்சு.

"நீ கல்யாணத்திற்கு வராத குறை நிரம்ப உன் தம்பிக்கு. போகட்டும் இப்பொழுதாவது வரத் தோன்றியதே."

என்ற அம்மாவின் குறைக்கு ரவியே பதிலளித்துவிட்டான்.

"திருப்பித் திருப்பி அதையே சொல்லிக்கொண்டிருப்பானேன் அம்மா. அக்காவுக்குச் சாப்பாடு பண்ணி வை" என்று அவன் சொன்னபிறகே அம்மா நினைவுகொண்டவளாய் என்னைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அப்பொழுதே சாப்பிட்டு வந்திருந்ததால் சாப்பிடவும் முடியவில்லை: மறுத்துச் சொல்லவும் முடியாமல் திணறிக்கொண்டிருந்தேன், என் மனம்போல.

அந்த அம்மாவுடன் பேச்சுக் கொடுத்து எப்படியாவது விஷயத்தைக் கிரகித்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆவல் வேறு...சாப்பாட்டில் பொழுதைப் போக்குவதைப்போல் நேரத்தைப் போக்கினேன்.



ரவியின் தாயார்

ராமுவின் சகோதரி

சற்று வசதி வாய்த்தபோது கேட்டேவிட்டேன் என் சந்தேகத்தை. "ஏனம்மா, இருந்திருந்தும் ரவிக்கு இந்தப் பெண்தானா அகப்பட்டது......"

என் கேள்வியால் அந்த அம்மாவின் முகம் நிமிஷத்தில் மாறுபட்டு, ஏதோ ஒரு ரகசியத்தை என்னிடம் தெரிவிக்க விரும்பியவளாய், சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"உன்னிடம் சொல்வதால் தவறொன்றுமில்லையென்று நினைக்கிறேன். சாந்தி, ஒரு விஷயம்..." என்று நிறுத்தினாள் அம்மா...

"சொல்லுங்கள்..."

"வந்து......நம்ம ரவிக்குத் தாரதோஷம்... விவாகமாகி, சில நாளைக்கெல்லாம் முதல் மனைவி தவறிப்போவாள்..."

"அதற்கும் பெண் கறுப்புக்கும் என்னம்மா சம்பந்தம்"

"இன்னும் புரியவில்லையா உனக்கு. அழகான பெண் வாய்த்திருந்தால் இழக்கச் சம்மதிக்காதல்லவா மனம்... இரண்டாவது தடவையிலே நல்ல பெண்ணாகக் கொண்டுவந்தால் போகிறது..."

என் நெஞ்சு திக்கென்றது. அப்படியானால் சகுந்தலா...பலி ஆடு... ஆம், பலி ஆடுதான்...

எவ்விதக் களங்கமுமின்றி, புது மணப் பெண்ணுக்கே உரித்தான குஷியில் சிட்டுக் குருவியைப்போல் திரிந்துகொண்டிருந்த சகுந்தலாவைப் பார்த்தபோது ஏனோ என் மனதில்வேதனை யுறுத்திக்கொண்டிருந்தது

ஒரு பெண் அழகற்றவளாக இருக்கலாம். அதற்காக அவளைத் தோஷத்திற்குப் பலியிடத் துணிவது எத்தனை கொடுமை! அக்குடும்பத்திற்குப் பலி ஆடாக வந்திருப்பது சகுந்தலாவுக்கு மட்டும் தெரிந்திருந்தால்... புது மணத்தின் இன்பத்தை...களங்கமின்றி நுகர முடியுமா...இடையே ஒரு சந்தேகம்... ரவியும் இந்தச் சதிக்கு உடந்தையா?

நேரம்வளர வளரஎன் சந்தேகமும் வளர்ந்து கொண்டே போகவே என்னால் என் கலக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் அவ்விடத்திலிருந்து சமாளிக்க முடியாதென்று தோன்றவே விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன்.

3

அதற்குப்பின் ரவி என் வீட்டுப்பக்கம் வரவேயில்லை. எனக்கு அங்கே செல்ல விருப்பமுமில்லை. விரும்புவதற்கு நேரமுமில்லை. இடையே மாதமொன்று ஓடிவிட்டது.

"ஏன் ராமு, இப்பொழுதெல்லாம் ரவி நம் வீட்டுப் பக்கமே வருவதில்லையே. ஏன் உனக்கும் அவனுக்கும் ஏதாவது மனஸ்தாபமா" என்று கேட்டுவைத்தேன்.

"அப்படி யெல்லாம் ஒன்றுமில்லையே. ரவி ஊரிலிருந்தாலல்லவா வருவதற்கு? அவன்தான் சென்னை ஆஸ்பத்திரியில் தவமிருக்கிறானே."

என் எண்ணச் சுவரின் இடையே சிறு கீறல் விழுந்தது.

"ஏன் அவன் மனைவிக்கு உடம்பு......"

''மனைவியின் உடம்புக்கு வந்தால்தான் செல்ல வேண்டுமென்று கட்டுப்பாடா என்ன......''

அவன் மனைவிக்கு அசௌகரியம் வருவதைத் தானே எல்லாரும் எதிர்பார்த்திருக்க முடியும்.''

''உன் பேச்சு புதிராக இருக்கிறது...''

''இல்லை, உன் நண்பனின் வாழ்க்கைதான் அப்படி.''

கேலியாகச் சிரித்தான் ராமு. ''ரவியின் அம்மாவுக்கு ஒரு மாதமாக உடம்பு அசௌகரியம். படுத்த படுக்கையிலிருக்கிருள். நிலைமை அதிகமாக இருக்கிறதென்று நேற்று வந்த கடிதத்திலிருந்து தெரிகிறது.''

''உன் நண்பன் கடிதமெழுதினனு? ஆமாம். அங்கே உதவிக்கு யார் இருக்கிருர்கள்?''

''ஏன், அந்தப் பெண் சகுந்தலா...... அவர்களுடன்தானே சென்றிருக்கிறது. அவள் ஒருத்தி போதும் ஒன்பது குடுத்தனத்திற்குப் பதில் சொல்ல. அத்தனை அழகாகக் குடும்பம் செய்கிருளாம் அந்தப் பெண். அதோடுமட்டுமில்லை, மாமியாருக்காக உருகிச் சாகிருளாம். ராப்பகலாகக் கண் விழித்துப் பணிவிடை செய்வதைப் பக்கம் பக்கமாக வர்ணித்து எழுதியிருக்கிருன் ரவி.''

'வேண்டியதுதான். தன் மகனின் ஜாதகத்திலுள்ள தோஷத்திற்கு ஒரு பாவமுமறியாத பெண்ணைப் பலியிடக் கொண்டுவந்திருக்கும் மாமியாருக்காகப் பாடுபடவேண்டிய அவசியம்தான்' என்று சொல்ல விழைந்தது மனம்.

'பாவம், அப்பாவிப் பெண், என்று மட்டும் சொல்லி நிறுத்திக்கொண்டேன்.

'உன் அனுதாபம் அவசியமில்லாதது என்று நினைக்கிறேன். பெண்கள் பிறருக்குச் சேவை செய்யக் கடமைப்பட்டவர்கள்தானே... சகுந்தலா அவள் கடமையைத்தானே செய்கிருள்......'

ராமு சுபாவமாகவே அப்படிப் பேசுகிருனு. அல்லது என் வாயைக் கிளறி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிருனு என்பது புரியவில்லை. கேட்டுப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. திணறினேன். என்ன இருந்தாலும் ரவி அவன் நண்பன். நண்பனைப்பற்றியோ நண்பன் குடும்பத்தைப்பற்றியோ குறைவாகப் பேசினுல் அவன் மனம் பொறுக்குமா?

பல்லைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்துவிட்டேன்.

பின்னும் ஓர் தினம்.

''அக்கா, ரவி ஒருமட்டும் தாயாரை அழைத்து வந்துவிட்டான். அப்பா! அந்த அம்மா பிழைத்தெழுந்ததே தவப்பயன்தான்...'பேசிக்கொண்டே போனுன் ராமு.

'உடனே புறப்பட்டுவிடுவாயே வண்டிகொண்டு வரச்சொல்லட்டுமா...' அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சூள் கொட்டினேன்.

'ஏன் அக்கா, என்னவோபோலிருக்கிருய்......' மீண்டும் ராமுதான் பேசினுன். என் மனம்தான் பேசா உலகின் சஞ்சாரத்தில் ஆழ்ந்துவிட்டதே.

''அந்த அம்மாவைக் கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை. நேற்றுப்போயிருந்தேன். பேச்சுக்குப் பேச்சு மருமகளைப்பற்றிப் புகழ்ந்து தள்ளிவிடுகிருள். அவள்மட்டும் இல்லாவிட்டால் இந்தத் தடவை தான் பிழைத்திருக்கவே முடியாதென்றுகூடச் சொல்லுகிருள்.''

'அப்படிக்கூடச் சொன்னுளா, என்ன? என்று' தான் கேட்கத் துடித்தது. கேட்க முடியவில்லை. சூள் கொட்டுவதுதான் என் அப்போதைய பதிலாக இருந்தது.

'என்ன அக்கா அபார யோசனை......'

'ஒன்றுமில்லை. ஐயோ பாவம், என்று நினைத்தேன்!' வியாதிக்கார அம்மாவுக்குத்தான் என் அநுதாபம் என்று நினைத்திருப்பான் ராமு. ஆனுல் அது சகுந்தலாவுக்கு என்பது என் மனதைத் தவிர வேறு யாருக்குத் தெரியமுடியும்.

4

இளைத்துத் துரும்பாய் உருமாறிப்போயிருந்த ரவியின் தாயாரைக் கண்டபோது எனக்கே பச்சாத்தாபமாகிவிட்டது. 'எப்படி இருந்த உடம்பு இப்படி மாறிவிட்டது' என்றேன்.

'மனிதர்களின் மனமே மாறும்போது உருவம் மாறுவதுதானு பெரிது......' ஏதோ பொருள் புதைத்துப் பேசினுள் அந்த அம்மா.

'காலத்தின் மாறுதல்தான் காரணம்' என்று பொதுப்படையில் கூறி வைத்தேன்.

'அத்தை, ஆரஞ்சு கொண்டுவரட்டுமா......'

பரிவோடு வினவியவாறு அங்கே வந்த சகுந்தலாவைக் கண்டபோது என் நெஞ்சில் அடங்கியிருந்த புயல் கொந்தளித்தெழும்பியது.

''வேண்டாமம்மா. எனக்காக ஓடி ஓடி அலைந்துவிட்டு நீயும் படுத்துக்கொள்ளாதே.''

''ஆமாம், அப்புறம் அவர்களைக் கவனிக்க யாரிருக்கா'' என்று சற்று வெறுப்புக் கலந்த தொனியிலேயே கூறிவிட்டேன்.

''என்பாடு இருக்கட்டும். அவளுக்கு ஒன்று என்ருல் என் மனம் தாங்கவே தாங்காது......''

யார் பேசுவது? ரவியின் தயார்தானா? என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லையே. பலி ஆட்டின்மீது பாசம் வைத்த பூசாரியைப் போன்றிருந்தது அந்த அம்மாவின் பேச்சு.

அவள் ஒழிந்து போனால்தானே உங்கள் வீட்டிற்கு அழகு மருமகள் வரமுடியும் என்று கேட்கத் துடித்தேன்.

மனதையடக்கிக் கொண்டு அடிமனதிலேயே புதைத்துவிட்டேன் கேள்வியை. என் இதயத்தின் துடிப்பு எங்கே வெளிக்கேட்டு விடுமோ என்று பயந்தவளே போல் சீக்கிரமே புறப்பட்டு விட்டேன் வீட்டைவிட்டு.

"அடிக்கடி வந்து போய்க்கொண்டிரு. சாந்தி. உன் வருகையாலாவது என் மனம் சற்று நிம்மதி பெறட்டும்" என்று வேண்டிக்கொண்டாள்.

அந்த அம்மாளின் வேண்டுகோள் சற்றே இரக்கத்தை மூட்டியது என்றாலும் அடி நாளில் படிந்துவிட்ட அசூயையை அகற்ற முடியாமல் தலையசைத்துவிட்டு வழி நடந்தேன்.

5

ஒரு மாதத்திற்குப்பின்

ரவியின் விருந்திற்கு ஏற்பாடுகள் தடபுடல் பட்டது என் வீட்டில். எனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியாதென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் சமையலுக்கு ஏற்பாடு செய்வதில் என்னை எவரும் மிஞ்சமுடியாதென்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்வேன்.

விருந்துச் சாப்பாடு முடிந்தது.

"தனிமையிலேயே இத்தனை ஏற்பாடுகளும் செய்துவிட்டாயே சமத்தாக. ரவியின் கல்யாணத்திற்கு இத்தனை சிறப்புக் கொடுக்கமுடியுமா என்பது சந்தேகம்......" என்று போற்றினாள் பெரியம்மா.

"வரப்பேரகிற சீமந்தத்திற்கு உன் ஏற்பாடுதான் நடக்கவேண்டும் வீட்டில்" என்று அந்த அம்மாவே சொன்னபோது எனக்குச் சற்றே திகைப்பாக இருந்தது.

சீமந்தம்...... யாருக்கு...... சகுந்தலாவுக்கா... என்னால் நம்பமுடியவில்லையே. ஒரு வேளை பிரசவம்தான் ரவியின் தோஷத்திற்குப் பலி வாங்கும் சந்தர்ப்பமாக அமையுமோ...... என் நெஞ்சில் வேதனை சூழ்ந்துகொண்டது. 'சந்தோஷம் தானே' என்று கேட்டுவிட்டேன். மனதை அடக்கமுடியாமல். ஆமாம் என்று கூறியது அவள் முகம்.

என் இதயத்தின் பிரதிபலிப்பேபோல் கணத்தில் வேதனையின் ரேகை சூழ்ந்து படர்ந்தது பெரியம்மாவின் முகத்தில். ஒரு வேளை சகுந்தலா கண்டத்திற்குத் தப்பி விடுவாளோ என்கிற வேதனையாயிருக்குமோ?

என் உள்ளப்புயல் வெளியே தெரியாமல் பூசி விட்டு, "உங்கள் முகம் ஏன் எப்பொழுதும் வாட்டமாக இருக்கிறது, உங்கள் மகனின் தோஷத்தைப் பற்றியா?" என்று கேட்டு வைத்தேன்.

எதுவும் பேசமுடியாமல் ஆம் என்று மட்டும் கூறி நிறுத்தினாள். "அதற்குத்தான் பரிகாரம் தேடி வைத்திருக்கிறீர்களே. அழகற்ற மருமகள் சகுந்தலாவைப் பலி ஆடாக..."

'அதுதான் என் நெஞ்சை உறுத்துகிறது.'

'வேண்டுமென்று செய்துவிட்டு பின்னர் நெஞ்சை உறுத்துவானேன்?'

ஒரு பொருளின் அருமை தெரியாதபோது அதைப்பற்றி அலக்ஷியமாக நினைத்திருக்கலாம், சகுந்தலாவுக்கு அழகில்லை என்பதற்காக அவளைக் கழிவுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் அவள் அன்பை அறிந்து அனுபவித்து வந்தபின்பும் எப்படிக் கழிவாகக்கொள்ள முடியும்?"

'அப்படியானால் சகுந்தலாவை இழக்க உங்கள் மனம் துணியாது. இதுதானே உங்கள் கருத்து...' என்று என் சந்தேகத்தை விளக்கினேன். ஆமாம் என்று கூறியபோது சாதாரண மனித உருவில் தோன்றவில்லை அந்த அம்மா......அவர்கள் மன மாற்றம் தெரிந்த அந்நிமிஷ முதலே என் மனதில் அவள்மீது தோன்றியிருந்த அசூயையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சாமீ, பகவானே ரவியின் தோஷம் சகுந்தலாவைப் பாதிக்காதிருக்க வேண்டுமே என்கிற பிரார்த்தனையோடு வீடு சேர்ந்தேன்.

இன்று எப்படியும் ராமுவிடம் கேட்டுவிடுவதெனத் தீர்மானத்துடன் இருந்தேன்.

நான் எதைக் கேட்கக் காத்திருந்தேனோ அதையே அவனும் சொல்ல வந்தபோதுதான் எனக்கு என் நிலை புரிந்தது.

'அக்கா ஒரு விஷயம்'

"ஆமாம், நானும் உன்னை ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்றுதான் துடித்துக்கொண்டிருக்கிறேன்."

"அப்படியானால் உன் துடிப்பு நின்றுவிடுமுன்னதாக நீயே கேட்டுவிடு."

"வந்து...அந்தப்பெண் சகுந்தலாவின் விஷயம் உனக்குத் தெரியுமா தெரியாதா..."

"இன்னதென்று சொல்லாமல் கேட்கப்படும் கேள்விக்கு எப்படிப் பதிலளிக்க முடியும்?"

ராமு

'அதுதான் உன் நண்பன் ரவியின் தோஷத்திற்குப் பலி ஆடாக வந்திருக்கும்.'

'ஓ அதுவா...' என்று கூறிச் சிரித்தான்'. 'அவள் பிழைப்பு உனக்குச் சிரிப்பாயிருக்கிறதா?'

'இல்லை. உன் திகைப்பு எனக்குச் சிரிப்பாயிருக்கிறது'

'இருக்காதா பின்னே, உனக்கென்ன தெரியும் என் உள்ளம் படும்பாட்டைப்பற்றி? பெண்ணுக்குத்தான் பெண் மனதின் தன்மை தெரியும்.

'பெண்ணின் அருமை தெரியாத பேய் ஜன்மங்களையும் பெண்ணினத்தில்தான் காணமுடியும்.'

'இருக்கலாம். உன் ரவியின் தாயாரைப்போல் ஓரிருவரிருக்கலாம். ஆனால் அந்தப் பேய் மனமே சமயம் வரும்போது உருகிச் சாவதுமுண்டல்லவா?'

"நீ சொல்வது கேட்க ஆச்சரியமாக இருக்கிறதே"

"இதிலென்ன ஆச்சரியமிருக்கிறது? ரவியின் தாயாரேதான் தான் நினைத்து, சகுந்தலாவைக் கொண்டுவந்ததைப் போல் சகுந்தலா பலி ஆகிவிடக்கூடாதென்று பயந்து சாகும்போது......"

'அக்கா...'

ஏதோ சொல்லப் போவதைப்போல் மாறியது அவன் முகம்...

கேட்கத் தயாரானேன்.

'உண்மையிலேயே ரவிக்குத் தோஷமுமில்லை. மண்ணாங்கட்டியுமில்லே...'

'வெறும் கட்டுக்கதை என்கிறாயா?'

'கட்டுக்கதையேதான். அதுவும் நானும் ரவியுமாகக் கட்டிவிட்ட கதை.'

'அப்படியா?'

'ஆமாம், சகுந்தலா ரவியின் காலேஜ் சிநேகிதி. படிக்கும் நாளிலேயே இருவருக்கும் அந்தரங்க நட்பு. படிப்பு முடிந்து பிரியும்போது ஒருவரை ஒருவர் விவாகம் செய்து கொள்வதென ஒப்பந்தத்துடன் விலகிக்கொண்டனர்.

'பெண்ணின் அழகில் மயங்கிப்போய் ரவி அவளை மணக்க ஒப்புக்கொள்ளவில்லை. அவள் நடத்தையிலும் நற்குணத்திலும் மோகம் கொண்டே அவளை மணக்கத் தீர்மானித்திருந்தான். என்னதான் உயர்வான குணமிருந்தாலும் அழகற்ற அவளை மணக்க அம்மா சம்மதிக்க மாட்டாளென்பதும் தெரியும். சூழ்ச்சியின் மூலமே தன் காரியத்தில் வெற்றிபெற விரும்பினான்.'

'அதற்காகவே செய்த சூழ்ச்சி என்றுதானே சொல்லப்போகிறாய்!'

'ஆமாம்' என்பதின் அடையாளமாகத் தலையசைத்தான்.'

'ஒரு சந்தேகம்.'

'இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும் என்றுதானே கேட்கப்போகிறாய்?'

'அதுவேதான்.'

'ரவியின் தாயார் மனதைக் கரைத்து விவாகத்திற்குச் சம்மதிக்கச்செய்த ஜோஸியனுக்குத் தெரியாத ரகஸியம் வேறு யாருக்குத் தெரிந்திருக்க முடியும்?'

ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துவிட்டேன். அதை அடித்துக்கொண்டு புறப்பட்டது ஆனந்தம். எப்படியும் பேதைப் பெண் சகுந்தலாவின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் நேரக்கூடாதென்ற என் நெடுநாளைய பிரார்த்தனை வீண் போகவில்லை, என்கிற எண்ணம் என் மனதிற்கு நிம்மதியைத் தந்தது.

ஐந்தாறு குழந்தை குட்டிகளை அடுக்கடுக்காய் வளர்த்துக்கொண்டு அன்புக் கணவனுடன் ஆனந்த வாழ்க்கை நடத்தும் வருங்கால சகுந்தலாவை என் கற்பனைக் கண்கள் கண்டு மகிழ்ந்தன. ஓட்டமாக ஓடிப்போய் ரவியின் தாயாரிடம் சமாசாரத்தைச்சொல்லி, என் சந்தோஷத்தில் பங்களிக்க விரும்பினேன். மறுகணமே மாறியது மனம். ஒரு பொருளை இழந்துவிடுவோமோ என்கிற அச்சம் இருக்கிறவரைதான் அதன்மீதுள்ள அன்பு நீடித்து நிற்கமுடிகிறது. நான் நல்லதென்று நினைத்துச் செய்யும் காரியம் ரவியின் தாயார் சகுந்தலாமீது கொண்டுள்ள அன்புக்குத் துவேஷம் வளர்த்துவிட்டதாக அமையுமோ என்கிற அச்சத்தில், என் சந்தோஷத்தை என் மனதுக்குள்ளேயே புதைத்துக்கொண்டேன்.

எது இன்பம்

வே. ரங்கராஜன்

அத்: 54. எதிர்பார்த்த செய்தி!

கார் மெரினவைவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தது. சரசுவின் பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்திருந்தபோதிலும் மேகன் அவளிடம் பேச்சுக்கொடுக்கவில்லை. பேச விருப்பம் இல்லை எனவேபட்டது.

மனம் சிந்தனையில் மூழ்கிவிட்டது.

'லீலா யார்? சரசுவுக்கு என்ன உறவு? இவள் எங்கிருந்து வந்தாள்? எப்போது வந்தாள்? காணக் கண் சொக்கும் அழகுடைய இவள் உள்ளமுமல்லவா தங்கத்தைப்போல் இருக்கிறது; மணம் ஆய்விட்டதோ! இந்தப் பாழாய்ப்போன நாகரிகம் வந்தாலும் வந்தது, இப்போது ஒரு பெண் மணமானவளா கன்னிகையா என்று கண்டுகொள்ளவே முடிவதில்லை! அவள்மீது சரசுவுக்குப் பொறுமை இருக்கவேண்டும்! அதனால்தான் எங்களை அறிமுகப்படுத்திவைக்கவில்லை போலும்! என்னை அவளுக்குத் தெரியுமோ! நான் அசட்டு பிசட்டென்று சரசுவுக்கு எழுதிய காதல் கடிதத்தை அவளிடம் காண்பித்திருப்பாளோ! நல்ல கடிதம்! இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது! வாழ்க்கை என்று நடத்தினால் லீலாவைப்போன்ற பெண்களுடன் நடத்த வேண்டும். சரசுவின் குணம் வினாடிக்கு ஒருவிதமாக மாறுபடுவது!......'

தன் பங்களாவின் முன் கார்வந்து நின்றபிறகும்கூட மேகன் தன் சிந்தனையிலிருந்து மீளவில்லை.

"உம்! பகற்கனவா!" என்று கேட்டுவிட்டு சரசு மின்சார ஹாரனை, 'கர்ர்ர்' என அழுத்தினாள்.

மேகன் திடுக்கிட்டு எழுந்து, 'ஓ! ஐயேம் சாரி!' 'தாங்ஸ்' என்று சொல்லிக்கொண்டே லீலாவின் பக்கம் திரும்பினான்.

'யாருக்கு, 'தாங்ஸ்' ' என முணு முணுத்துக்கொண்டே ஆக்ஸிலரேட்டரை நன்றாக அழுத்திவிட்டாள் சரசு. 'உர்ர்' என்று சப்தித்துக் கார் விரைந்து சென்றது.

காரின் மின்சாரக் குழலோசை கேட்டு மேகனின் வேலைக்காரன் பங்களாவின் வாயிற்படியில் வந்து நின்றான்.

அப்போது பங்களாவின் சமையல் வேலையுடன் மேகனின் அந்தரங்கக் காரியதரிசியாகவும் இருக்கும் கதிர்வேலு தயாராக வைத்திருந்த தந்தியை நீட்டினான்.

“இல்லை! தந்தி திவான் பேஷ்காரிடமிருந்து வந்திருக்கிறது. அப்பா குதிரை மீதிருந்து விழுந்து விட்டாராம்! மார்பு எலும்புகளில் ஒன்று முறிந்து இதயத்துள் ஊடுருவி விட்டதாம்! மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கிறாராம்! உடனே புறப்பட்டு வர வேண்டுமாம்!” என்றான் வேலு. யஜமானுக்குத் தந்தியைப்படிக்கும் சிரமம்கூட வைக்கக்கூடாது என்பது அவன் எண்ணம்.

“அட! வயசானவர்களெல்லாம் இப்படி வாலிப சேஷ்டைகள் செய்து வீணான அவஸ்தைக்கு ஆளாகவேண்டியது. மற்றவர்கள் திண்டாட வேண்டியது! சுத்த ‘நியூஸென்ஸ்’” என்று ஸோபாவின்மீது ஒரு தட்டுத் தட்டினான், மேகன்.

* * *

கட கட் கட கட கட் என தாளமிட்டு ஓடிக்கொண்டிருந்த ரயிலின் முதல் வகுப்பு மெத்தையின்மீது படுத்து, தன் தந்தையைப்பற்றி எண்ணமிட்டான், மேகன். ‘தந்தை இறந்துவிட்டால்?’ என்ற கேள்வி அவன் மனதில் எழுந்து எதிர்காலத் திட்டங்களை வகுக்கத் தூண்டியது. இப்படி எதிர்காலத்தைப் பற்றி எண்ணும்போது, தன் தந்தையின் மகத்தான தவறுகள், அவன் கண்முன் நடந்தவை போல, நினைவிற்கு வந்தன.

‘ஜமீன் நிர்வாகத்தை எப்படி ஒழுங்குபடுத்துவது? தன் எதிர்காலத்தை எப்படி நடத்திக்கொள்வது?’ என்ற சிந்தனை எழுந்தது.

எவ்வளவுதான் பணமாகக் கொட்டி அதன்மீது படுத்துப் புரளச் சொன்ன போதிலும் உடையார் பள்ளத்தில் வசிக்க மேகநாதனுக்குக் கொஞ்சங்கூட விருப்பமில்லை. சென்னையில் வாழ்வதே அவனுக்குச் சுத்த அநாகரிகமாக இருந்தது. பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் வாழ விரும்பினான், அவன். அவன் வாழ்வின் நோக்கம் வெறு. உலகக் கிரிக்கட் ஆட்டக்காரர்களில் ஒருவன் என்ற பெயரை எடுக்கவேண்டுமென்று அவன் முயன்று வந்தான்.

இந்த நோக்கம் நிறைவேற வற்றாத ஊற்றாக இருக்கும்படி ஜமீனை ஒழுங்குபடுத்தி விட்டு நிர்விசாரமாய் இருக்கவேண்டும் என்பது அவன் எண்ணம். தன் தந்தையின் தவறுகள் அவனுக்குத் தெரியும். அவைகளைத் தன் நிர்வாகத்தில் விலக்க விரும்பினான்.

ஒரு குறைவும் இல்லாத, பெண்மை நலமும் பண்பும் ஒருங்கே உடைய பெண்ணாகத் தோன்றினாள், லீலா, அவன் மனதிற்கு. அவள் காதலிக்க உகந்த லக்ஷியப் பெண்! என்று எண்ணினான்.

தான் திடீரென்று உடையார்பள்ளம் வந்துவிட்ட சமாச்சாரத்தைச் சரசுவுக்கு எழுதவேண்டும். இல்லாவிட்டால் அவள் என்னவெல்லாமோ நினைத்துக்கொண்டு கதை திரித்துவிடுவாள். அதை லீலாவிடம் சொன்னாலும் சொல்வாள். லீலா அதைக் கேட்டுத் தன்மீது கெட்ட அபிப்பிராயம் கொண்டாலும் கொள்ளக் கூடும்!’ என்று நினைத்தான், மேகன்.

லீலாவைக் குறைவற்ற பெண்ணாக எண்ணிய அவன், தானும் அவள் முன் பண்புள்ள ஆண்மகனாகத் தோற்றவேண்டுமென்று விரும்பினான். சரசு தன் மனதில் ஏதேனும் நினைத்துக் கொள்வதைப்பற்றி அவன் வருந்தவில்லை. ஆனால் ஒன்றுகிடக்க ஒன்று உளறி லீலாவின் மனதில் கெட்ட எண்ணங்களை வளர்த்துவிடுவாளோ என்றுதான் அஞ்சினான்.

ஆகவே சரசுவுக்கு எழுதுவதைக்காட்டிலும் முக்கியமாக லீலாவுக்கு எழுதவேண்டுமென்று தோன்றியது அவனுக்கு. உடையார் பள்ளம் போய்ச் சேர்ந்தால் கடிதம் எழுத அவகாசம் இருக்கிறதோ என்னவோ! இப்போதே எழுதி விருத்தாசலம் ஸ்டேஷனில் போஸ்ட் செய்துவிடலாம்! எழுந்து உட்கார்ந்தான், மேகன். தன் கைப்பெட்டியைத்திறந்து ‘லெட்டர் பேடை’ எடுத்து முதலில் லீலாவுக்குக் கடிதம் எழுதினான்.

ஸ்ரீமதி லீலா அவர்களுக்கு,

நேற்று அப்பாவிடமிருந்து ஒரு தந்தி வந்தது. அதை இக்கடிதத்துடன் வைத்திருக்கிறேன். இதன் காரணமாக நான் சென்னையிலிருந்து இன்று உடையார் பள்ளம் போகிறேன்.

இங்ஙனம்,
மேகநாதன்.

அடித்தல்களுடன் கடிதத்தைப்போட மனமின்றி மறுபடியும் சரியாக ஒரு கடிதம் எழுதினான். அதைக் கவரில் போட்டு, ஸ்ரீமதி லீலா, 'கேர் ஆப்' சரஸ்வதி.........என்ற விலாசமிட்டு வைத்துவிட்டுப் பின்னர் சரஸ்வதிக்குக் கடிதம் எழுதத்தொடங்கினான். முன்போல் 'அன்புள்ள கண்மணி!' என்று எழுத அவன் கண்கள் கூசின. எழுதுவதற்கே ஓடவில்லை. ஏதோ கையில் வந்த நான்கு வார்த்தைகளைக் கிறுக்கிவிட்டு அதையும் கவருள் போட்டான். விலாசமிட்டு ஒட்டி இரண்டையும் தன் கோட் பாக்கட்டில் போட்டுக்கொண்டு மறுபடியும் படுக்கையில் சாய்ந்து, சிகரெட் பற்றவைத்துப் புகைக்க ஆரம்பித்தான். அப்படியே சற்றே கண்ணயர்ந்துவிட்டாள்.

வண்டி விருத்தாசலம் வந்தடைந்ததும் வேலைக்காரன் உள்ளே புகுந்து படுக்கை, பெட்டி முதலியவைகளை எல்லாம் வெளியே எடுத்து வைத்துவிட்டு மேகநாதனை எழுப்பினான். ஜமீன் வண்டி ஸ்டேஷனுக்கு வந்திருந்தது. அதில் ஏறி உட்கார்ந்ததும் ஏதோ நினைத்துக்கொண்டவனைப் போல் வாயில் சுட்டுவிரலை வைத்துக் கடித்துக்கொண்டான். 'ஆம், கடிதங்களைப்போட மறந்துவிட்டேன்!' என்று சொல்லிக்கொண்டு கோட் பாக்கட்டில் இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்துத் தபால் பெட்டியுள் போட்டுவிட்டு வரச்சொன்னான். வண்டிக்காரன் எடுத்துப் போய்ப் போட்டுவிட்டு வந்ததும் 'ஜல்! ஜல்!' என்று சதங்கைகள் பாட ஜாம் ஜாமென்று ஜமீன் வண்டி உடையார்பள்ளத்தை நோக்கி முன்னேறியது.

அத்: 55. தேசிகன்

கடற்கரையிலிருந்து திரும்பி வந்தபிறகு லீலா எப்போதும்போல் சரசுவுடன் பேசினாள். அவள் மனதில் ஒருவித சலனமுமில்லை. அதற்கு நேர் மாறாகச் சரசு தன் மனதில் பலவித எண்ணங்களை வளரவிட்டு, ஒன்றோடு ஒன்று பிணைத்து, யாவற்றையும் ஒன்றாக்கி, ஒரே குழப்பத்திற்கு ஆளாகியிருந்தாள். தனக்கே தனக்கென்று எண்ணியிருந்த ஒரு விலை மதிப்பற்ற பொருள் கை நழுவிவிடுமோ! என்பதைப்போன்ற ஒரு சஞ்சலம் அவள் மனதில் எழுந்தது. மேகநாதன் லீலாவின் கருத்தை ஆதரித்துப் பேசியதாலும், லீலா மேகனிடம் சகஜமாகப் பேசியதிலிருந்தும் அவர்கள் இருவரும் காதலித்துவிட்டனர்! என்று அவள் நினைத்துக்கொண்டாள். தன்னை உடையார்பள்ளம் ஜமீன்தாரிணியாகக் கனவு கண்டு கொண்டிருந்த சரசுவின் மனம் சஞ்சலித்தது. வீட்டிற்கு வந்தபிறகு அவளால் நன்றாகச் சாப்பிட முடியவில்லை. கொஞ்சம் ரஸம் சாதம் மட்டும் சாப்பிட்டுவிட்டு எழுந்துவிட்டாள்.

பிறகு, 'அப்பா 'டாக்டரைப் போய் பார்த்து வரவேண்டும்' என்று சொன்னாரே! டாக்டர் என்ன சொன்னார்?' என்று அறிய எண்ணம் எழுந்தது.

சபேசன் அப்போது தம் மெத்தையிலே படுத்துக்கொண்டு அரசாங்க கெஸட்டைப் புரட்டிக் கொண்டிருந்தார். சரசு வருவதைக் கண்டு அதைப் பக்கத்தில் வைத்துவிட்டு "என்ன சரசு! அரங்கேற்றம் நன்றாக இருந்ததா?" என்று கேட்டார்.

"அது கிடக்கட்டும், டாக்டர் என்ன சொன்னாரப்பா?" என்று கேட்டாள், சரசு.

'உடலில் கொஞ்சம் சர்க்கரை அதிகமாக இருக்கிறதாம். இன்னும் ஒரு மாதம் வரை சர்க்கரை அதிகம் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கச் சொன்னார். சில மருந்துகளையும் எழுதிக்கொடுத்தார். காலை மாலை இருவேளையும் கோதுமை ஆகாரம் சாப்பிட்டால் நல்லது என்று சொல்கிறார்.

"ஏனம்மா, சரசு! தேசிகன் வருவதாக கடிதம் போட்டிருந்தானில்லே! என்றைக்கு வருகிறான்? நாளைக்குத்தானே!"

"ஆமாம். அவனுடன் நந்தலால் என்ற நண்பர் கூட வருகிறாராம்!"

"சரி. சாமாவிடம் முன்னமேயே சமாச்சாரத்தைச் சொல்லி வை. நீ நாளைக்குக் கார் கொண்டு போய் அவர்களை அழைத்து வந்துவிடு!"

"ஓ! ஆமாம் மறந்தேவிட்டேன்! சாமாவிடம் இப்போதே சொல்லிவிடுகிறேன். நீங்கள் கவலையின்றித் தூங்குங்கள். நான் நாளைபோய் அழைத்து வந்துவிடுகிறேன்."

"தூங்க வேண்டுமென்றுதான் பார்க்கிறேன்! ஆனால் தூக்கம் வரமாட்டேனென்கிறதேம்மா!" என்று சொல்லிக்கொண்டு கொட்டாவி விட்டார், சபேசன். அப்போது கடிகாரம் டிங், டிங்...... என்று பத்துமணி யடித்தது.

* * *

தேசிகன், சபேசன் அவர்களின் சீமந்த புத்திரன். அவன் பிறந்து வளர ஆரம்பித்தான். அவர் உத்தியோகம் வளர ஆரம்பித்தது. நல்ல அதிர்ஷ்ட ஜாதகன் என்று ஒருமுகமாக, பல பிரபல ஜோதிஷர்கள் கூறினர். அவன் இருக்கும் இடத்தில் செல்வம் கொழிக்கும் என்று சொன்னார்கள்! இவைகள் ஒருபுற மிருக்க, தேசிகனின் பிள்ளைப் பிராய அழகிலே சொக்கிப் போய்விட்டார், சபேசன். அவனைத் தூக்கிக் கொள்வதில் ஒரு புளகாங்கிதம்! மாம்பழக் கதுப்புக்கள் போன்று குமிழ்ந்திருந்த கன்னங்களில் முத்தமிடும்போது ஒரு தனி ஆனந்தம் அடைந்தார்.

இப்படி யெல்லாம் தம்மை மறந்து ஆனந்தப் பட்டதனால் தானோ என்னவோ, அவர் எந்தக்

காரியத்தையும் மகிழ்ச்சியோடு செய்தார். எப்போதும் அவர் முகத்தில் மென்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. இதனால் அவருக்குக் கீழ் வேலை செய்தவர்கள் சந்தோஷமாக வேலை செய்தார்கள். மேலதிகாரிகள் சுமுகமாகப் பழகினார்கள். சபேசனுக்கு உத்தியோக உயர்வுகள் படிப்படியாகக் கிடைத்தன. இதனாலா? அல்லது ஜோதிஷர் சொன்னதுபோல் தேசிகனின் அதிர்ஷ்ட ஜாதகத்தினாலா? என்பது எனக்குத் தெரியாது.

அப்பா அம்மா இவர்களின் இரட்டிப்பு அன்பிலே வளர்ந்த தேசிகன் படிப்பிலே மண்டுவாக இருந்தான்! அவனைப் படிக்கவைக்கச் சபேசன் பகீரதப்பிரயத்தனங்கள் செய்தார். ஒரு விதமாகத் தன் இருபதாவது வயதில் ஹைஸ்கூலை விட்டு வெளியேறினான். பின்பு கலாசாலை ஒன்றில் சேர்த்து விடுவதற்குத் தம்மால் ஆன பிரயத்தனங்களை எல்லாம் செய்தார். காலேஜில் சேர்ந்தால் பி. எஸ். ஸி. தான் படிப்பேன் என்று பிடிவாதம் பிடித்தான், தேசிகன். எஸ். எஸ் எல். ஸி யில் கொஞ்சமான மார்க்குகள் வாங்கி யிருந்ததால் காலேஜில் பிரவேசம் கிடைப்பதே கஷ்டமாய் இருந்தது. அப்படி இருக்கும்போது பி. எஸ். ஸி. பகுதிக்குச் சேர்த்துக்கொள்ள எந்தக் கலாசாலையும் ஒத்துக்கொள்ளவில்லை. கடைசியாக, காசி ஹிந்து சர்வகலாசாலையில் ஒரு இடம் கிடைத்தது. ஸ்ரீமதி சபேசன் தேசிகனை அவ்வளவு தூரம் அனுப்பச் சம்மதிக்கவில்லை. இதன் காரணமாகக் கணவன் மனைவியிடையே பிரமாதமான சண்டை கூட வந்துவிட்டது! கடைசியில் தேசிகன் காசி போய்ச் சேர்ந்தான்.

அங்குப் போனதும் எங்கிருந்தோ ஒரு புதிய உற்சாகம் அவனுக்கு வந்தது; பள்ளியில் இல்லாத பொறுப்பு உண்டாயிற்று. தன்னையொத்த வாலிபர்களெல்லாம் பட்டம் பெற்றுத் திரும்புவதைக் கல்லூரி பட்டமளிப்பு விழாவின்போது பார்த்தான், தேசிகன். அவன் உடல் குன்றியது. மானமும் ரோஷமும் பொத்துக்கொண்டு வந்தன! ஒழுங்காகப் படித்து வருஷம் தவறாமல் பாஸ் செய்துகொண்டுவந்தான். விடுமுறை நாட்களில்கூட அவன் சென்னைக்கு வருவதில்லை. வடநாட்டு முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டுவந்தான்!

இப்போது அவன் சென்னைக்குத் திரும்பி வருவதில் சபேசனுக்கு மனதிற்குள் ஒரு சந்தோஷம். தம்முள் பம்பிக்கிடந்த புத்திரபாசமும் கிளர்ந்து எழுந்தது. அவன் வரவை அவர் ஆவலுடன் எதிர்பார்த்தார்.

தேசிகன் பிறந்து மூன்று வருஷங்களுக்குப் பிறகு சரசு ஜனனமானாள். உருவத்தில் அப்பாவை ஒத்திருந்தாள், அவள். சாமள வர்ணம். தேசிகன் அம்மாவைப்போல் சிவப்பு. இளமை முதற்கொண்டே அண்ணனுக்கும் தங்கைக்கும் சண்டை சச்சரவுதான்! "போடி 'பிளாக் போர்ட்!'" என்பான் தேசிகன். சரசு அழுது கொண்டே அம்மாவிடம் போவாள். "நம் அண்ணாதானேம்மா! விளையாட்டுக்குச் சொன்னால் சொல்லிவிட்டுப்போறானே! இதற்கெல்லாமா கோபித்துக்கொள்வார்கள்? நீ ஏதாவது பதிலுக்குக் கேட்டுவிட்டுப்போயேன்! 'போடா, பம்பளிமாஸ்!' என்று நீ சொல்லேன்!" என்று சொல்வாள், ஸ்ரீமதி சபேசன்.

இப்படி அண்ணனும் தங்கையும் குழந்தைப் பருவத்தில் சண்டை போட்டுக்கொண்டதின் விளைவாகத்தானோ என்னவோ, வயது வந்தவுடன் இருவரும் ஒருவரை ஒருவர் மிக அன்புடன் நேசித்தனர். தேசிகன் காசி சர்வகலாசாலைக்குப் போனபிறகு அன்பு வலுப்பட்டது. சரசு தன் அண்ணாவுக்கு வாரம் ஒரு கடிதம் எழுதத் தவறினதில்லை!

ஆகவே தேசிகன் திரும்பி வருவதில் சரசுவுக்கு மிகுந்த சந்தோஷம். அண்ணாவிடம் மனம் விட்டுப்பேசி, பொழுது போக்கலாம் என்ற உற்சாகம். இதைத்தவிர சரசுவின் மனதில், சமீபகாலமாக ஒரு எண்ணம், எழுந்துவிட்டது. 'காதல்' என்ற விசித்திர உணர்ச்சியை அவள் அனுபவிக்க ஆரம்பித்தது முதல் தேசிகன் அவள் நினைவிற்கு வருவான்.

"அண்ணாவுக்கும் காதல் உண்டாகத்தானே செய்யும் அவன் யாரைக் காதலிக்கிறான்? அவனுடைய லக்ஷியக்காதலி எப்படியிருப்பாள்? லீலாவைப்போன்று, அழகும்குணமும் ஒருங்கே கூடிய பெண்ணை, அவன் மணம் செய்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

"அண்ணாவுக்கும் லீலாவுக்கும் காதல் உண்டாகிவிட்டால்! ஆ! அப்போது குடும்பத்தில் எவ்வளவு சந்தோஷம் குடிகொள்ளும்! லீலா தன் சிநேகிதி. தான் சொல்வதைத் தட்டமாட்டாள். அடக்க ஒடுக்கமான இயல்புடைய அவள் அண்ணாவை ஆட்டிப் படைக்கமாட்டாள். அம்மாவின் குணம் அவளுக்குத் தெரியுமாதலால், அவள் அசட்டு பிசட்டென்று பல காரியங்களிலும் குறுக்கிடுவதைப் பொருட்படுத்த மாட்டாள். மொத்தத்தில் எல்லாமே நன்றாக இருக்கும். ஆகவே அண்ணாவுக்கும் லீலாவுக்கும் காதல் உண்டாகும்படி செய்யவேண்டும். இதற்காக இருவர் நடுவே நான் தூதாக நின்று வேலை செய்கிறேன்!" எனத் தீர்மானித்தாள், சரசு.

இதனால் தேசிகனின் வரவு சரசுவுக்கு இரட்டிப்புச்சந்தோஷமளித்தது. அவனுடன் நந்தலால் என்ற நண்பன் வருவதாக எழுதியிருந்தது அவளுக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லை. அவனுடனேயே சென்னை முழுதும் சுற்ற ஆரம்பித்து வீண் பொழுது போக்கி விடுவானோ அண்ணா! என்று அவள் அஞ்சினாள். அம்மா ஸ்ரீரங்கத்திலிருந்து திரும்புவதற்குள் அண்ணாவுக்கும் லீலாவுக்கும் பிரிக்க முடியாத காதலை வளர்த்துவிட வேண்டும் என்று ஆசைப் பட்டாள் சரசு.

அம்மா வந்த பிறகு இது நடப்பதற்கு இடையூறு இருக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

தன் மகனுக்கு மிகப் பெரிய இடமொன்றில் பெண்ணெடுக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வைத்திருந்தாள், ஸ்ரீமதி சபேசன், குறைந்தது ஒரு ஜில்லா கலெக்டர் மகளாக இருக்கவேண்டுமென்பது அவள் எண்ணம். அப்படி யிருக்கும்போது லீலாவை மருமகளாகக் கொள்ள அவள் சம்மதிப்பாளா? அதுவும் லீலா அனாதரவாக இருக்கும் நிலையில்! குணம், அழகு, படிப்பு, இவை எப்படி இருந்தால் என்ன? பணம் பதவி, அந்தஸ்து, ஆடம்பரம் இவைகள்தான் ஸ்ரீமதி சபேசனுக்குப் பிடித்தமானவை. இந்த விஷயங்களில் சரசு தன் தாயின் மனோ நிலையை அளவெடுத்து வைத்திருந்தாள். ஆகவே அவள் திரும்புவதற்குமுன் லீலாவின் மீது அண்ணா காதல் கொண்டுவிடவேண்டுமென்று ஆசைப்பட்டாள் சரசு.

அத்: 56. வரவேற்பு

சென்ட்ரலுக்குப் போவதற்காக அதிகாலையில் எழுந்துவிட்டாள் சரசு. சாமா இன்னும் தூங்கிக்கொண்டிருந்தான். அவனை எழுப்பாமல் தானே பாய்லருக்குக் கரிபோட்டுப் பற்றவைத்தாள். பின்பு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நான அறைக்குச் சென்றாள். அப்போது, 'லீலாவும் ஸ்டேஷனுக்கு வந்தால் என்ன? முதல் முதல் அண்ணா அவளைக் காணவேண்டும். கண்டதும் காதல்கொள்ள வேண்டும்!—அவளை நன்றாக அலங்கரித்து அழைத்துச்செல்கிறேன்!' என்று எண்ணிக் கொண்டு, ஸ்நான அறையிலிருந்து வெளியே வந்து, நேரே மாடியை அடைந்து, லீலாவை எழுப்பினாள். ஏதோ கனவு கண்டுகொண்டிருந்த லீலா திடுக்கிட்டு எழுந்தாள். 'ஏன் சரசு! என்ன சமாச்சாரம்?'' என்று பதற்றத்துடன் கேட்டாள். "ஒன்றுமில்லை லீலா. ''ஏன்? என்ன! ஏன் இப்படி உடம்பு அனல் வீசுகிறது? ஏதேனும் கனவு கண்டுகொண்டிருந்தாயா என்ன?''

"ஆமாம் ஒரு விசித்திரமான கனவு!''

"என்ன அப்படி விசித்திரம்?''

"அண்ணா கணபதி தற்கொலை செய்துகொள்ள ஓடுகிறான். நான் அவன் பின்னாலேயே ஓடுகிறேன், 'வேண்டாம்! அண்ணா, வேண்டாம்!' என்று கத்திக்கொண்டு. அண்ணா கேட்கமாட்டேன் என்கிறான். நாகமொன்றின் புத்தில் கையை விட்டுத் துழாவுகிறான்! 'புஸ்ஸ்!' என்று நாகமொன்று வெளிக்கிளம்பி, படமெடுத்து ஆடுகிறது. அண்ணா அதைப்போய் தழுவிக்கொள்கிறான்......?'' இப்படிக் கண்டுகொண்டிருக்கும் போதுதான் நீ வந்து எழுப்பிவிட்டாய். சீ! என்ன பயங்கரக் கனவு!'' என்று சொல்லி, சோம்பல் முறித்தாள், லீலா.

"வெறும் பிரமை! நீ உன் அண்ணாவை நினைத்துக்கொண்டு படுத்திருப்பாய். அதனால்தான் இப்படியெல்லாம் கனவு வந்துவிட்டது. சரி. லீலா! அண்ணா தேசிகன் காசியிலிருந்து இன்று காலை வருகிறான். அவனை ஸ்டேஷனுக்குச் சென்று அழைத்து வர வேண்டும். எழுந்து உடுத்திக்கொண்டு வா, போகலாம்!''

''அசட்டுத் தேசிகனுக்கு அழைப்பு வேறு வேண்டுமா?'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள், லீலா.

'அதெல்லாம் அந்தக் காலம்! இப்போது அண்ணா எவ்வளவு புத்திசாலியாகிவிட்டான் தெரியுமா? பி. எஸ். ஸி. முதல் வகுப்பில் தேறினாலும் தேறலாம்! அவன் கம்பீரமான தோற்றமும், தெளிந்த கொள்கைகளும் என்ன என்கிறாய்! அவன் முற்றிலும் மாறி, புதுமனிதனாய் விட்டான். காசி சர்வகலாசாலை அவனை அப்படி மாற்றி யமைத்துவிட்டது!''

''சந்தோஷம்! சமத்தாக வேண்டுமென்பது தானே ஆசை! அழைப்பிற்கு நான்கூட வர வேண்டுமா என்ன?''

''ஆமாம் லீலா! நான் மட்டும் தனியாக அவ்வளவு கூட்டமுள்ள செண்ட்ரலில் நின்று கொண்டிருக்க வேண்டுமென்கிறாயா? நீ இங்கு என்ன செய்யப்போகிறாய்? எனக்காக வரக் கூடாதா?'' என்று கெஞ்சும் பாவனையாய்க் கேட்டாள் சரசு.

''சரசு, வருகிறேன்!'' என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்தாள், லீலா.

காலைக்கடன்கள் முடிந்து ஸ்நானம் செய்து உடை உடுத்துக்கொள்ளும் சமயத்தில், சரசு, புதுப்புடவை, நகைப் பெட்டி, கிரீம், பௌடர், ஹேர் ஆயில் ஆகியவைகளுடன் வந்தாள்.

"லீலா! இப்போது என் சொற்படி கேட்க வேண்டும்! நீ வேறு நான் வேறு என்று நான் நினைக்கவில்லை. என்னை அலங்கரித்துக்கொள்ள நான் எவ்வளவு ஆசைப்படுவேனோ அவ்வளவு ஆசையுடன் உன்னை அலங்கரிக்கப் போகிறேன்! நீ நல்ல அழகி. அலங்காரம் உனக்கு அவசியம். அழகுக்கு அழகு செய்து பார்ப்பதில் ஒரு தனி ஆனந்தம் இருக்கிறது! நீ பேசாமல் இரு! நான் செய்வதற்குத் தடையொன்றும் சொல்லாதே!'' என்று சொல்லிவிட்டு ஜார்ஜட் சேலையைப் பிரித்தாள், சரசு.

காலையில் விளக்கெண்ணெயைக் குடிப்பது போல் இருந்தது லீலாவுக்கு! சரசுவின் காரியத்தை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. உண்மையான சிநேகித அன்பினால் கன்னா பின்னாவென்று நடந்துகொள்கிறாளா? அல்லது வேண்டுமென்றே வேடிக்கை செய்கிறாளா? எப்படிச் செய்தாலும் செய்துவிட்டுப்

199329

போகட்டும். இதனால் அவள் மனம் மகிழ்ச்சியடைகிறதென்றால் நான் ஏன் மறுக்கவேண்டும்? இப்படி எண்ணிக்கொண்டு, சரசுவை அலங்காரம் செய்யவிட்டு, பதுமையைப் போல் உட்கார்ந்துவிட்டாள்.

லீலாவை அலங்கரித்துக் கொண்டிருந்த மும்முரத்தில் நேரம் அதிகமாய் விட்டது. தன்னுடைய அலங்காரத்தில் கவனம் செலுத்த முடியவில்லை, அவசர அவசரமாக உடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்கள்.

சென்னை சென்ட்ரலில் பல்வேறு உடைகளுடன் ஜனக்கூட்டம் மண்டியது, பதினெட்டாம் பெருக்கில் பல்வேறுவித மலர்களைத் தாங்கி, சுழித்துப் பிரவகித்து ஓடும் காவேரியைப்போலே! தலைவிரி கோலமாய், தூக்கமின்றி, குழிவிழுந்த கண்களுடன் இப்படியும் அப்படியும் வரும் பிரயாணிகளின் நடுவே ஓர் இடத்தில் சரசுவும் லீலாவும் நின்றுகொண்டிருந்தனர். பிரயாணிகள் ஒவ்வொருவருடைய கண்களும் அவர்கள் இருவர்மீதும் ஓர் விநாடி திரும்பின. இந்தக் காலை வேளையிலே இப்படிக் கோலாகலமாக உடுத்துக்கொண்டு நிற்கும் இந்தப் பெண்கள் யாராக இருக்கலாம்? என்று அவர்கள் மனதில் கேள்வி எழுந்திருக்கவேண்டும்.

தன் நீண்ட பிரயாணத்திற்குப் பிறகு சிரமபரிகாரம் செய்துகொள்வதைப்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்து நின்றது கல்கத்தா மெயில். உடனே பிளாட் பாரம் முழுவதும் பரபரப்பு! போர்ட்டர்களின் ஓட்டம்! தட்டுவியாபாரிகளின் சுறுசுறுப்பு! இவைகளின் இடையே உறவினர்களை வரவேற்க வந்திருப்பவர்களின் ஆவல் கலந்த முகத் தோற்றம்!

சரசு லீலாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தான் நின்ற இடத்திலிருந்து ஒவ்வொரு இரண்டாம் வகுப்பாகப் பார்த்துக்கொண்டு என்ஜினை நோக்கிச் சென்றாள். அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஒரு முதல் வகுப்பு வண்டியின் வாயிலில் நின்று பிளாட் பாரத்தைப் பார்த்தான், தேசிகன். சரசும் அதே சமயத்தில் அவனைப் பார்த்தாள். 'அண்ணா இதோ வந்திருக்கிறேன்!' என்பதற்கு அடையாளமாகக் கைகளை உயரத் தூக்கி வீசினாள். தேசிகன் சரசுவைப் பார்த்தான். மறுகணம் அவன் கவனம் லீலாவின் பக்கம் திரும்பியது. சில விநாடிகள் அவள்மீதே நிலைத்து நின்றன, கண்கள்.



Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylpaore. No. 2 Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

இதற்கு இடையில் தேசிகனைப் பார்க்க ஒரு முறை லீலா தலை நிமிர்ந்தாள். அப்போது இருவர் கண்களும் ஒருமுறை சந்தித்தன. தேசிகன் லீலாவை அடையாளம் கண்டுகொண்டான்; புன் முறுவல் செய்தான்.

லீலா தலை கவிழ்ந்துகொண்டாள். காரணமற்ற அச்சம் அவள் உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது முகம் நாணத்தால் வெளுத்தது. 'அசட்டு அண்ணாவுக்கு வரவேற்பு வேறா?' என்று அவள் கேட்டது நினைவிற்கு வந்தது. இப்போது தேசிகனின் தோற்றத்திலே அசட்டுத்தனம் எதுவும் இருப்பதாக அவளுக்குப்படவில்லை. அதற்கு மாறாக அவன் கம்பீரமான தோற்றம் அவளை ஆகர்ஷித்தது.

ஜன்னலின் வழியே தலையை நீட்டி ஸ்டேஷனில் இருந்த கூட்டத்தைப் பார்த்துக்



கொண்டிருந்தான், நந்தலால். அவன் முகத் தோற்றத்திலிருந்து முப்பத்தைந்து அல்லது நாற்பது வயது இருக்கும் எனச் சொல்லலாம். தலையுச்சி வழுக்கை விழுந்திருந்தது. முகத்தில் ஒரு விரக்தி பாவம் குடிகொண்டிருந்தது. நல்ல சிவப்பான உடலில் வெளுத்த கதர் ஜிப்பா அழகு கொடுத்தது. அதில் ஆங்காங்கே வர்ணப் புள்ளிகள் காணப்பட்டன!

கூட்டத்தில் இடித்து முந்திக்கொண்டு சரசு அண்ணாவின் முன் வந்து நின்றாள். தேசிகன் இறங்கியவுடன் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு சிறு பெண்ணைப்போல் அவன் முகத்தையே பார்த்தாள்.

போர்ட்டர் பெட்டி படுக்கை சித்திரக் கேன்வஸ்கள் இவைகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்தான்.

அத்: 57. பீஷ்மரோ

மேகன் உடையார்பள்ளம் ஜமீன் மாளிகையை அடையும்போது கதிரவன் நன்றாக உதயமாகிவிட்டான்.

மாளிகையை அடைந்ததும் மேகன் தன் தந்தையைப் பார்க்கச் சென்றான். பெருத்த கட்டுடன் ஜமீன்தார் படுத்திருந்தார்.

தந்தையின் படுக்கையருகில் சென்று அவரைப் பார்க்கவிரும்பிய மேகன் வாயிலிலேயே நின்றான். அவருடைய தலைப்புறத்தில் இருந்த நாற்காலிமீது அவருடைய ஆசைமாது உட்கார்ந்திருந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை

அவள் தோற்றத்தில் மிகுந்த கவலைப்படுவதாகக் காணப்பட்டாலும் அவள் கண்கள் அவளைக் காட்டிக்கொடுத்துவிட்டன. ஜமீன்தார் பிழைப்பார் என்பதில் அவளுக்கும் நம்பிக்கையில்லை. தன் எதிர்காலம் என்ன? இளமை கொஞ்சம் மீதியிருக்கும்போதே யாரை அடுத்து, செல்வத்தைச் சேகரித்துக்கொள்ளலாம்! என்ற நினைவில் இருந்தது அவள் மனம். அவளாகக்கூட அங்கு வந்து உட்காரவில்லை. ஜமீன்தாரே அவளை அழைத்துவரச் சொல்லி உட்காரச் சொன்னார். துக்கசாகரத்தில் மூழ்கி, கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த மனைவியின் முகத்தைப் பார்க்க அவருக்குப் பிடிக்கவில்லைபோலும்!

காலடிச் சப்தம் சட்டென நின்றதும் அவள் வாயிலின் பக்கம் திரும்பினாள். மேகன் அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான். 'வெளியே போ!' எனக் கைவிரலால் சைகைசெய்தான். அவள் எழுந்து தலை கவிழ்ந்தபடி நடந்தாள்.

அவள் முகத்தில் ஒரு அலக்ஷியம் தென்பட்டது—'பூ! பெண் வாடை வீசப்பிடிக்காத பீஷ்மரோ! நான் விரும்பினால் என் காலடிகளில் வீழ்த்திக்கொள்ளமாட்டேனா! வாயால் ஒரு வார்த்தை சொன்னால் முத்து உதிர்ந்துவிடுமென்று கையால் சைகை செய்கிறார் இளைய ஜமீன்தார்! இருக்கட்டும்! என எண்ணினாளோ அவள். புது தினுசான பாதசரங்களும் வளைக் கரங்களும், 'கல், கிலுக், கலீர்' எனச் சப்திக்க, சூட்டியிருந்த மலர் கம கமவென வாசனை வீச, அன்னமென மென்னடை நடந்து சென்றாள் அவள்.

போகவிட்டுப் பின் நின்று ஒருமுறை அவளைப் பார்த்தான் மேகன். அழகும், அருவருப்பும், அபாயமும் ஒருங்கே திரண்ட செந்நாகமொன்று லாகவமாக நெளிந்து ஊர்ந்து செல்வதைப் போன்றிருந்தது அவள் தோற்றம். வாழும் மனையில் மனைப் பாம்பைப் பூஜித்து வளர்ப்பதைப்போல், தாசி ஒருத்தியையும் உடன் வைத்துக்கொண்டு தன் தந்தை வாழ்க்கை நடத்தியது அவனுக்குப் பிடிக்கவில்லை.

உள்ளத்தில் உதித்த கசப்பு முகத்தில் பிரதிபலிக்க, தந்தையின் அருகே சென்று அவரையே பார்த்துக்கொண்டு நின்றான். அவருடைய கண்கள் மூடியிருந்தன. முகத்தில் இலேசாகப் பசுமை கலந்த நீலம் படிந்திருந்தது. உதடுகள் வெளுத்து, தோலுரிந்திருந்தன. பொதுவாக முகம் சாவின் நெருக்கத்தை அறிவித்தது

வேலைக்காரனிடமிருந்த விசிறியைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, "போய் அம்மாவிடம் சொல்லி, எனக்கு உடனே ஒருகப் காப்பிபோடச் சொல்லி வாங்கிவா!" என்று சொல்லிவிட்டு, நாற்காலியை எடுத்துப் பக்கத்து வாக்கில், தந்தையின் முகம்தெரியும்படியான இடத்தில், போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். விசிறுவது நின்றதால் ஈ ஒன்று அவர் உதட்டில் உட்கார்ந்தது. அதை

ஓட்டுவதற்காக ஜமீன்தார் தம் கையை அசைத்தார். உடனே மேகன், "அப்பா!" என அழைத்தான். அவர் கண்களைத் திறந்து பார்த்தார். "வாப்பா! மேகன்! வந்துவிட்டாயா!" என்று சொல்லிக்கொண்டு எழுந்து உட்கார முயன்ருர். "வேண்டாமப்பா, எழுந்திருக்க வேண்டாம்! அப்படியே படுத்திருங்கள்!" என்று சொல்லி எழுந்து நின்று அவரைப் பிடித்துப் படுக்கவைத்தான், மேகன்.

அவர் பிறகு சற்றே தலையைத் திருப்பிப் பார்த்தார். "எங்கே? அவள் போய்விட்டாளா? உம்......நீ போகச் சொல்லியிருப்பாய்!......மேகன்!......மேகநாதா!...... அவளை உனக்குத் தெரியாது. அவள்...... அவள்......தாசியல்ல!......அன்பே,... இன்பமே......உருவானவள்! அவளைக் கண்டால் உனக்கு வேப்பங்காயாக இருக்கிறது!......எனக்குப் பின்னுல்......நான் இதோடு முடிந்து......" மார்பில் வலி பொறுக்க மாட்டாமல் இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக்கொண்டு, "அவள் இல்லாவிட்டால், ஆம்! அவள் வாழ்வை ருசிக்கச் செய்திருக்காவிட்டால்......நான்...... ஏன்!...எப்போதோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன்!... என்று சொல்லி ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

மேகனின் முகம் சுருங்கியது 'இருந்துதான் என்ன காரியங்களைச் சாதித்து விட்டீர்! இருப்பதும் செத்துவிடுவதும் ஒன்றுதானே! 'அன்பா?' ...... நல்ல அன்பு! உங்கள்மீது அன்புகொள்ள என்ன இருக்கிறது உம்மிடம்? சாம்பி உலர்ந்து போன உடல். இன்பத்தையே நாடி அலையும் விட்டில் மனதைப் பிரதிபலிக்கும் கண்களுடைய விகாரமான முகம்! அவள் அன்பு செலுத்துவது உங்கள் பொக்கிஷத்தில் இருந்த— இப்போது இருக்கிறதோ இல்லையோ!— பணம்!' என மேகன் எண்ணிக்கொண்டிருக்கும் போது சமையற்காரன் காப்பிகொண்டு வந்தான்.

ஜமீன்தாரின் முகம் மேலும் வெளுத்தது. ஆழ்ந்த நீண்ட பெருமூச்சு ஒன்று விட்டுவிட்டு மீண்டும் கண்களை மூடினுர்.

சூடான காப்பியைச் சாப்பிட்ட பிறகு. டம்ளரைச் சமையற்காரனிடம் கொடுத்துவிட்டு, முத்து முத்தாக அரும்பிய வியர்வையைத் துடைத்து விட்டுக்கொண்டான், மேகன். மறுபடியும் அவருடைய வெளுத்த முகத்தைப் பார்த்தபடி உட்கார்ந்துவிட்டான். விலைமகளை உயர்வாகப் பேசிய அவர் பேச்சு அவன் சிந்தனையைத் தூண்டிவிட்டது. 'அப்பா அவள் பெயருக்கு ஏதேனும் சொத்து எழுதி வைத்திருக்கிருரோ!' என்றுகூட அவனுக்குச் சந்தேகம் எழுந்தது. அப்போது அவர் தலையணை அடியில் சற்று நீட்டிக்கொண்டிருந்த காகிதம் அவன் கண்ணில்பட்டது. எழுந்து, மெதுவாகத் தலையணையைத் தூக்கி அக்கடிதக் கற்றையையெடுத்தான்.

ஜமீன்தார் திடுக்கிட்டு எழுந்து உட்கார முயன்ருர். மார்பில் வலி பொறுக்கமாட்டாமல் மறுபடியும் படுத்துக்கொண்டார். 'மேகன்! அதைப் பார்க்காதே! வைத்துவிடு!' என்று சொல்லக்கூட அவரால் முடியவில்லை. மயக்கம் வந்து பிரக்ஞையற்றவரைப்போல் பேச்சற்று ஓய்ந்துவிட்டார். சுவாசம் இழைந்து வந்துகொண்டிருந்தது.

அப்பாவின் பதற்றத்தைக் கண்ட மேகன் அந்தக் காகிதக் கற்றையைப் பிரித்து, கவனத்துடன் படிக்க ஆரம்பித்தான். தந்தை உயில் எழுதி வைத்திருந்தார்! மேகன் எதிர்பார்த்தது சரியாகத்தான் இருந்தது. ஜமீன் சொத்தை இரண்டாகப் பிரித்து மேகனுக்கு ஒரு பகுதியும், விலைமகளின் வயிற்றில் கருவாக இருக்கும் குழந்தைக்கு ஒரு பகுதியுமாக எழுதியிருந்தார்! "இந்தச் சுண்டைக்காய் ஜமீன் இரண்டுபாகம்! கருவில் இருக்கும் குழந்தைக்கும் ஒரு பாகம்! குழந்தை இவருக்குத்தான் உண்டானது என்பதை இவர் கண்டாரா? சாகஸக்காரி! பணம் என்ருல் எதைச் செய்வதற்கும் அஞ்சமாட்டார்களே!" எனப் பதற்றத்துடன் பேசினுன் மேகன். கோபம் தன்னை மீறி வந்தது, அவனுக்கு. நல்லவேளை, உயில் இன்னும் கையெழுத்திடப்பட்டு ரிஜிஸ்தர் ஆகவில்லை. ஆவதற்குத் தயாராய் இருந்தது. உயிலின் நெட்டெழுத்தைப் பார்த்தான் மேகன். திவானுடையதாக இருந்தது. அவனுடைய கோபம் மேலும் அதிகமாயிற்று. "ஏய், யாரங்கே! திவானைக் கைப்பிடியாகப் பிடித்து அழைத்துவா!' எனக் கட்டளையிட்டான்.

திவான் வந்தார். மேகனின் கையில் இருந்த உயில் நகலைப் பார்த்ததும் அவர் நாடி தளர்ந்துவிட்டது. மேகனுக்குச் சரியான பதில் சொல்ல முடியாது என்பது அவருக்குத் தெரியும். குற்றவாளியைப்போல் அவன் முன் நின்ருர். "அப்பா சொன்னபடி எழுதினேன். நான்கூட........" எனச் சமாதானம் சொல்ல வாயெடுத்தார்.

"சட்! வாயை மூடுமையா! அவர் சொன்னுராம்; இவர் எழுதினுராம்! இது நகலா மூலமா?"

"நகல்தான்......மூலம் இன்னும் ரெஜிஸ்தர் ஆகவில்லை!"

"சரி! அதுவரையில் கொஞ்சம் பொறுத்திர்களே!" என்று சொல்லிக்கொண்டு அந்த உயிலைப் பல துண்டுகளாகக் கிழித்து அங்கிருந்த எச்சில் தம்பலத்தில் போட்டான் மேகன்,

(தொடரும்)

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!

S. 152-50 TM



குரு யார்?

ரா. ஸ்ரீ. தேசிகன்

அமராபுரியில் கடல்போல் பரந்த ஓர் ஏரி காட்சி அளிக்கும். அதன் அக்கரை நம் கண்ணிற்குப் புலனாகாது. கண்ணுக் கெட்டின வரையில் திரைத்தெழும் நீல நீர் தான் தோன்றும். காலை இளங்கதிர்கள் அவ் வேரிமீது துள்ளி விளையாடும்பொழுது, ஒரு தனிச் சோபையோடு அது மிளிரும். குறு அலைகள் கரைமீது மோதி மெல்ல அடிக்குங்கால், ஒரு மதுரவொலி கேட்கும். அவ்வொலி இன்பநாதத்தில் மிருதங்கத்தை யும் வென்றுவிடுமென்பதில் யாதொரு ஐயமு மில்லை.

அவ்வேரிக்குப் பக்கத்தில் ஒரு சிதைந்த கோயிலிருந்தது. அது ஒரு புராதனமான கோயில். பாடல் பெற்ற தலந்தான். புராணம், சரித்திரம்—இவைகளைப் பருகிய கண்களோடு பார்த்தால், ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்லும். ஒவ்வொரு மரமும் செடியும் ஒரு சோகத்தை வெளிப்படுத்தா மற் போகுமோ?

சிதைந்த கோயிலாக இருந்தபோதிலும், அக்கோயிலுக்குப் பூசை நடந்துவரும் சீரை யும் சிறப்பையும் அக் கோயிலில் வீற்றிருக் கும் பெருமான் கண்டதில்லை.

"எந்தக் கோயிலாக இருந்தால் என்ன? எல்லாத் தெய்வங்க்ளு மொன்றுதானே? செல்வத்தில் திளைக்கிற சாமிவேறு? வறு மையில் வாடுகிற சாமிவேறு? அந்த ஊர்ச் சாமி மிகுந்த வரப்பிரசாதி, இந்த ஊர்ச்சாமி ஒன்றும் பயனில்லை என்று சொல்லுகிறார் களே, எங்கேயோ சேணில் மலைமீதுள்ள தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்துகிறார் களே, நம் ஊரிலுள்ள பிரானுக்கு யாதொரு திருவிழாவும் நடத்தவில்லை. திருவிழா நடத்தவேண்டாம், கோயிலையாவது செப்ப னிட்டு அதை ஒழுங்காய் வைத்தால் போதுமே, பெரிய சான்றோர்கள் பக்தி பரவ சத்தால் கண்ணீர்விட்ட இடமாயிற்றே. இதையேன் எங்களூர் மக்கள்உணரவில்லை? 'அப்பனே, உன் கோயிலைச் செப்பனிட்டு நான் உனக்குத் திருவிழா நடத்தும் பாக் கியம் புரிந்தேனல்லேன். என் வனப்பு வாய்ந்த மனைவியை உன் திருவடி நிழலில் சேர்த்துக்கொண்டாய். என் மக்கள் யாவரும் உன் பொன்னடியின்கீழ் விளையாடுகின்றனர். என் சொத்தையெல்லாம் நடமாடும் தெய் வங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். உன் அருச்சனைக்காக வகுத்துவைத்துக் கொண்டிருந்த என் நந்தவனத்தில் கள்ளி யும், சப்பாத்தியுந்தான் வளர்கின்றன. அதுவும் உன் திருவிளையாடல்தானோ? யாதோ அறிந்திலன், உனக்கு யார் திருப் பணி செய்யப்போகின்றனர். உன் கோயில் சிறப்போடு பொலியுமோ? நடமாடும் தெய் வங்களுக்குச் செய்யவேண்டியதுதான். ஆனால் உன் கோயிலைச் சிதைந்த நிலையில்

வைத்திருப்பது ஊரார்களுக் கழகல்லவே. சிதைந்த கோயில் கவின்பெற்று எழுகின்ற பொழுதுதான் என் உள்ளத்தில் சாந்தி நிலவும்' என்று நித்தியானந்தர் நிதமும் கோயில் முன் நின்று உருக்கமாய்ப் புலம்பி, கண்ணீர் வடிப்பார்.

இவருடைய நைந்த உள்ளத்தில் எழுந்த ஓலம் ஓர் அடியார் மனத்திலும் ஓர் எதிரொலியைத் தூண்டிற்றோ? யாதோ? தெரியவில்லை. வடக்கி லிருந்துவந்த இராமானந்தர் என்ற பெரியார் இந்தச் சிதைந்த கோயிலைக் கட்டிமுடிக்க இசைந் துள்ளார். ஒரு கோடி பணம் அவருக்குண்டு. அதை முழுவதையும் கோயில் திருப்பணிக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டார்.

இரண்டு மூன்று ஆண்டுகளில் ஒரு பெரும் ஆலயம் வானளாவி நிமிர்ந்து நின்றுவிட்டது. உயிர்ச் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. புராணக் கதைகளை இவ்வுருவங்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். பல ஊர்களிலிருந்து இந்த அபூர்வ சிற்பவேலையைப் பார்க்க மக்கள் அருவி அருவியாக வந்துகொண்டிருந்தனர்.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவே எங்கே பார்த்தாலும் தோரணங்கள் கொடிகள் எல்லாம் காற்றில் அசைந்தன, ஒவ்வொரு வீட்டி லும் ஆடவரும் பெண்டிரும், ஏரிகாத்த ராம னுக்கு எதைக் காணிக்கையாய் எடுத்துச் செல்ல லாமென்று சிந்தையில் ஆழ்ந்தனர். பட்டுக்கள் வாங்கினர் சிலர்; அபூர்வமான தங்க நகைகள் செய்தனர் வேறு சிலர்; வயிர அட்டிகை பதக்கம் முதலியனவற்றை அமைத்தனர் இன்னுஞ் சிலர்; பல்வேறு வாத்தியங்களுக்கு ஏற்பாடு செய்தனர் மற்றுஞ்சிலர். பழம், தேங்காய், வெற்றிலை, எங்கே பார்த்தாலும் மலைபோல் குவிந்தன. குடங் குடமாகப் பாலுக்கேற்பாடாகிவிட்டது... தேன், பன்னீர் எல்லாம் வந்துசேர்ந்தன. பல புண்ணி யத்தலங்களிலிருந்து அபிஷேக நீர் கொண்டுவரப் பட்டது.

வேதமோதும் வேதியர்கள் கூடிவிட்டனர், அக்கினிக் குண்டங்களை வகுத்துவிட்டார்கள். போஜனசாலைகளும் அமைக்கப்பட்டன. ஒவ் வோர் உள்ளமும் உவகையில் நடனமாடிற்று. பொழுது தேய்ந்தது. நள்ளிரவு வந்துவிட்டது. ஊரெல்லாம் துஞ்சின. ஆனால் ஓர் உள்ளமும் கண்களும் துஞ்சவில்லை. நித்தியானந்தருக்கு ஒருபக்கத்தில் உவகை தோன்றும்; மற்றொரு பக்கத்தில் துயர்விரியும். தாம் கண்ட கனவு உருவாகிவிட்டதைப்பற்றி ஒருகணம் உள்ளம் பூரிப்பார், அடுத்த கணம் அதைச் சோகமுகில் மூடிவிடும்.

"நாளை எதை யெடுத்துச் செல்லுவது? என் கையில் ஒன்றுமில்லையே" என்று உள்ளம் ஏங்குவார். வெறுங்கையோடு போனால் என்ன? தெய்வத்திற்கு முன்பும் குழந்தைகளுக்கு முன்பும் வெறுங்கையோடு போகக்கூடாதென்று சாத்திரங்கள் முறையிடுகின்றனவே! ஆண்டவனுக்காக வைத்த நந்தவனத்தில் என் அதிர்ஷ்டம், கள்ளியும் சப்பாத்தியுந்தான் கிளம்புகின்றன. அவன் தந்ததைத்தானே அவனுக்குப் படைக்கமுடியும். கள்ளிக்கட்டையைப் போட்டுப் பொசுக்கினால் சாம்பிராணியாகுமா? சப்பாத்திப்பூவும் பழமுமா நான் தரும் காணிக்கை, மிக நன்றாயிருக்கிறது. பிறர் நகையாடினால் என்ன செய்வது? நகையாடினால் என்ன? பிறருக்காகவா நாம் ஒன்றைச் செய்வது? என் நந்தவனத்தில் விளைந்ததைத்தான் நான் எடுத்துப் போகமுடியும். யார் கண்டார்கள், அவைதான் அவனுக்குத் திருவுளமோ என்னவோ? ஏன் அப்படி என் தோட்டத்தில் விளையவேண்டும். இவைகளைத்தான் எடுத்துச் செல்லப்போகின்றேன். எடுத்துப் போகலாமா?" என்ற குரல் மனத்தகத்திலிருந்து எழும்.

எண்ணங்கள் எண்ணங்களோடு போராடும் செருக்களமாகிவிட்டது நித்தியானந்தர் உள்ளம்.

பொழுது தேய்ந்துகொண்டிருந்தது. நித்தியானந்தரும் சிந்தனைப் பாதையில் போய்க்கொண்டேயிருந்தார். விடிவெள்ளி வான் முதலில் முளைத்துவிட்டது. பேரிகை முழங்கிற்று. கொம்புகள் ஊதின. சங்கொலியும் கேட்டது. பூபாள ராகத்தில் நாயனங்களின் நல்லிசை எழுந்தது. அவ்வூர் மக்கள் அமுத கீத வலையில் சிக்கிவிட்டனர்.

அதிர்வேட்டுக்கள் விண்ணைப் பிளந்துகொண்டு வெடித்தன. அலைகடல் புரண்டு வருவதுபோல் ஒரு பேர் அரவம் கேட்டது. நன்றாகப் பொழுது புலர்ந்துவிட்டது. புள்ளினம் பொழில்களில் புலம்பின; மலர்கள் விரிந்தன; மதுகரம் மகர யாழ் மீட்டின. காற்றின் மீது மலரின் மணம் மிதந்து வந்தது. எல்லோரும் கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். நித்தியானந்தர் சப்பாத்திக் கள்ளிகளோடு சென்றனர். ஒவ்வொரு மூலையிலும் சூடம் எரிந்துகொண்டிருந்தது. சாம்பிராணித் தூபம் மேகம்போல் விண்ணை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. வேதகோஷம் 'கிணீர்' என்று கேட்டது. வேதகாலத்து ரிஷிகள் காலப்பனி மூட்டத்தைத் திறந்துகொண்டு நோக்கினால், ஒரு ஸ்வரங்கூடத் தப்பாமல் இப்படி உச்சரிக்கிறார்களே என்று வியப்படைவார்கள். வேதவொலியில் ஆண்டவன் குரல் எழக்காணலாம். அத்தனை அழகாய் வேதமுழக்கம் அலைக்குமேல் அலையாய் வந்துகொண்டிருந்தது.

நித்தியானந்தரோ உலர்ந்த கள்ளியைப் பொசுக்கினார். இந்த மணந்தான் நான் தரும் சாம்பிராணியாகும் என்று எண்ணவே அவர் கண்



எமது முதல்தரமான

சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 23, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?

உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நீடித்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் [illegible], குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — [illegible] பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — [illegible] ஜுரம் — சிறு இளைப்பு.

ஜம்மியின் லிவர்க்யூர்

[illegible] குலை நோய்களுக்கும் [illegible] பரவாமல் தடுப்பதற்கும் உதவுகின்றது. [illegible] மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். [illegible] ஸ்ரீனிவாஸ [illegible] தெரு, பெங்களூர் சிடி. மற்ற கிளைகள்:— பம்பாய் · நாகபூர் · லக்னோ · கல்கத்தா · விஜயவாடா · விஜயநகரம்.

ஜம்பி வெங்கடரமணய்யா & சன்ஸ்
[illegible] ரோடு, [illegible], மதராஸ்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJ*
A great Blood Purifier & Digestive & Potential Tonic.

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

களில் நீர் மல்கிற்று. இந்தச் சப்பாத்திப்பூ நான் தரும் ரோஜா மலரும், மல்லிகையும், முல்லையும் துளசியுமாகும். இந்தப் பழத்தை முக்கனியாகக் கொள்வீர் என்று தியானத்தில் ஆழ்ந்தார் நித்தியானந்தர்.

அம் மாபெரும் கூட்டத்தில்,

"அவர் யார் தெரியுமா?" என்றார் ஒருவர்.

"அவரைத் தெரியாதா? அவர்தான் நித்தியானந்தர்" என்றார் மற்றொருவர்.

"சித்தம் சுவாதினமில்லையா?"

"சப்பாத்திப் பழத்தையா நம்முடைய ராமனுக்கு அர்ப்பணஞ் செய்கிறது?"

"யார் கண்டா, தம்பி. பட்டாடைகள், வயிர நகை, தங்கநகைகள் இவைகளைப் பகவான் விரும்ப மாட்டான். அன்போடு எதை அளித்தாலும் அவன் ஏற்றுக்கொள்ளுவான். கொடுக்கும் பொருளில் இல்லை; 'அன்பில்'தான் எல்லாம் தங்கிநிற்கின்றன. முக்கனியைவிட்டுச் சப்பாத்தி பழத்தைத்தான் இன்பமாய்த் தின்பான் அம் மாயோன். விதுரன் கஞ்சியைத்தானே பருகினான் கண்ணன். அன்பு தழுவினால்தான் அது பவித்திரமாகுமப்பா. அவர் ஒரு பெரும் பழுத்த ஞானியாயிருக்கலாம்"

"அதென்னவோ ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியா ஒரு மனிதன் செய்வான்? நல்ல பக்தி ஐயா, இது நல்ல பக்தி! இதுவா, பக்திபரவசம்?"

இவர்கள் பேச்சரவம் கூட்டத்தின் பேரொலியில் இறந்துவிட்டது. தம்மை மறந்த நித்தியானந்தர் செவிகளில் இச்சம்பாஷணை விழவில்லை. கூட்டம் கலைந்துவிட்டது. அமைதி நிலவத் தொடங்கிற்று. கோபுரத்து மங்கல தீபங்கள் இருளைக் கிழித்துக்கொண்டு மின்னின. அஞ்ஞான இருட் பிழம்பில் ஞானவொளி போல அவைகள் திகழ்ந்தன.

நித்தியானந்தர் மனத்தில் அமைதியில்லை. அவர் மனம் பதைத்தது. வேதப்பிரானுக்கு அபசாரம் செய்துவிட்டதாக எண்ணினார். உள்ளத்தில் எழும் போராட்டத்திற்கு எல்லை இல்லை. இரவும் மெல்ல ஊர்ந்தது. இரவில் கரையிலாக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றவன் வெய்யோன் விரிசோதியை நாடுகிறவன் போலக் காலை வரவையெதிர்பார்த்த வண்ணமாய் நித்தியானந்தர் இருந்தார்.

ஏரி கரையில் ஓர் அழகான மண்டபம் விளங்குகின்றது. அதில் நிதம் திருவாய்மொழி காலக்ஷேபம் நடைபெறும். கோமளபுரம் கோவிந்தாசாரியார் உருக்கமாய்ப் பேசுவார். அவர் ஓர் உயர்ந்த ஆதனத்தின்மீது கம்பீரமாய் உட்காருவார். பூணும் வைணவச் சின்னங்களோடு அவர் உட்காந்திருப்பதைப் பார்த்தால் ஒரு மகானென்றே யாவரும் அவரைக் கருதுவர். வெற்றிலை பாக்கு, தேங்காய் பழம் முதலியவை வரிசை வரிசையாக அங்கே வைக்கப்பட்டிருக்கும். சாம்பிராணிப் புகைப்படலம் மேலே மெல்லப் பறந்து செல்லும். இரண்டு அடியார்கள் அவருக்கு விசிறிக் கொண்டிருப்பார்கள். பிரசங்கம் வழக்கம் போலத் தொடங்கியாகிவிட்டது.

கோயிலில் மணி அடித்துக்கொண்டிருந்தது. நித்தியானந்தர் இரவு முழுவதும் கண் அயரவில்லை. அலைக்குமேல் அலைகளாய் எண்ணங்கள் பொங்கிவீசின. ஆண்டவனை நிதம் வழிபட்டுவந்த அவருடைய மனத்தில் ஒரு பேரச்சம் புகுந்துவிட்

டது. பறவைகள் பொழிலில் பண்ணிசைத்துப் பாடின. இளங்காற்று மெல்ல வீசிற்று. மலர் மணம் எங்கும் பரவிற்று. எழிலையும் அமைதியையும் போர்த்தே இயற்கை அன்னை களி நடனம் புரிந்தாள். புறத்திலொரு புகலரும் அமைதிதான். நித்தியானந்தர் அகத்திலோ ஒரு புயற் குழப்பம்; ஒன்றையும் கவனிக்காது ஏரியைச் சுற்றிவந்தார். சிந்தனை உலகில் நீண்ட பிரயாணஞ் செய்துகொண்டே அவர் அதை வலம்வந்தார். ஏரி கரை மீதுள்ள மண்டபத்தில் கூடியிருக்கும் அடியார் கூட்டம் இவர் மனதைச் சற்று ஈர்த்தது. கோவிந்தாசாரியார் ஆண்டவன் அருளைப்பற்றிப் பேசத்தொடங்கும் தருணம் நித்தியானந்தர் அங்கேபோய்ச் சேர்ந்தார்.

"ஆண்டவனை எல்லாம் செய்யவல்லவன் என்கிறீர்களே. அண்டங்களை யெல்லாம் சதுரங்கக் காய்கள்போல வைத்தாடும் பிரானுக்கு ஓரிடத்தில் சக்தி குன்றிப்போய்விடுகின்றது; அசக்தனாய்ப் போய்விடுகின்றான். அடியார்கள்மீது வைத்த அனுராகத்தால் அவன் சக்தி இழந்தவனாய் விடுகின்றான்."

"அப்படியா?" என்று நித்தியானந்தர் பெருமூச்சுவிடுகின்றார்.

"எல்லா அறிவும் படைத்த ஆண்டவன் அந்தனாய்விடுகின்றான்"

"இஃதென்ன ஆச்சரியமாயிருக்கிறது" என்று நித்தியானந்தர் தமக்குள்ளே வியந்தார்.

"அடியார்களின் குற்றங்களை அவனால் காண முடியவில்லை. எதனால் தெரியுமா? அவனை விட்டு அகலாது நிற்கும் கருணையால் தான்."

"அத்தனை கருணையா? நான் வழிபடும் பிரானுக்கு அத்தனை கருணையா!" என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார். தம் மனத்தை விட்டு ஒரு பெரும் பாரம் இறங்கினது போலப்பட்டது. பகவான் தான் எனக்கு அந்த உருவாய் வந்து ஆறுதலை அளித்தார்.

'பரிவதி லீசனைப்பாடி, விரிவது மேவலுறுவீர்
பிரிவகை யின்றி நன்னீர்தூய், புரிவதுவும் புகை பூவே'

'இந்தப் பாசுரத்தை நன்றாய்க் கவனிக்க வேண்டும்' என்று யாழொத்த குரலில் பாடினார், 'எந்தப் புகையும் அவனுக்கு விருப்பம், உன்னால் துர் நாற்றத்தைச் சகிக்க முடியாததால், நறும் புகையை நீ நாடுகின்றாய். எந்தப் பூவையும் அவன் உவந்து ஏற்றுக்கொள்ளுவான். முள்செறிந்த பூவை ஆண்டவனுக்குச் சமர்ப்பணஞ் செய்யக்கூடாது என்று சாத்திரங்கள் முறையிடுகின்றன. ஆமாம், உண்மைதான்; உன்மெல்லிய விரல்கள் நோகுமே, அதனால்தான் நல்ல பூவை அவனுக்கு அளிப்பாயாக என்று அடியார்கள் கூறினர்.

'இன்னும் ஒன்று சொல்லுகின்றேன்; அவனுக்கு அளிப்பது நம்மிடத்தில் யாதொன்றுமில்லை. அவன் சொத்தை நமதென்று கருதுகிறோமே; அது திருட்டுத்தனமாகும்.

"என் நந்தவனம் என்று சொல்லிக்கொண்டேனே என்னைவிடத் திருடன் யார்" என்று தம்மையே நொந்துகொண்டார் நித்தியானந்தர்.

"நம்முடைய ஆவியும் அவனுடையதே. இதையுணர்ந்த நம்மாழ்வார் பாடிய பாட்டைக் கேளுங்கள்.

எனதாவியுள் கலந்தபெரு நல்லுதவிக் கைம்மாறு
எவதாவி தந்தொழிந்தே னினிமீள்வ தென்பதுண்டே
எனதாவி யாவியும் நீ பொழிலேழு முண்ட வெந்தாய்
எனதாவி யார்யானார் தந்தநீ கொண்டாக்கினையே

"எனதாவியும் எனக்குச் சொந்தமில்லையா; என்ன ஆச்சரியம்!" என்று நித்தியானந்தர் சிந்தையில் ஆழ்ந்தார்.

'இப்படிப் பாட எத்தனை பெரிய பழுத்த அனுபவம் வேண்டும் பாருங்கள். அவர் ஒரு பெரும் ஞான தீபமாய் நிற்கின்றார். இத்தகைய பேரொளி முன்புமில்லை, இனி எழுமோ தெரிந்திலம். அறிவு, உணர்ச்சி, கற்பனை, கவிதைப் பெருக்கு, வாழ்க்கைத் தூய்மை, அனுபவம் எல்லாம் ஓர் உருவமாய் நிற்கின்ற ஆழ்வாரைத் தவிர நாம் கண்ட நல்லது வேறொன்றில்லை.

நாவினால் நவிற் றின்ப மெய்தினேன்
மேவினே னவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன்குரு கூர்நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே.

என்று மதுரகவி ஆழ்வார் பாடினதை மனத்தில் இருத்திவைத்துக் கொள்ளுங்கள்' என்று தம் உபந்நியாசத்தை நிறுத்தினார். மிகப் பாவம் செய்த உள்ளங்களிலும் அமைதி பாய்ந்தது. நித்தியானந்தரும் 'தேவு மற்றறியேன் குருகூர் நம்பி பாவி னின்னிசை பாடித்திரிவனே' என்று தமக்குள் பாடிக்கொண்டே வீடு சேர்ந்தார்.

ஒரு நாள் மாலை கோவிந்தாசாரியார் தம் வீட்டுத் திண்ணையில் உட்காந்திருந்தார். மேற்றிசையில் இயற்கை அன்னை வானக்கிழியில் கணக்கிலா ஓவியங்களைத் தீட்டிக்கொண்டிருந்தாள். ஏரியின் அடியில் ஒரு கந்தர்வ உலகம் விரிந்துகொண்டிருந்தது. நித்தியானந்தர் அவர் பாதத்தில் விழுந்து வணங்கினார்"

"யார் தாங்கள் தெரியவில்லையே?"

"தங்கள் சிஷ்யன் நான்"

"சிஷ்யரா?"

"எனக்கொரு சிஷ்யரும் கிடையாதே! ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக முன்னோர்கள் செய்த உரைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன், நான் ஒரு வியாபாரி."

"அன்றைக்குத் தாங்கள் செய்த உபந்யாசம் என் மனத்தில் ஆறுதலைப் பெய்துவிட்டது. என்னைத் தெரியுமா!"

"தெரியாது, சொல்லுங்கள்"

"என் பெயர் நித்தியானந்தன்.

"என் மனைவி இறந்துவிட்டாள். என் பிள்ளைகள் ஒருநாள் படகில் போய்க்கொண்டிருக்கும் பொழுது படகு கவிழ்ந்து அனைவரும் இறந்து விட்டனர்."

'அப்படியா? பகவத் சங்கல்பம்' என்று உணர்ச்சியற்றுப் பழக்கத்தின் மீது சொற்கள் கோவிந்தாசாரியிடமிருந்து வந்துகொண்டிருந்தன. 'எல்லாவற்றையும் விட்டு என்னைப் பின்பற்று; உன்னுடைய சோகத்தை நான் துடைப்பேனென்று சொன்னானே அம்மாயோன். அவன் அளித்த உண்மையை நாட முயன்றேன். நான் ஒன்றையும் விடவில்லை. அவனே எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

"எல்லாம் அவன் திருவருள்" என்றார் ஆசாரியார்.

'எனக்கொரு தோட்டந்தானிருக்கிறது. மற்ற எல்லாச் சொத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்து விட்டேன். தோட்டத்தில் எது போட்டாலும் ஒன்றும் விளைகிறதில்லை. கள்ளியும் சப்பாத்தியும் தோன்றின. கும்பாபிஷேகத்தன்று அவைகளைச் சமர்ப்பித்தேன்,'

'அப்படியா? யாரோ சொன்னார்கள்.'

"அபசாரமோ என்று நினைத்தேன். தங்கள் உபந்யாசம் என் மனத்தில் சாந்தி பிறக்கும்படி செய்துவிட்டது. தாங்கள்தான் எனக்குக் குருவும் தெய்வமும்."

'நானா குரு? நான் ஒரு வாணிகன். வேதாந்தத்தை விற்பனை செய்யும் ஒரு கள்வன். தங்கள் தியாகம் என்னிடத்தில் ஏது? வாயொன்று புலம்புகின்றது; கண் ஒன்றை நாடுகின்றது; மனமொன்றைச் சிந்திக்கிறது; கையொன்று செய்கின்றது. இந்நிலையில் நிற்கும் என்னையா குருவாய்க் கருதுகின்றீர்கள். என் வெறும் வாய்ச்சொல் தங்களிடத்தில் உருவாய்விட்டது.' என்று ஆசாரியர் தம் உண்மை நிலையை உணர்ந்து அப்பொழுது தான் பேசினார். இருவர் கண்களும் சந்தித்தன. சொல்லும் செயலும் மணந்துவிட்டன. இந்தக் காட்சியைக் காண விண்மீன் வனிதையரும் வானில் கூடிவிட்டனர். அவர்கள் நூபுரவொலியை விரிந்த பாரும் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. ●

எதிர்பார்த்தல்

ஸுரவரம் பிரதாப ரெட்டி—தெலுங்கு

தமிழாக்கம்—**D. ராஜன்** (அனுமதியுடன் மொழி பெயர்த்தது)

"சங்கரன்! தினம் சூரியன் கிழக்கே உதயமாகி மேற்குக் கடலிலே ஆழ்ந்துவிடுகிறானே! இரவெல்லாம் எங்கே இருப்பான்? மறுபடியும் காலையில் கிழக்கே தோன்றுகிறானே. அதெப்படி?"

"ஆம் குமரி! தொன்றுதொட்டு இப்படித்தான் நடக்கிறது. எல்லாமே தோன்றித்தான் மறையும். மறையும் பொருள் மறுபடியும் பிறக்கும். நமது கிராமத்திலே கிழக்குக் கடலும், மேற்குக் கடலும் ஒன்றாகக் கலக்

கிறது. அதனுல்தான்...... சூரியன் சமுத்திரத்திலே தோன்றி, சமுத்திரத்திலேயே மறைந்து முழுகிவிடுவதைப் போலக் காணப்படுகிறது."

"சரி, வேறு தேசங்களில் எப்படி இருக்குமாம்?"

"இது எங்குமே காணக் கிடைக்காத அபூர்வ சௌந்தரியம்! வடக்கே போனுல் பூமியிலேயே சூரியன் உதித்து, பூமியிலேயே அஸ்தமிப்பதுபோலத் தோன்றுகிறது."

"ஓ! அந்த அலைகளைப்பார். ஒன்றின்மீ தொன்று ஏறித் தாவிக்குதித்துத் துள்ளி விளையாடுகின்றனவே! அவைகளுக்கு ஓய்வே கிடையாதா?"

"அதுவே எல்லை காணமுடியாத அன்பின் அடையாளம். ....சரி அதிருக்கட்டும். இன்னும் கொஞ்சநேரத்திலே சூரியன் அஸ்தமிக்கும். எப்பவும்போல, மேட்டிலிருந்து கடற்கரை வரை சறுக்கி விளையாடுவோம் வா!"

"ஊஹூம்! நான் மாட்டேன். தினமும் நான்தானே முதலில் சறுக்கி விளையாடுகிறேன்... என்னுல் முடியாது. எத்தனை உயரம் பார்த்தயா? சுமார் 40 அடி உயரம் இருக்கும் இந்த மண்மேடு!"

"நீதான் முதல்லே ஆரம்பிக்கணும்"

"இல்லை; இல்லை நீதான்"

"சரி"

சங்கரன் மணல் மேட்டில் படுத்துக் கொண்டு கடற்கரை வரையில் மேலிருந்து சறுக்கி வந்துகொண்டிருந்தான். குமரியுங் கூடத்தான்! குமரியின் தலை மார்பில் உரசியது. இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். உடம்பு முழுவதும் ஒரே தூசி. தூசியைத் தட்டிவிட்டு மறுபடியும் உயரச் சென்றுர்கள். மறுபடியும் சறுக்கி விளையாடினுர்கள். மாலைவரையில் இதேமாதிரி விளையாட்டுத்தான். அந்தி மயங்கி இருளை அழைத்தது. அவர்கள் வீட்டிற்குச் சென்றனர்.

* * *

சங்கரனின் பெற்றோர்கள் இவ்வுலக வாழ்விலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்கள். மாமன் வீட்டில் சங்கரன் வளர்ந்துவந்தான். இப்பொழுது வயது 15 இருக்கும். அழகிய பச்சிளங்காளை. திருவனந்தபுரத்துச் செம்படவர்கள் சற்றுக் கறுப்பாகத் தானிருப்பார்கள். சங்கரனே கோதுமை நிறத்தவன். தினம் மாமனுடன் கடற்கரைக்குச் சென்று மீன் பிடிப்பது வழக்கம். குமரி அவனுடைய மாமனுக்குச் செல்லப்பெண்! உடன் பிறந்தவர்கள் கிடையாது. சிறுமியாக இருந்தாலும் சமைப்பதில் கெட்டிக்காரி. சக்கப்பழத்தை (பலா) நறுக்கிக் கறிசெய்வதிலும் மீன் குழம்பு செய்வதிலும் அவளுக்கு ஈடு அவளேதான்?

கொஞ்சம் கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகி. கருவண்டுகளைப்போலச் சுழன்று வட்டமிடும் குறுகுறுத்த கரியகண்கள். மூக்கும் முழியும் பிறரைக் கவர்ந்துவிடும். கருமுகிலை ஒத்த நீண்ட கூந்தல். வெண் சங்குபோன்ற முத்துப் பல்வரிசை. அவள் சிரிக்கும்போது "கலீர்" என்று வெளிப்படும் ஓசையினுல், சங்கரனின் உள்ளத்தில் ஒரு வித மின்சார அலைபாய்ந்து ஊடுருவிச் செல்லும்.

தம்புரா சுருதியைப்போன்ற மெல்லிய குரலில் அவள் பேசும்போதெல்லாம் இன்ப லாஹிரியில் அவன் ஆழ்ந்துவிடுவான். குமரி கொஞ்சி விளையாடும் கிள்ளை மொழியாள். சங்கரனைக் குமரியின் குரல் குதூகலமடையச் செய்துவிடும். அவள் மனம்போன போக்கில் சுயேச்சையாக விளையாடித் திரிவாள். அவர்கள் அனவரதமும் இணை பிரியாத அன்னப்பறவைகளின் ஜோடியைப் போன்றே காணப்பட்டார்கள். இதைக் கண்டவர்கள் "மாமன் மகள் தானே! அவளைக் கட்டிக்கொள்ளப் போகிறுன்" என்று பேசிக் கொள்வார்கள். இதெல்லாம், அவர்களிருவருக்கும் தெரியுமா என்ன?

அவர்களுடைய இதய அடிவாரத்திலே தோன்றிய அன்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அந்த அன்பு பூத்துக் குலுங்கிக் கொண்டு தான் இருந்தது. அவர்கள் என்றும்போலவே கடற்கரையில், காலையிலும், மாலையிலும் விளையாடிக் கொண்டுதானிருந்தார்கள்.

* * *

வருஷங்கள் கால அலைகளில் மிதந்தோடின. இப்பொழுது சங்கரனுக்கு வயது 20. குமரிக்கு வயது 15 நிறைந்துவிட்டது. மேனியில் அழகு ஒளி மின்னியது. பூவிதழ் உதடுகளிலே புன்னகை பூத்து விளையாடியது. பேசாமல் பேசும் கண்கள்! அக்கண்களில் சுடர்விடும் அன்பு உணர்ச்சி. மோகனச் சிரிப்பு. களங்கமற்ற பேச்சு; கம்பீரமான நடை. முன்னுல் எடுத்துக்கட்டிய பின்னலும்

அவளிடம் மலர்ந்திருந்த அழகுப் பொலிவும் சங்கரனுடைய மனதில் பதிந்துவிட்டன. அந்தக் காலத்திலே இப்பொழுதிருக்கும் மாதிரி கேரளப் பெண்மணிகள் சேலைகளோ ரவிக்கைகளோ அணிவது கிடையாது. சிறு முண்டுதான் அணிவார்கள். அப்படியிருந்தும் குமரி அழகுடன்தான் காணப்பட்டாள். பிள்ளைப் பருவம் நீங்கி, இளமையை அடைந்துங்கூட விளையாட்டை நிறுத்தவில்லை. மணல் மேட்டிலிருந்து சறுக்கி வரும்போது குமரியின் தலை அவனுடைய மார்பில் உராய்வதுண்டு. அப்பொழுது அவன் உலகையே மறந்து விடுவான். அவளுடன் கைகோத்து, வீடு செல்லும்போது புளகாங்கிதமடைவான்.

கடற்கரையிலே பூரண சந்திரிகையின் குளிர்ந்த ஒளியிலே தன்னை மறந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அவனுடைய மடியில் படுத்த வண்ணம் அவள் உறங்கிப் போய் விடுவாள். சங்கரன் கதைகள் சொல்லி அவளை அன்புடன் முத்தமிடும் போதெல்லாம் அவள் தன்னை மறந்து விடுவாள்.

ஜனங்கள் "பொருத்தமான ஜோடி! ஜோடிப் புருக்கள் மாதிரியாகவன்றோ இருக்கிறார்கள்" என்று கூறுவார்கள்.

சங்கரனும், குமரியும் கடற்கரையிலிருந்து பேசிக்கொண்டே வீட்டிற்குச் சென்றார்கள்.

"குமரி! தெரியுமா உனக்கு? அடுத்த ஞாயிற்றுக்கிழமை நமக்குக் கலியாணம் நடக்கப்போகிறதே! வீடெல்லாம் அலங்காரம் செய்தாகிவிட்டது."

"ஓ தெரியுமே! எனக்கு அப்பவே தெரியும்"

"நம்மிருவருக்கும் திருமணம் நடந்து கணவனும் மனைவியுமாகிவிட்டால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்?"

"ஏன், இப்ப மாத்திரம் ஆனந்தமாக இல்லையா? ஒரே ஆனந்தம்! இன்னமும் எப்பொழுதும் போலவே விளையாடலாம். இல்லையா?"

"விளையாட எங்கே சமயம் கிடைக்கப்போகிறது? குடும்பம் நடத்த வேண்டும். வீட்டு வேலை அதிகமாகிவிடும். நான் தினம் மீன் பிடித்து வருவேன். நீ வீட்டுப் பொறுப்பைக் கவனிப்பாய்! வயதான தாய் தந்தையர்க்குச் சேவையும்............"

"நீ என்னை விரும்பமாட்டாயா?"

"யார் அப்படிச் சொன்னது? உள்ளக் கோயிலில் வைத்து, மலர்களால் உன்னைப் பூஜிப்பேன்"

குமரி இன்ப வெள்ளத்தில் நீந்தியவாறு எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். "பகலில் மீன் பிடிக்கப் போவேன். சாயங்காலம் குழம்புஞ்சோறும் கொண்டுவந்து கடற்கரையில் காத்திருக்க வேண்டும். வருவாயா?"

"ஏன் வரமாட்டேன்! ஒரு மணி நேரத்திற்கு முன்பே வந்து, எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்"

"நான் சமுத்திரத்திலே மீன் பிடிக்கும்போது, நீ வீட்டுவேலையில் கவனமாக இருப்பாய்; என்னை மறந்துவிடுவாயே!"

"இல்லை; இல்லை! ஒருநாளும் மறக்கமாட்டேன். உன்னை மறந்தால், உலகத்தையே மறந்துவிட வேண்டியதுதான்!"

* * *

அன்று சனிக்கிழமை. மத்தியானம் சங்கரன் சாப்பிட்டான். குமரியை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான்.

"குமரி! நமது குலவழக்கப்படி, திருமணத்திற்குக் குறைந்தது ஏழு மீன்களாவது பிடித்துவர, நான் தனியாகவே கடலுக்குச் செல்லவேண்டும். ஒருமணி நேரத்திற்குள் திரும்பிவந்துவிடுவேன். என் உடல் அங்கிருக்கும். என் உள்ளம் உன்னிடம்தான்! நாளைக்குத் திருமணம். ஆனந்த வெள்ளத்தில் மிதப்போம்"

"சீக்கிரம் வந்துவிடுவாயா?"

"நிச்சயமாக!"

"மீன் வேட்டையிலே என்னை மறந்துதானே விடுவாய்?"

"இல்லை! நீதான் மறப்பாய்!"

"சீக்கிரம் வராவிட்டால் அப்புறம் உன்னுடன் பேசவேமாட்டேன். சீக்கிரம் வா! காத்துக் கொண்டிருப்பேன்!"

"நிஜமாக" என்று கூறி, சங்கரன் குமரியை அணைத்துக்கொண்டான். பிறகு மெதுவாகப் படகை ஓட்டிக்கொண்டு கடலுக்குள் புகுந்தான்.

அவன் படகு மறைந்து செல்லும்வரை அவன் சென்ற திசையைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். வீட்டிற் சென்று ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இரண்டு மணி!...... மூன்று......!

நான்கு மணி நேரம் சிட்டாகப் பறந்துவிட்டது! மாலை மங்கி எங்கும் இருள் பரவியது. சங்கரன் வரவில்லை! "நிலாக்காலம் பயப்படவேண்டாம்! மீன்கள் அகப்பட்டிருக்காது. பாதி ராத்திரியான தும் சங்கரன் வந்துவிடுவான்'' என்று குமரியின் தாயும் தந்தையும் கூறி அவளைத் தேற்றினர். குமரி சாப்பிடவில்லை. தூங்கவுமில்லை. வீட்டு முற்றத்தில் அமர்ந்து, பொங்கி வழியும் கடலைக் கவனித்துக்கொண்டே இருந்தாள். சிறு சப்தம் வந்தாலும் சரி! சங்கரன்தாள் வந்துவிட்டா னென்று எண்ணுவாள்.

விடிவெள்ளி முளைத்தது. அவள் கடல்கரையைப் பார்த்துக்கொண்டுதானிருந்தாள். குமரியின் பெற்றோருக்கும் கலவரம் ஏற்பட்டது. மத்தியானம் ஆனதும் குமரியின் தந்தை நண்பர்களுடன் "கட்டுமரம்'' கட்டி, சங்கரனைத் தேடிக் கடலில் புகுந்தான். எங்கும் சல்லடை போட்டுச் சலித்தாய்விட்டது. சங்கரன் போன இடம் புலப்படவேயில்லை. படகையும் காணோம். எல்லோரும் வீடு திரும்பினர். சங்கரன் இந்த உலகத்தில் இப்பொழுது இல்லை என்ற முடிவிற்கு வந்தனர். குமரியின் பெற்றோர் அவளை அணைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதனர்.

"சரி, லக்கனப் பொருத்தமில்லை போலிருக்கு. தெய்வ சித்தம் வேறுவிதமாக இருந்தால் நாம் என்ன செய்வது?'' என்றார் ஒருவர்.

"ஆஹா! பார்வதி—பரமசிவன்மாதிரி ஜோடி!'' என்று வருந்தினர் மற்றவர்.

"பாவம்! சூதுவாது தெரியாதவண்டா சங்கரன்'' என்றார் மூன்றாம் பேர்வழி.

குமரியின் கண்களில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வரவில்லை. அவள் வாயடைத்துப்போனாள். அவளுடைய கண்களில் சோக நிழல் படர்ந்திருந்தது. இப்பவும் அவள் கடற்கரையைப் பார்த்துக்கொண்டுதானிருந்தாள். அவள் பேசவில்லை; அழவில்லை, சாப்பிடவுமில்லை, அந்தி மயங்கும் வேளை. சுற்றத்தார் ஒருவர்பின் ஒருவராக வீடு சென்றனர்.

சூரியன் மேற்குக் கடலிலே மறைந்துகொண்டிருந்தது. குமரி குழம்புஞ் சோறும் மீனும் எடுத்துக்கொண்டு, சங்கரனைக் கடைசியாகச் சந்தித்த அதே இடத்திற்குச் சென்றாள். ஆழங்காண இயலாத கடலை உற்றுப்பார்த்தாள். தாயும், தந்தையும் வந்து அவளைச் சமாதானப்படுத்தினர்கள். இரவு வெகுநேரமாகிவிட்டது. அவர்கள் குமரியை வீட்டிற்கு அழைத்துச்சென்றனர். அவள் தினம் குழம்புஞ் சோறும் சமைத்த காய்கறியும், எடுத்துக் கடற்கரைக்குச்செல்வாள். இரவு நேரமானதும் வீடு திரும்புவாள்.

"சங்கரன் எங்கே வரப்போறான்? அவன் தான் போயே போய்விட்டானே!'' என்று அவளுடைய பெற்றோர் கூறும்போதெல்லாம், "இல்லை; இல்லை! என் அன்பன் சங்கரன் கட்டாயம் வருவான்'' என்று கூறுவாள்.

"மகளே! வர வர உனக்குப் பைத்தியம் அதிகமாகிக்கொண்டு வருகிறது''

"இல்லை அம்மா! சங்கரன் வருவான். போகும்போது என்னை மறக்காதே!'' என்று சொல்லிப் போயிருக்கிறான்!''

"அதனால்தான் உன்னை மறந்தானே! இனி அவனை நினைப்பதில் பிரயோசனமில்லை''

"முடியாது! என்னை ஒருநாளும் மறக்கமாட்டான். உள்ளக் கோயிலில்வைத்து மலர்களால் உன்னைப் பூஜிப்பேன். அனவரதமும் துள்ளிக் குதித்து விளையாடும் அலைகளைப் போலவே நமது காதல் சதமானது என்று சொல்லியிருக்கிறானே!''

"மகளே! விசனம் வேண்டாம். சொல்வதைக் கேள். உனக்கு நல்ல வரனைத் தேடுவோம்.''

குமரியின் கண்களில் கண்ணீர் அருவி பெருகியது.

"சங்கரனைவிட நல்ல வரன் இந்த உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்கமாட்டான். என் சங்கரன் வருவான். என் கலியாணத்தைப்பற்றிக் கவலை வேண்டாம். நாங்கள் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே எங்களுக்குத் திருமணம் நடந்துவிட்டது. இப்படியே காத்திருப்பேன். இல்லாவிட்டால் என் காதலனைத் தேடிக் கடலுக்குள் சென்றுவிடுவேன்.''

* * *

வருஷங்கள் சென்றன. குமரியின் பெற்றோர் காலமாயினர். சொத்து ஏராளமாக இருந்தது. குமரி தினம், தன்க்கும் சங்கரனுக்கும் சேர்த்தே சோறு சமைப்பாள், சங்கரனுடைய பங்கை, அவனைக் கடைசியாகப் பிரிந்த அதே இடத்தில் கொண்டுபோய் வைப்பாள். நாட்கள் சென்றன, மாதங்கள் மறைந்தன. வருஷங்கள் காலப்பிரவாகத்தில் உருண்டோடின. குமரி 60 வயதுக் கிழவியானாள், 34 ஆண்டுகளாகவே இவ்விதம் வாழ்க்கைச் சக்கரம் சுழன்றுகொண்டிருந்தது.

குமரிக்குத் திடீரென்று, ஜுரம் வந்தது. கட்டிலைச் சரணடைந்தாள். அடுத்த வீட்டிலிருந்த நாயர் பெண் அவளுக்கு உதவிகள் செய்துவந்தாள்.

"சங்கரன் பட்டினியாக இருப்பான். என்னால் இன்று அவனுக்குச் சோறுகொண்டுபோக முடியாது. நீ சோறு கொண்டுபோ!'' என்று குமரி கெஞ்சிக்கேட்டாள்,

ஒருநாள் ஜுரம் அதிகரித்துவிட்டது. துறவியைப்போலவே தூய வாழ்க்கை நடத்தியவள்; அவளுடைய நிர்மலமான, பிரேமையும், அகண்ட பக்தியும், உறுதியான நம்பிக்கையும் கண்ட கிராம ஜனங்கள் அவளுக்கு வணக்கம் செய்தனர்; ஜுரம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது, குமரியின் பிரக்ஞை தவறிவிட்டது. ஊர் ஜனங்கள் கூடி விட்டனர். குமரி தன்னை மறந்து கத்தினாள்: "சங்கரன்! மறந்து விடாதே. சீக்கிரம் திரும்பு! நீ இல்லாமல் உயிர் வாழமுடியாது. வா! வா!! உடனே வந்து இந்த அபாக்கியவதியை ஏற்றுக்கொள்." அவளுடைய பிதற்றலும் அதிகரித்தது,

மாலை மங்கியது. குமரியைச் சுற்றி ஒரே கூட்டம். குமரியின் முகத்தில் திவ்ய ஒளி வீசியது. கண்களில் ஆனந்தம் குடிகொண்டிருந்தது. திடீரென்று கட்டிலை விட்டு எழுந்தாள். "அதோ! சங்கரன் வந்து விட்டான்! என்னை மறக்கவில்லை. சங்கரன் பொய்யன் அல்லன், இதோ! வந்தேன் இதோ......இதோ......" என்று கூறிக் கட்டிலின் மேல் விழுந்தாள். எங்கும் ஒரே அமைதி. குமரியின் தேகம், குளிர்ந்து விட்டது. கண்கள் சொருகிவிட்டன. முகத்தில் அதே திவ்ய ஒளி!

கிராம ஜனங்கள் குமரி சங்கரனுக்குத் தினம் சோறு கொண்டுபோய், காத்திருந்தாளே அதே இடத்தில் அவளுடைய உடலைப் புதைத்தனர். 'சமாதி' கட்டி, அதன் மீது ஆலயம் அமைத்தனர். விசாலமான அன்பின் அடையாளமாக அணையா விளக்கை ஏற்றினர். அது அகண்ட பிரேமையின் ஆலயம். அங்கே அமர ஜோதி வீசுகிறது. கற்புக்கனல் வீசிய குமரியை மக்கள் கன்யாகுமரி தேவியாகப் பூஜிக்கின்றனர். அவள் பராசக்தியின் ஜோதியில் இரண்டறக் கலந்துவிட்டாள்.

"உள்ளக் கோயிலில் வைத்து மலர்களால் பூஜிப்பேன்! மக்கள் உன்னைக் கொண்டாடுவார்கள்" என்று கூறிய சங்கரன் வாக்குப் பொய்க்கவில்லை!



குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம்	**ரூ. 18,75,000**
ரிஸர்வ் நிதி	**ரூ. 10,75,000**

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

ஸ்ரீ ஸ்துதி

ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

माता देवि त्वमसि भगवान् वासुदेवः पिता मे
जातस्सोऽहं जननी युवयोरेकलक्ष्यं दयायाः ।
दत्तो युष्मत्परिजनतया देशिकैरप्यतस्त्वं
किं ते भूयः प्रियमिति किल स्मेरवक्त्रा विभासि ॥

மாதாதேவித்வமஸி பகவாந் வாஸுதேவ: பிதாமே
ஜாதஸ்ஸோஹம் ஜநநியுவயோ: ஏகலக்ஷ்யம் தயாயா: |
தத்தோயுஷ்மத் பரிஜநதயா தேசிகைரப்யதஸ்த்வம்
கிம்தேபூய: ப்ரியமிதிகில ஸ்மேரவக்த்ரா விபாஸி|| (23)

யதுகுல காம்போதி **ஆதி 2 களை**

லகு

ஸ்ா ; ; ; ·ரி ஸ்ா நி தா ; த ஸ்ா நி தா ; நி த பா த ப ப ம
மா தா தே வி த்வம்
ஸா ; ரீ ஸா ரீ ; ; ; ரீ மா பா த ஸ் பா ; பா, த
ஸா ஸு தே வ
மா ; ; த ப ப ப ம க கா ; ம கா ம பா, நி த ப ப ம மா ;
ஜா த ஸ்ஸோ ஹம்
மா, ப கா ; கா மா பா ; பா ; பா த நி தா, ·ரி ஸர் பா ;
ரே க ல க்ஷ்யம்

த்ருதம்

மா பா, த தா, ·ரி ஸ்ா த பா ம கா ரீ ரீ;
ம ஸி ப
ப ம கா கா ம ரி ரீ ஸா ரீ ரீ
பி
; நி த பா ; தா, ; ; ஸ்
ஜ ந நீ
மா ; கா ம க கா, ம ரீ ரீ ஸா
த யா

த்ருதம்

ம க க ரி ரி க ரீ கா ஸா
க வாந்
ம கா ஸ ரீ, க ரீ, ஸ ஸா ;
தா மே
த ஸ்ா, நீ தா ப தா நி த தா பா
யு வ யோ
ரீ ரீ, க ரீ ஸா ஸா ; ; ;
யா

மத்யம கால நடை

தா நீ த ப தா ; ; ப த பா மா ; மா கா ஸா ரீ பா ப ம மா
த த்தோ யு ஷ்மத் ப ரி ஜ ந த யா
பா தா தா ·ரி ஸ் ; ; ஸ் த பா மா கா கா, ப ம க க ரி ரி ஸ ஸா ரீ;
கிம் தே பூ ய ப்ரி ய மி தி கி ல

; க ப மா கா ஸா ரீ மா கா
தே சி கை ர
மா பா தா ஸ்ா தா பா மா கா
ஸ்மே ர வ க்த்ரா.

மா பா நீ தா தா பா மா ;
ப்ய த ஸ்த்வம்
க ஸ ; ரீ ; ; மா பா தா
வி பா ஸி

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; தா பா ; தா பா மா கா ரீ கா ; ஸா ; ஸ ரி
ஸா தா பா தா பா மா கா ரீ கா தத் த
பா தா ; மா பா தா ஸ்ா ; பா ; மா கா ரீ மா கா ஸா
பா தா மா பா தா ஸா பா மா கா ரீ மா கா ஸா

ரி ம ; ; பா ; ; மா ;
ஜம் பா மா
ரீ ; ; தா ; ; பா ;
ரீ தா பா

கா ஸா ; ரீ ; ஸா ரீ மா
கா தஜ் ஜம் ஸா ரீ மா
; மா கா ஸா ரீ மா பா தா
த க த தி கி ண தொம்.

कल्याणानामविकलनिधिः कापि कारुण्यसीमा
नित्यामोदा निगमवचसां मौलिमन्दारमाला ।
सम्पद्दिव्या मधुविजयिनः सन्निधत्तां सदा मे
सैषा देवी सकलभुवनप्रार्थनाकामधेनुः ॥

கல்யாண நாமவிகலநிதி: காபிகாருண்ய ஸீமா
நித்யாமோதா நிகமவசஸாம் மௌளிமந்தாரமாலா |
ஸம்பத்திவ்யா மதுவிஜயிந: ஸந்நிதத்தாம் ஸதாமே
ஸைஷாதேவீ ஸகலபுவநப்ரார்த்தநாகாமதேநு:|| (24)

ஆஹிரி ஆதி 2 களை

லகு	த்ருதம்	த்ருதம்
ஸ்ா ; ·ரி நீ ஸ்ா ; ; ; பா தா நீ நீ ·ரி நீ ஸர் ;	; ஸ்ா ஸ்ா நீ ஙி ஸ் ·ரி ஸ் நீ ஸ்ா	நீ ஸ ஙி நீ, த நீ, த தா பா
க ல்யா ணா நாம்	அ வி க	ல ஙி தி
பா தா நீ நீ ஸ்ர் ; ·ரி நீ நீ, ஙி ஸ் நீ, த நீ, த தா பா	; ப ம பா ; பா, த த பா ம	மா, ப ம க ரீ ரீ ஸா ரீ ;
கா பி கா	ரு	ண்ய ஸீ மா
ஸா ரீ கா மா ப த மா பா ; பா ; ; தா நீ, த ஙி தா,	பா பா ம ப த ப மா ; பா ;	மா ப ம மா கா கா : கா ;
ஙி த்யா மோ தா	ஙி க ம	வ ச ஸாம்
கா மா பா தா நீ ஙி ஸ் நீ, த நீ, த நீ, த தா ; பா ;	ம த பா ப த மா க ம ப ம க மா	பக மா க ரி ஸ ரீ ஸா நீ ஸா;
மௌ ளி ம ந்தா	ர	மா லா

மத்யம கால நடை

பா ; பா மா க மா க ரி ஸ ரீ ரீ ரீ ; கா மா ப த பா ;	பா தா நீ ஸ்·ா ; ·ரீ ஸ்ா நீ	நீ ஸ·ா நீ தா நீ தா பா;
ஸம் ப த் தி வ்யா மது வி ஜ யி ந	ஸ ந்நி த த்தாம்	ஸ தா மே
தா நீ ஸர் ·ரீ கர் ம்ர் க்ர் ·ரீ ஸ்ா ·ரி ஸ்ா ஙி நீ, த தா ப பா,	; மா பா தா நீ ஸ்ா நீ தா	நீ தா பா கா மா பா தா நீ
ஸை ஷா தே வி ஸ க ல பு வ ந	ப்ரா ர்த்த் நா	கா ம தே நு

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; ஸ்ா ·ரி நீ ஸர் நீ நீ ; தா நீ ; தா பா தா	பா ; ; ; ; ; பா தா	நீ நீ ஸ·ா, ஙி நீ, த தா பா
ஸா ஸா ரீ நீ ஸா நீ நீ தா தீம் த கி ட	தாம் பா தா	நீ நீ ஸா, ஙி நீ, த தா பா
மா கா ; ரீ ஸா ரீ கா மா பா தா பா மா பா கா ; மா	ரீ ; ; ரீ ஸா நீ ரீ நீ	ஸா; ரீ கா மா பா தா நீ
மா கா ரீ த க த ரி கி ட பா மா பா கா மா	ரீ த த கி தின்	தாம் த தி கி ண தொம்

(தொடரும்)

 Govt. Regd. No. 816

பரிசு ரூபாய்... 7000
முதற் பரிசு ரூ.......... 4000
மற்ற பரிசுகள் ரூ.... 3000

மொத்தம் நான்கு பரிசுகள். மூன்று தவறுள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 11—1—52

		விடைகள் 1	2
1	இப்படியாக வாழ வேண்டுமானல் தேவையான அளவு பணமும் இருக்க வேண்டாமா?	சௌக்கியம்	யோக்கியம்
2	ஒரு சட்டம் என்றிருந்தால் அதற்குப் பல இவைகளும் இருப்பதுண்டு	விளக்கம்	விலக்கம்
3	அற்ப விஷயங்களில் கூட தம்பதிகளுள் இது ஏற்படுகிறது என்ருல் அவர்களுள் ஒற்றுமை இல்லை என்றுதானே அர்த்தம்	விவாதம்	விரோதம்
4	நெருங்கிப் பழகும் தோறும் உறவும் இது ஆதலும் உண்டு	கெடுதல்	கூடுதல்
5	குற்றவாளி யாரரயிருந்தாலும் தீர்ப்பளிக்கும் விஷயத்தில் நியாயாதிபதியின் மனம் இது அடையலாமா?	இரக்கம்	தயக்கம்
6	சில வீட்டுப் பெண்கள் கணவனுக்குத் தெரியாமல் சிறு துகைகளை இது செய்து வைப்பதுண்டு	சேமித்தல்	மறைத்தல்
7	பெரிய இடத்துக் கலியாணமென்ருல் பலநாள் முன்தொட்டே இது இருக்கக் கூடும் ஒரு சிலருக்கு	அழைப்பு	உழைப்பு
8	இப்படியான மனம் படைத்தவர்கள் மீது நமக்கு உள்ளன்பு ஏற்படுமா?	கபடம்	கடினம்
9	தன் கட்சியின் பலவீனத்தை மறைக்கவே சிலர்.........இட்டுப் பேசுவதுண்டு	சத்தம்	சபதம்
10	.........யாக எழுதுபவர்களுடைய கட்டுரைகள் என்ருல் சாதாரணமாக தள்ள மாட்டார்கள் பத்திரிகையாசிரியர்கள்	வாடிக்கை	வேடிக்கை
11	மரனம் மனச்சாட்சி யாவும் உதறிவிட்டு சிலர் இது செய்ய முற்படுவது பசியின் கொடுமையாலேயேயாகும் (காத்தல்.திருடல்)	இரத்தல்	கரத்தல்
12	சம்பளம் போதாவிட்டால் வேலைக்காரர்கள் எஜமானிடம் இப்படியாகக் கேட்பதுண்டு	தஞ்சம்	கெஞ்சல்
13	நாம் ஒருவருக்காக பாடுபட்டும் அவருக்கு இது இல்லை என்ருல் மிக்க வருத்தமுண்டாகும் நமக்கு	நன்றி	நன்மை

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்ப வேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை காவேரி தை இதழில் வெளிருவம். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :- { **மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி** "ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 21-ன் சரியான விடை:—

(1) புலமை (2) அரட்டை (3) சுவர் (4) கடுமை (5) பழையது (6) ஆவேசம் (7) பூசல் (8) சீக்கிரம் (9) உறுதி (10) குருடன் (11) மறைவு (12) கோபம் (13) விவாகம். 2 1 1 1 2 1 2 1 2 1 2 1 1

போட்டி—20-ன் பரிசு விவரம்

முதற் பரிசு தலைக்கு ரூ. 212—8—0 வீதமும், இரண்டாவது பரிசு தலைக்கு ரூ. 30—0—0 வீதமும், மூன்ருவது பரிசு தலைக்கு ரூ. 3—0—0 வீதமும், நான்காவது பரிசு தலைக்கு ரூ. 1—0—0 வீதமும் பிரித்து வழங்கப்பட்டன. பரிசுத் துகைகள் 26, 27 & 28—11—51 தேதிகளில் அனுப்பப்பட்டன. மற்ற விவரங்கள் வரலக்ஷ்மி கிராஸ் வர்ட்ஸ் 22 ல் பார்க்கவும். தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள், இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.

விஞ்ஞானமும் முன்னோர் — — வழக்கங்களும்

கே. ஆர். ராமஸாமி

தாமிரம்

தற்கால நாகரிகம் எவர்சில்வர் நாகரிகம். சமையல் செய்வதற்கும் தண்ணீர் அருந்துவதற்கும், ஏன், எதற்குமே எவர்சில்வர் பாத்திரங்களே முழங்குகின்றன. நம் முன்னோர்கள் பெரும்பாலும், ஆற்றங்கரைகளிலிருந்தோ அல்லது கிணறுகளிலிருந்தோ குடிதண்ணீரைக் கொண்டுவருவதற்கும், அத்தண்ணீரைத்தேக்கி வைப்பதற்கும் சந்தியாவந்தனம் முதலிய பூஜைகளைச் செய்வதற்கும் எவ்விதப் பாத்திரத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள்? தாமிரத்தினால் செய்த தோண்டியைப் பளபளவென்று தேய்த்து, அதில் தண்ணீர் கொண்டுவருவார்கள். தண்ணீர் பருகுவதற்கும், பளபளவென்று மின்னும் தாமிரப் பாத்திரந்தான்.

ஏசுகிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு எழுதிய "ஓஷத ஸங்ஷித்" என்ற நூலில் 'தண்ணீரைத் தாமிரப் பாத்திரத்தில் வைப்பதும், சூரிய வெப்பத்தில் வைப்பதும், கரிமூலம் வடிகட்டுவதும் நல்லது' என்று எழுதி இருப்பதை 1905ஆம் வருஷம் பிரான்ஸிஸ் ஈவிலையின் ப்ளேஸ் (Francis Evilyn Place) எடுத்துக் காண்பித்தார். தாமிரத்திற்கு உன்னதமான சக்தி இருக்கிறது. பளபளவென்று சுத்தமாகவிருக்கும் தாமிரப்பாத்திரத்தில் வைக்கப்பட்ட தண்ணீருக்கு கிருமிநாசினி குணம் (Bactericidal effect) ஏற்படுகிறது. அதாவது காலரா, டைபாய்ட் முதலிய கொடிய வியாதிகளை விளைவிக்கக் கூடிய கிருமிகளைக் கொன்றுவிடும் சக்தி ஏற்படுகிறது. இந்தக் குணம் தாமிரத்திற்கு இருக்கும்பொழுது நம் முன்னோர்களும், ரிஷிகளும் அப்பாத்திரத்தையே தங்களுடைய கமண்டலமாக உபயேயோகித்தது நியாயமல்லவா?

ஸ்ரீ வைஷ்ணவர்கள் இல்லத்தில் தண்ணீர் கேட்போமாகில் பெரும்பாலோர்கள் வெள்ளிக் கோப்பைகளில் கொடுப்பார்கள். பாத்திரம் தீட்டாகிவிடும். வெள்ளிப் பாத்திரமாகில் சுலபமாகச் சுத்தி செய்துவிடலாமென்றுசொல்வதுண்டு. மற்றவர்கள் இதைப் பரிகசிப்பதுமுண்டு. தாமிரப் பாத்திரத்தைப் போல் வெள்ளிக்கும் கிருமிநாசினி குணம் இருக்கிறது. தவறுதலாகத் தண்ணீரோடு ஏதாகிலும் கிருமியின் சேர்க்கை (Infection) ஏற்பட்டிருக்குமானால் தண்ணீரைக் குடிப்பதற்குள் அக்கிருமிகள் வெள்ளியினால் கொல்லப்படும் என்ற சிலாக்கியமான எண்ணமல்லவா? இது தெரிந்தால் வெள்ளிப் பாத்திரத்தை உபயோகப்படுத்தும் ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பரிகசிப்போமா?

கங்கை ஜலம்

கங்கை, சிந்து முதலிய நதிகளை நம் நாட்டில் தெய்வீகமாகக்கொண்டாடி வருகிறோம். முன்னோர்கள் இந்நதிகளைப் புகழ்ந்து துதித்திருக்கிறார்கள். இவைகளில் நாம் ஸ்நானம் செய்யவேண்டுமென்றும், இத்தீர்த்தங்களைப் பருக வேண்டுமென்றும் விதித்திருக்கிறார்கள். தெய்வீகத்தன்மை ஒருபுறமிருக்கட்டும். மலையடிவாரங்களிலிருந்து வருவதால் குளிர்ச்சியும், அநேக உலோகப் பொருள்கள் கூடிய இத்தண்ணீரில் செய்யும் ஸ்நானத்தின் சுகமும் ஒருபுறமிருக்கட்டும். இதைக் காட்டிலும் இத்தண்ணீருக்கு ஓர் அற்புதமான தன்மையிருக்கிறது. அநேக சாக்கடைகள் இந்நதியில் விழுகின்றன. காலரா முதலிய கொடிய வியாதிகளில் இறந்தவர்களின் பிணங்களும் இதில் கிடத்தப்படுகின்றன. அப்படியிருந்தும் கங்கைத் தண்ணீர் காலராவை உண்டுபண்ணுவதில்லை. ஏன்? இது மூட நம்பிக்கையா? விஞ்ஞானிகள் இதைப் பரிசோதனை செய்திருக்கிறார்கள். கங்கைத் தண்ணீரில் காலரா கிருமிகள் மூன்று அல்லது ஐந்து மணி நேரத்தில் கொல்லப்படுகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அற்புதமான

கிருமிநாசினி குணம் எதனால் என்பதைப்பிற்பாடு கவனிப்போம். இந்த ஒரு பெரிய சக்தி இஞ்சியில் இருக்கும்பொழுது தெய்வீகமென்று கொண்டாடுவதில் நியாயமில்லையா?

மாட்டுச்சாணி

பழைய ஆசார வழக்கங்கள் இருக்கும் நம் வீடுகளில் சாப்பிட்ட இடங்களைச்சுத்தம் செய்வதற்கும், வீட்டைச் சுத்தம் செய்வதற்கும் பசுவின் சாணியை உபயோகிக்கிறோம். நவநாகரிகத்தில் பறந்து கொண்டிருப்பவர்கள் இதைக் கண்டனமும் ஏளனமும் செய்வார்கள். சாணியால் மெழுகினால் துர்நாற்றம் உடனே போய்விடுகிறது, எண்ணெய்ப்பிசுக்கும் போய்விடும். மேலும் புதுச் சாணியில் கிருமிநாசினி சுபாவம் இருக்கிறதென்று கருதப்படுகிறது. ஆனால் இந்தக்குணம கொஞ்ச நேரமிருக்குமேயல்லாது நீடித்திருக்காது. இக்கிருமிநாசினி குணம் எதனால் என்பதையும் பிற்பாடு கவனிப்போம். தற்கால நாகரிகக்காரர்கள் பிணயில் முதலிய நச்சுக்காற்றையகற்றும் மருந்து (Disinfectants) இருக்கும்பொழுது சாணிக்கு என்ன தேவை என்பார்கள். நம தேசம் ஏழ்மை மிக்கது. எவ்வளவு குடும்பங்களில் பிணயில் வாங்க முடியும்? மேலும் எனக்குத்தெரிந்தமட்டில் லாபத்தில் குறிகொண்ட வியாபாரிகள் குணமற்ற பிணயில்களை உண்டுபண்ணுகிறார்கள். மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதுபோல் பிரயோஜனமற்ற பிணயில்களை நம்புவதைக்காட்டிலும் செலவற்ற புதிய பசுவின் சாணத்தை நம்புவதில் நியாயமில்லையா?

மோர்

நமது முன்னோர்கள் மோரிற்குத் தோஷமில்லை யென்பார்கள். மோரை யாரிடமிருந்தாலும் பருகலாம், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாமென்பார்கள். இந்நாட்களில்கூட அந்நியர் தண்ணீர் குடிப்பதற்குக் கேட்டால் மோரைக்கொடுப்பார்கள் அலலது தண்ணீரில் கொஞ்சம் மோரைவிட்டுக் கொடுப்பார்கள். பாட்டிமார்கள் மோரைவிட்டால் குடி தண்ணீர் தோஷப்படாது, தீட்டுப்படாது என்பார்கள். மோரிலிருக்கும் காடி (Acid) காலரா முதலிய கிருமிகளைச்சில நிமிஷங்களிலேயே கொன்றுவிடுகிறது. புளிக்கப் புளிக்கக் கிருமிகள் சீக்கிரம் கொல்லப்படும். கண்ட இடங்களில் தாகத்திற்காக தண்ணீரைக் குடிப்பதைக்காட்டிலும் மோரைத் தைரியமாகக் குடிக்கலாம். எனவேதான் மோரிற்கு தோஷமில்லை என்பது.

மாதவிடாய் ஸ்திரீகள்

நம் வீடுகளில் மாதவிடாயான ஸ்திரீகளை மூன்று தினங்கள் தனிமையாக இருக்க வைக்கிறோம். துளசி முதலிய செடிகளின் அருகில் போகக்கூடாது, அப்படிப்போனால் செடி வாடிவிடுமென்கிறோம். இது முழுதும் மூட நம்பிக்கையா? இதில் கொஞ்சம் ஆதாரமிருக்கின்றது என்று பரிசீலனைகள் காணபிக்கின்றன. 1929ஆம் ஆண்டில் கிறிஸ்டியன்ஸன் (Christiansen) என்ற விஞ்ஞானி மாதவிடாயின் இரத்தம் சிறிய தாவரவர்க்கத்தைச்சேர்ந்த யீஸ்ட் (Yeast) உயிரை, குவார்ட்ஸ்கவர்கிளாஸினால் (Quartz cover glass) தடுக்கப்பட்டிருந்தும் கொன்று விட்டது என்பதை நிரூபித்தார். 1939ஆம் வருஷத்தில் ரான் (Rahn) பார்னஸ் (Barnes) என்பவர்கள் ஒரு ஸ்திரீயினால் பத்து அல்லது பதினைந்து தினங்கள் வரை யீஸ்டை (Yeast) வளரச் செய்ய முடியவில்லையென்றார்கள். இந்த ஸ்திரியின்விரல் நுனிகளிலிருந்து கிளம்பிய சில வீசல்கள் (Radiations) குவார்ட்ஸ் கண்ணாடியினால் தடுக்கப்பட்ட போதும்கூட யீஸ்ட் கொல்லப்பட்டது என்பதைக் கண்டார்கள். இது மைடோஜெனிடிக் ரேஸ் (Mitogenitic rays) என்ற கதிர்களினால் ஏற்பட்டது. நம் முன்னோர்கள் மாதவிடாயில் பெண்மணிகளை ஒதுக்கிவைக்க வேண்டும் என்று கூறியுள்ளது எவ்வளவு நியாயம் பாருங்கள்.

கரத்தில் அக்னி

வலது கரத்தில் அக்னியிருக்கிறதென்று கூறுவதுண்டு. சமீபத்தில் பிளவு படாத நம் சருமத்திற்கு அநேக கிருமிகளை வெகுசீக்கிரத்தில் கொன்றுவிடும் சக்தியிருக்கிறதென்று நிரூபித்திருக்கிறார்கள். 1933ஆம் வருஷம் கார்ன்பிலீட் (Cornbleet) என்பவர் இவ்விஷயத்தைப்பற்றி அநேக பரிசீலனைகள் செய்திருக்கிறார். சர்க்கரையைச் சாப்பிட்ட உடனேயும், தண்ணீர் பருகின உடனேயும் இக்குணம் அதிகரிக்கிறதென்றும் சொல்கிறார். இந்தச்சக்தி நம் சருமத்திற்கு இருக்கும்பொழுது நாம் நம் கையினால் சாப்பிடுவது நல்லதா அல்லது தற்காலிக நாகரிகமாக ஸ்பூனினால் சாப்பிடுவது நல்லதா என்று நம் முன்னோர்கள் வலது கையில் அக்னியிருக்கிறது என்று சிலேடையாக உரைத்ததில் ஏன் நியாயமில்லை. நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

எனது மலாய்நாட்டுப் பிரயாணம்–3

ரங்க ராமானுஜ அய்யங்கார்

கொள்ளைக்காரர்கள்

"சென்ற வாரம் நான் உங்களுக்கு எழுதிய கடிதம் வியப்பை உண்டுபண்ணி இருக்கும். உண்மையில் அப்பொழுது திடீரென்று நிலைமைமோசமாகி, எந்த நிமிஷம், எங்கு, என்ன நடக்குமோ என்ற பயம் எங்களிடையில் பரவியிருந்தது. இப்பொழுது அந்தநிலை மாறிச் சிறிது நடமாடுகிறோம்" என்றும், "இந்தியச் செய்திப் பத்திரிகைகளில் உண்மையான விபரங்கள் வெளியாகின்றனவோ என்று தெரியவில்லை. இவ்விடத்திய நிலை கவலைக்கிடந்தான்" என்றும், பலவிதமாக, மலாயா நண்பர்களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கொள்ளையர்கள் எவர்? அவர்களுடைய வாசஸ்தானங்கள் எவை? தலைவர்கள் எவர்? அவர்களுடைய நோக்கங்கள் எவை? இவைபோன்ற கேள்விகளுக்குப் பதில் காண்பது கடினம். "அந்த நாட்டு அரசாங்கத்தாருக்குத்தான் இவை ஓயாத தலைவலியாக இருக்கின்றனவே. இந்தியாவில் உள்ள நமக்கு ஏன் கவலை?" என்னும் வாதம் அர்த்தமற்றது. குறிப்பிட்ட சூழ்நிலையில் மனிதர் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்னும் அறிவு எத்தேசத்தவருக்கும் அவசியமே. மேலும், இருபதாவது நூற்றாண்டில், நமது நாட்டை அடுத்ததும், லட்சக்கணக்கான இந்தியர் வசித்து வருவதுமான மலாயாவில் நடந்துவரும் மும்முரமான துராக்கிரக அமளி நமக்கு ஒரு எச்சரிக்கையும் படிப்பினையும் அன்றோ? "இந்த நாட்டு வளத்தையும் வாழ்விற்குரிய வசதிகளையும் புகழ்ந்து பேசுகிறீர்கள். ஆனால் இங்கே இருக்கும் எங்களுக்கு நித்திய கண்டமாகக் காலம் செல்லுகிறது" என்று ஒரு தமிழர் ஜோஹோர்பாரு என்னும் இடத்தில் சொன்னார். இதன் பொருட்டே இந்தப் பிரச்னையைக் கவனிப்பது அவசியமாயிற்று. கொள்ளையர்கள் ரஷ்யாவின் இரகசிய உதவி பெற்று வரும் கம்யுனிஸ்டுகள். அவர்கள் சீனா, வியட்நாம் முதலிய தேசங்கள் மலாயாவின்மீது படை எடுக்கும் என்று நம்பியிருக்கிறார்கள். அத்தருணம், பகிரங்கமாக வெளிப்பட்டு, ஆங்கிலேயரை நாட்டினின்று விரட்டி, கம்யுனிஸ்ட் அரசியலை ஏற்படுத்திவிடலாம் என்று எதிர்பார்க்கின்றனர். இது ஒரு சாராரின் முடிவு. கொள்ளையர்களில் பெரும்பாலோர் கம்யுனிஸ்டுகள் அல்ல. இரண்டாவது உலகப் பெரும்போர் நடந்தபொழுது, ஆங்கிலேயர், ஆயிரக் கணக்கான மலாய் வாசிகளுக்கு விரைவில் ஆயுதப் பயிற்சி அளித்துப் போருக்கு ஆயத்தமாக்கினார்கள். அந்தப் படையைச்சேர்ந்த பலர், சண்டையின் முடிவில், ஜப்பானியரின் ஆக்கிரமிப்புக் கொடுமையினால் வெகுண்டு, அவர்களை மறைவிலிருந்து தாக்கி வந்தனர். இந்தக் "கொரில்லாப்" படையினர், சண்டைக்குப்பின் வேலை இழந்த போர் வீரர்களையும் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய உதர போஷணத்

மலாக்கா ஜனரல் ஆஸ்பத்திரி



ஜப்பானியர்களால் அழிக்கப்பட்ட சைனர்களின் சமாதி

திற்காகக் கொள்ளை அடித்தும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கொலைபுரிந்தும் வருகிறார்கள். இது வேறு சிலரின் கருத்து. இதன் உண்மை எப்படியாயினும் சரி. அவர்கள், காடுகள் அடர்ந்த மலைகளில், பெண்டுபிள்ளைகளுடன் பெருங் கூட்டங்களாகப் பதுங்கி இருக்கிறார்கள். திறமை வாய்ந்த ஒற்றர் படைகளின் மூலம் நாட்டு விருத்தாந்தம் அனைத்தையும் நுட்பமாக அறிந்து கொள்ளுகிறார்கள். தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், ஆயுதங்கள்முதலியவைகளையும் வெளியிலிருந்து பெறுகிறார்கள். அவர்கள் ஆங்கிலேயர்களான தோட்ட முதலாளிகள், பொலீஸ் அதிகாரிகள், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் பேராசையுடன் செல்வம் திரட்டும் சீனப் பெரு முதலாளிகள், முதலிய இவர்களைத் துன்புறுத்துகிறார்கள். நாட்டுப் பெரிய சாலைகளில் அவர்கள் அறியாமல் எவரும் போகமுடியாது. அப்படி இருந்தும் எங்களைப் போன்றவர்கள் மோட்டார் வண்டிகளில் இராப்பகல் இடம்விட்டு இடம் போய்க்கொண்டுதான் இருந்தனர். அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேரிட்டதில்லை. இதன் மர்மம் என்ன?

சீனத் தலைவர் மா-த்ஸி-துங் ஸ்டாலினுக்குக் குடை தாங்குபவர் அல்ல. மேனாட்டு ராஜதந்திரிகளின் சூழ்ச்சியைக் கண்டு சந்தேகப்பட்டு, அவர் ரஷ்யாவின் நட்பை மதித்து நடந்து வருகிறார். உலகப்போர் நடந்தபொழுது, ஆங்கிலேயர் மலாயாவிலிருந்து ஓட்டம் பிடித்தனர். ஆனால், அமெரிக்காவின் அணுக் குண்டினால் ஜப்பான் வீழ்ந்தபொழுது, அவர்கள் ஓடோடியும் வந்து மலாயாவின்மீது தங்கள் ஆட்சியை மீண்டும் சுமத்தினார்கள். இதை அந்த நாட்டினர் முற்றிலும் வெறுத்தார்கள். ஆனால் உருசிகண்ட பூனை அல்லவா? சீர்திருத்தம், உரிமைகளை வழங்குதல், தேசிய உணர்ச்சியை மதித்து நடத்துதல் போன்ற ஆசைமொழிகளும் வஞ்சகச் சூழ்ச்சிகளும் தாண்டவமாடின. இதையெல்லாம் நன்றாகக் கண்டுகொண்ட போர்வீரர்கள், பயங்கரக் கிளர்ச்சியின் மூலம் நாட்டைத் தீராதகுழப்பத்திற்குட்படுத்தி, இறுதியில், நாட்டு மக்களின் செல்வாக்குப்பெற்ற அரசியலை ஏற்படுத்தவேண்டும் என்பதை ஏக லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். இதுவே, நான் மலாயா நாட்டில் சந்தித்துப் பேசிய பல அறிவாளிகளின் உறுதியான நம்பிக்கை. இது ஆதாரமற்றது அல்ல என்பதற்குச் சான்றாக, சீனத் தலைவர் மா-த்ஸி-துங் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றையும், ஆங்கிலேய அரசாங்கத்தினிடம் சலுகை பெற்ற ஒரு சீனக் கனவானுக்கு, கலகக்காரர்களின் தலைவர் ஒருவர் ரகசியமாக எழுதிய கடிதம் ஒன்றையும், நேரில் படித்துப் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

சுருங்கச் சொல்லின், மலாயாவில், காலப்போக்கைக் கவனிக்க மறுத்து, தீக்கோழியின் மனப்பான்மையை மேற்கொண்டிருக்கும் ஆங்கில அதிகாரவர்க்கம், கோரமான அடக்குமுறையின்மூலம் நசுக்கிவிட முயற்சிக்கும் கூட்டத்தினர் சுமார் ஒரு லட்சம் பெயர்கள்தான். அவர்களில் தொண்ணூற்றைந்து சதவிகிதம் சீனர்கள். ஆனால், அவர்களை அழிக்க அரசாங்கம் திரட்டியிருக்கும் படை, ஆங்கிலேயரும், மலாய்க்காரரும், கூர்க்கருமாக, ஏறக்குறைய ஒன்றரை லட்சம். இதிலிருந்தே இருதிறத்தாரின் பலத்தை ஊகிக்கலாம். மேலும், காடும், மலையும், ஓயாத மழையினால் ஏற்படும் நிலத்தின் சதுசதுப்பும், நாட்டிலுள்ள பலரின் ரகசியஉதவியும் கலகக்காரர்களுக்கு இருந்துவரும் அனுகூலங்கள். ஆகையினால் நிலைமை கட்டுப்படுவதாகத் தோன்றவில்லை. யுத்த காலத்தில் அளவற்ற அக்கிரமங்களைச் செய்துஒழிந்த ஜப்பானியரிடம் மலாயா நாட்டவருக்கு என்றும் மறையாத வெறுப்பும் பகையும் இருப்பது இயற்கை. ஆனால், அமைதியைக் காத்து, அரசாங்கம்கைநழுவாமல் பார்த்துக்கொள்ளுவதில் நாட்டமுள்ள ஆங்கிலேயரை இப்படி மூர்க்கச் சதியின்மூலம் ஏன் தாக்குகிறார்கள்? புதிதாக ஆங்கில நாட்டில் ஏற்பட்ட கன்ஸர்வெடிவ் மந்திரி சபையின் அங்கத்தினரான ஆலிவர் லிட்ல்டன், நிலைமையை நேரில் காணச் சென்ற வாரம் சிங்கப்பூரில் வந்திறங்கியபொழுது, அவருடைய பாதுகாப்புக்காகச் செய்திருந்த முஸ்தீப்பு ஒன்றே அரசாங்கத்தின் மதிமயக்கத்திற்குப் போதிய விளக்கமாகும். இந்தப் பெரிய பிரச்னைக்குத் தெளிவு காண வேறு வழியுண்டு. "ஆசியாவின் கண்விழிப்பு" என்ற பேரொலியின் எதிரொலிதானே இது என்று எண்ணுவது முற்றிலும் பிழை ஆகாது.

பலாத்காரம், மிருகபலம் என்பவை இருதலைக் கொள்ளியைப்போன்றவை. அவை, முன்னும் பின்னும் தாக்கும் கொடிய அரக்கத் தன்மை உடையன. அறிவும் அருளும் மேலோங்கினால் அறம் தலைதூக்கும். அறத்தை அடிப்படையாகக் கொண்ட நோக்கில் உண்மை துலங்கும். அந்த நிலையில் மாத்திரமே இந்தப் பிணக்குகள் தீரும். இங்கிதம் கெட்டு, காலம் தவறி, காரியமும் மிஞ்சிப்போன பிறகு, நிலைமையைச் சமாளிக்க முயற்சிப்பது சிலருக்கு வழக்கமல்லவா?

மலாக்கா

இந்தோனீஷிய மக்கள் இந்தியர்களை, "பம்பாய்க்காரர்" என்று சொல்லிச் சுட்டிக்

காட்டுகிறார்கள். அதேவிதமாக, ஐரோப்பாவில் மலாயாவை "மலாக்கா" என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. முன்னொருகாலத்தில் அந்தப் பட்டணம் தலைசிறந்து விளங்கினதுதான். அதன் காரணம் பதினைந்தாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், பரமேசுவரர் என்ற ஒரு இந்து அரசர் இந்தப் பட்டணத்தை ஏற்படுத்தினார். அடுத்த நூற்றாண்டில், போர்த்துகீசியர், கொழும்பையும் கோவாவையும் பிடித்துக்கொண்டு, 1511 ஆம் ஆண்டில் இந்தத் துறைமுகப் பட்டணத்தைக் கொடிய போரின் முடிவில் வசப்படுத்தினார்கள். பிறகு, இதனை டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் ஒருவர்பின் ஒருவராகக் கைப்பற்றலாயினர். கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக ஜப்பானியர் வசமிருந்த 44 மாதங்கள் தவிர, மலாக்கா ஆங்கில ஆட்சியில் இருந்துவருகிறது. சுமார் $4\frac{1}{4}$ சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந்தப் பட்டணத்தில் ஏறக்குறைய 70,000 பெயர்கள் வசிக்கிறார்கள். மலாயாவின் மற்றப் பட்டணங்களைப்போலவே இதுவும் நேர்த்தியாகவும் தூய்மையுடனும் விளங்குகிறது. ஐரோப்பியர் இங்கு நானூறு வருஷங்களுக்குமேல் இருந்திருக்கிறார்கள். ஆகையால், இவ்விடத்தில். கிறிஸ்தவக் கோயில்களும் கல்லறைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

குவான்-யி-இன் (அன்னபூரணியின் வடிவம்!)

ஓர் மலேயப் பெண்

கத்தோலிக்க மதகுருவான இக்னேஷஸ் லாயொலா இயேசுவின் சங்கத்தை 1534இல் ஸ்தாபித்தார். அந்தச் சங்கத்தின் ஆதி குருமார் ஏழு பேர். அவர்களில் ஒருவர் பூஜ்ய பிரான்ஸிஸ் ஸேவியர். கிறிஸ்தவ மதத்தைக் கீழ்நாடுகளில் பரப்பும்படி அவரைப், போப்பாண்டவர் ஆசி தந்து அனுப்பினார். அவர், கோவா இலங்கை, அம்பாயினா, மலாக்கா, ஜப்பான், சிங்கப்பூர், சீனா, ஆகிய இடங்களில் மதப்பிரசாரம் செய்து, பதினாயிரம் பெயர்களுக்குமேல் தம் மதத்தில் சேர்த்தார். அவர் சீனாவில், கான்டன் நகருக்கு அருகில், 1556இல் இறந்து, அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். பின்னர், அவருடைய சவம் மலாக்காவில் அடக்கம் செய்யப்பட்டு, அதன்பின், கோவாவுக்கு எடுத்து வரப்பட்டது. அதைக் கத்தோலிக்கர் மருந்திட்டு, இன்னும் பாதுகாத்து வருகிறார்கள். இந்துக்களுடைய மகாமகத்தைப் போல, பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை, அதைத் திறந்துவைத்து, திரளான மக்கள் தரிசனம் செய்து ஆத்துமசாந்தி பெறுகிறார்கள் மலாக்காவில் உள்ள அந்தக் கல்லறை இப்பொழுது காலியாக இருக்கிறது. அதன் அருகில், அதன் வரலாற்றைத் தெரிவிக்கும் ஓர் அழகிய சிலா சாஸனம் சிந்தனையை எழுப்பும் வகையில் அமைந்திருக்கிறது,

இந்த ஊரில், ஒரு தெருவழியே சென்றுகொண்டிருந்தேன். ஒரு பெரிய வீட்டின் முன், நூற்றுக் கணக்கான ஆடைகள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தன. நான் என்னுடன் வந்துகொண்டிருந்த நண்பரை நோக்கி, "இந்தக் கட்டிடம் ஒரு சலவைச் சாலையா, அல்லது ஒரு [illegible]டலா?" என்று கேட்டேன், நண்பர், "இரண்[illegible]ல. இது ஒரு மலாய்க் கனவானுடைய இருப்பிடம். இந்த ஆடைகள் அவருடைய குடும்[illegible]டையவை," என்று சொல்லி, மலா[illegible]க்காரரிற் பெரும்பாலோர், கட்டுப்பாடின்றிப் பல மா[illegible] மணந்து, பெரிய குடும்பத்தை வளர்த்து, இதன்மூலம் பொருளாதாரம் கெட்டு, [illegible]ழ்வு சீ[illegible] போகும் விருத்தாந்தத்தை வருததத்துடன் எடுத்துச் சொன்னார். நமது முன்னோர்கள், [illegible]யத்தை நீடூழி வாழ்விக்கக் கருதி, [illegible]



செங்-ஹூன்-டிங் என்னும் சைனக் கோயில்

தீர்க்க தரிசனத்துடன், இல்வாழ்க்கைக்கு முன்னும் பின்னும் வேறுபட்ட ஆசிரமங்களை அமைத்து, ஒழுங்குக்கு உட்பட்ட மண வாழ்க்கையே நல்லறமெனப் போதித்து, மறுமைக்கு அதை ஒரு சாதனமாக்கின பெருமையை அப்பொழுது நினைத்தேன். தங்கு தடையில்லாக் காதல், கர்ப்பத் தடை, பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம், திட்டம் வகுத்த குடும்ப வளர்ச்சி, விவாக ரத்து—இவ்விதம் எண்ணிறந்த விபரீதக் கருத்துக்களும் பழக்கங்களும் நவநாகரிகத்தின் லட்சணங்களாக இருக்கலாம். ஆனால் அவை உன்னத லட்சியங்களை அழித்து, சிற்றின்பத்தை வளர்த்து, மதிமயக்கத்தை உண்டுபண்ணி, இந்திய சமுதாயத்தின் வேரூன்றிய இனவாற்றலையும் (Race Genius) சொரூபத்தையும் நிலைகுலைக்கும் சாத்தானின் சூழ்ச்சிகளாவனவே.

99329

மலாயாவின் ஆதிக்கோயில்

மலாயாவிலுள்ள சீனர்களின் அன்றாட வாழ்க்கையைக் கவனித்தால் அவர்களுக்கும் இந்துக்களுக்கும் உள்ள சில வேற்றுமைகள் நன்றாகத் தெரியும். அவைகளில் முக்கியமானது அவர்கள் பின்பற்றும் புத்தமதத்தின் சின்னங்களே [illegible] கொள்கைகளில் [illegible] பண்படைந்த தத்துவ உணர்ச்சியின் பரிணாமமோ, ஆத்தும விசாரமோ அவர்களிடம் சிறிதும் [illegible] ஒற்றுமையோ [illegible] உழைப்பது, பொருள் தேடுவது, ஓயாமல் உண் [illegible] பகட்டாக உடுப்பது, களிப்பு றக் களிப்பது-இவைகளில்தான் ஆடவரும் பெண்டிரும் தீவிரமான ஊக்கம் கொண்டுள்ளனர். ஆனால், இந்தநிலை சீனாவின் நீண்ட காலக் குழப்பத்தின் விளைவென்றும், நாளடைவில் மாறுமென்றும் நம்புவதற்கு ஒவ்வொரு இடத்திலுமுள்ள சீனக்கோயில்கள் இடந்தருகின்றன. இவைகளில் புராதனமானது மலாக்காவில் உள்ள செங்-ஹூ-டெங் என்ற தேவாலயம். "கார்முகில் வாழ் கருணை நிலையம்" என்பது அதன் பொருள்.

17ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், லி-குப் என்ற ஒரு சீனர் நாடு கடத்தப்பட்டார். அவர் மலாக்காவில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்த டச்சு அதிகாரிகள். அவருடைய திறமையைக் கண்டு. அவரை மலாக்காவில் உள்ள சீனர்களுக்குத் தலைவராக்கினார்கள். அவரே இந்தக் கோயிலை நிர்மாணம் செய்தவர். இது சுமார் 50,000 சதுர அடி விஸ்தீரணமுள்ளது. இதில் உள்ள முக்கிய பூஜா மூர்த்தியின் பெயர் குவான்-ஷி-இன். இதன் வடிவம் தென்னிந்தியச் சிற்ப முறையில் உள்ளது. இந்துக்கள் கடவுளின் சக்தியை அன்னை வடிவமாக்கி வணங்குகிறார்கள். சீனர்கள் இந்த மூர்த்தியை, "அன்பருக்கு அபயம் அளிக்கும் அன்னை பராசக்தி" என்று கொண்டாடுகிறார்கள். ஒரு மண்டபத்தில், லி-குப் பின் பெரிய உருவப்படமும், அவருக்குப் பின்வந்த தலைவர்களுடைய ஞாபகச் சின்னங்களும் இருக்கின்றன.

(தொடரும்)

பாதர் ஸேவியரின் சமாதி



Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.